திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS



பிரமதேவர் (தாரமங்கலம்)

மாலை 4] சுபகிருது வைகாசி-ஜூன் 1962 [மணி 9

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



வைத்தீசுவரன் கோயில் சந்நிதியிலுள்ள துவாரபாலகர்கள்

பொருளடக்கம்

1. தாரமங்கலம்
2. திருநாவுக்கரசு நாயனர்
3. மலைவையாவூர்
4. ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை
5. திருவண்ணமலைக் கல்வெட்டுப்பாடல்
6. சேலம் சுகவனேசர் கோயில்
7. நரசிம்மப்பெருமான்
8. குமரகிரி
9. தனியூர்
10. சிவஞானபோதம்

CONNEMARA PUBLIC LIBRARY
-4 JUN 1962
MADRAS

தாரமங்கலம்

ஊர்த்துவ தாண்டவர்

சித்தர் கல் யானைக்குக் கரும்பு கொடுத்தல்

இலிங்கோத்பவ மூர்த்தி



மாலை 4] சுபகிருது வைகாசி - ஜூன் 1962 [மணி 9

தாரமங்கலம் கைலாசநாதர்கோயில்

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயி லெழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்
கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே
—திருநாவுக்கரசர்.

முற்காலத்தில் சிற்பிகள் கோயில்கட்ட ஒப்பந்தம் செய்துகொள்ளத் தாம்பூலம் வாங்கும்போது "பேரூர், பெரியபாளையம், தாரமங்கலம், தாடிக்கொம்பு இந்த இடங்களிலுள்ள சிற்பங்கள் நீங்கலாக" என்று சொல்லி வாங்கும் வழக்கம் இருந்ததாம். இதனால் பெறப்படுகிற தென்னவென்றால் இந்த நான்கு இடங்களிலுள்ள சிற்பங்கள் மிகவும் அற்புதமான வேலைத்திறமுடையவை அவைகளைப்போல் செய்வது கடினம் என்பதே. இக்கட்டுரையில் எடுத்துக் கூறப் புகுவது தாரமங்கலம் சிவன்கோயிலைப்பற்றியதாகும். சேலம் மாவட்டத்தில் தலைசிறந்த கோயிலும் இதுவே.

ஊர்ப்பெயர்க் காரணம்

தாரமங்கலம் சேலம் மாவட்டத்தில் ஓமலூர்ப் பகுதியிலிருக்கிறது. சேலம் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 14 கல் தொலைவு; ஓமலூர் நிலையத்திலிருந்து 6 கல் தூரம். சேலம் முதலிய பல பக்கங்களிலிருந்து பஸ்கள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன. தாரமங்கலம் என்ற பெயர் ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. (1) சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் இங்கு திருமணம் நடந்ததென்றும், திருமால் தாரை வார்த்துக் கொடுத்து மங்கல வினை நடத்தியதால் தாரமங்கலம் என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர். கைலாசநாதர் சந்நிதியின் அர்த்தமண்டப நுழைவாயில்மேல் பார்வதி, பரமசிவன், திருமால் தாரை வார்த்தல் சிற்பங்களாகக் காட்சியளிக்கின்றன. இதேபோல் இராஜகோபுரத்தின் முன்பக்கமும் சிற்பங்கள் உள்ளன. (2) இக்கோயிலிலுள்ள இறைவனைச் சந்திர சூரியர்கள் வந்து தொழுது போவதாகக் கூறப்படுகிறது. ஆண்டுதோறும் உத்தராயண தட்சணாயன புண்ணிய காலங்களில் மாலைக்காலத்தில் சூரியன் கதிர்களும் சந்திர ஒளியும் சிவலிங்கப்பெருமான்மேல் படுகின்றன. சந்திரனுக்கும், சூரியனுக்கும் தாரகாபதி, தாரகன் என்ற பெயர்கள் இருப்பதால் தாரமங்கலம் என்ற பெயர் உண்டாயிற்றென்பர். (3) சிவபக்தியிற் சிறந்த வாலியின் மனைவி தாரை என்பவள் பல கோயில்களைக் கட்டினாள். இந்தக் கோயிலையும் அவள் கட்டினதால் தாரமங்கலம் என்றபெயர் ஏற்பட்டதென்பர். (4) சிவபெருமான் பிச்சை ஏற்கவந்த தாருகவனம் என்ற இடத்தின்பெயர் தாரமங்கலம் என்றாயிற்றென்றும் கூறுவர்.

கோயில் வரலாறு

கோயில் ஏற்பட்டதன் வரலாற்றைச் சிறிது காண்போம். தாரமங்கலத்துக்குப் பக்கத்திலுள்ள அமரகுந்தியிருந்து கொண்டு கட்டிமுதலியார்கள் என்ற தலைவர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். அவர்களுடைய பசுக்கள் தாரகாவனமாயிருந்த இவ்விடத்தில் மேய்வது வழக்கம். ஒரு பசு பால் கொடாமல் இருப்பதைக் கண்டு மேய்ப்பவர்களை முதலியார் அடித்தார். இரவில் சிவ பெருமான் கனவில் தோன்றி, தாம் பூமியின் கீழ் சிவலிங்க ரூபமாக இருப்பதாதவும், அதற்காகவே ஒரு பசு நாள்தோறும் பால் சொரிந்ததாகவும், அதற்கு வடக்கில் புதையல் இருப்பதாகவும் கூறி மறைந்தார். மறுநாள் அந்தப் பசு சென்று பால் சொரிந்த இடத்தை அகழ்ந்து பார்க்க சிவலிங்கமூர்த்தி காணப்பட்டார். அதன் அருகிலிருந்த புதையலை எடுத்து கட்டிமுதலியார் கோயில் கட்டினார்.

கோயில் அமைப்பு

திருக்கோயில் மேற்குநோக்கிய சந்நிதி உடையது. கோயிலுக்கு முன்னால் உயர்ந்த தீபக்கம்பம் இருக்கிறது. மேற்குக் கோபுர வாயிலை ஐந்துநிலைக் கோபுரம் அணிசெய்கிறது. கோபுரவாயிற் கதவுகள் வேங்கை மரத்தினால் செய்யப் பெற்றவை; பலதிறப்பட்ட குமிழ்கள் உடையவை; அந்தக் கதவுகளில் திருமாலின் அவதாரங்கள், கிருஷ்ணன் லீலைகள், சிவபெருமான் திருவிளையாடல்கள் முதலியவற்றைச் சிற்பங்களாகச் செதுக்கப் பெற்றிருக்கின்றன. இராஜகோபுர வாயில் வெளிப்பிரகாரத்தைவிட சற்று உயரமாகவே இருக்கிறது. வாயிற்படிக் கருங்கல்லைப் பவளக்கல் என்று கூறுகின்றனர். சிவப்பாகவும் குளிர்ச்சியாகவும் இருக்கிறது. கோபுர வாயிலைக் கடந்து படிக்கட்டுகளில் இறங்கி உள்ளே செல்லவேண்டும். அவற்றின் இரு புறமும் குதிரைகளும் யானைகளும் இழுப்பது போல் அமைக்கப்பெற்றிருக்கிறது. (படம் பார்க்க) உயர்ந்த மதிற்சுவர்கள் கருங்கற்களால் கட்டப்பெற்றவை. 306 அடி, 134 அடி நீள அகலமுள்ளவை. மதிற் சுவர்களில் முதலைகள், மீன்கள், ஆமைகள் முதலிய நீர் வாழும் உயிர்களின் உருவங்கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன. கடல்சூழ்ந்த உலகம் என்பதை அவை காட்டி நிற்கும்போலும். கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. வெளிப்பிரகாரம் மூன்று பக்கங்களில் திருமாளப்பத்தி உள்ளது. கோபுர வாயிலின் உள்ளே வலது புறம் கிழக்கு பார்த்த சந்நிதியுடன் காசிலிங்கமூர்த்தி எழுந்தருளியுள்ளார்.

ஒன்பது கல்லாலான விநாயகர் கோயில்



கோயில் உள்தோற்றம்

அதையடுத்து மதிலையொட்டித் திருக் கல்யாணமண்டபம் இருக்கிறது. இடது பக்கம் சகஸ்ரலிங்கம் சந்நிதியுள்ளது. இதற்குப் பின்புறம் மதிலைச் சேர்ந்தாற்போல் பஞ்சலிங்கங்கள் உள்ளன. சந்நிதிக்கெதிரில் கொடிக்கம்பம், பலிபீடம், நந்திமண்டபம் முதலியவை இருக்கின்றன. நந்திமண்டப விமானம் மிகவும் அழகானது. அதற்குத் தென்புறம் பெரிய மேடைமேல் ஒன்பதே கருங்கற்களால் அமைக்கப்பெற்ற சித்தி விநாயகர் கோயில் இருக்கின்றது. (படம் காண்க). வெளிப்பிரகாரத்தில் கிழக்கிலும் தெற்கிலும் வாயில்கள் இருக்கின்றன. உள் பிரகாரத்திற்கு நுழையும் வாயிலின் இருபுறமும் திண்ணைபோன்ற பத்திமண்டபம் அழகிய யாளிகள் குதிரைகள் உடைய தூண்களுடன் காட்சியளிக்கின்றன. இந்தப் பத்தியின் வலதுபுறம் மகாகணபதி சந்நிதியிருக்கின்றது. இரண்டாவது வாயிற் கதவுகளும் வேங்கை மரத்தால் செய்யப்பெற்றன. அவைகளிலும் முருகன் சூரசம்மாரக் காட்சிச் சித்திரங்கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன. இரண்டாவது வாயிலைக் கடந்ததும் உள்ளே மகாமண்டபம், 20 தூண்கள் உடையது. நேரே மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவலிங்கமூர்த்தியே கைலாசநாதர். இந்த சந்நிதிக்கு வடக்கிலும் தெற்கிலும் கிழக்கு நோக்கி சிவகாமசுந்தரி முருகப்பெருமான் இவர்களுடைய சந்நிதிகள் உள்ளன. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தூண்கள் எல்லாவற்றிலும் அற்புத சிற்பவேலைப்பாடமைந்த திருவுருவங்கள் காணப்பெறுகின்றன. உட்பிரகாரம் தென்கிழக்கு மூலையில் படிக்கட்டுகளுடைய தீர்த்தக்கிணறு இருக்கிறது.

தீர்த்தங்கள், தலவிருட்சம்

இத்தலத்திற்கு நான்கு தீர்த்தங்கள் சொல்லப்படுகின்றன. மேற்சொன்ன படிக்கட்டு கிணற்றுக்கு பிரமதீர்த்தம் என்றுபெயர். கோயிலுக்கு வெளியில் கிழக்கே சிவகங்கை என்ற திருக்குளமும், நீராழி மண்டபத்துடன் தெப்போற்சவ குளமும் இருக்கின்றன. இரண்டு கல்தொலைவில் ஓடும் சரபங்கநதியும் இத்தல தீர்த்தமென்பர். இத்தல விருட்சம் வன்னி. கோயிலில் இரண்டுகால பூசை நாள்தோறும் நிகழ்கின்றன. தைப்பூசத்தைக் கடைசி நாளாகக்கொண்ட திருவிழா நடைபெறுகிறது. திருவாதிரை, திருக்கார்த்திகை முதலிய நாட்களிலும் விழாக்கள் உண்டு.

தல நூல்கள்

இத்தலத்திற்குத் தனி மான்மியமோ, புராணமோ எதுவும் இல்லை. F. J. ரிச்சேர்ட்ஸ் I. C. S. என்பவர் சேலம் மாவட்ட கெஜட்டியரில் இவ்வூரைப்பற்றியும் கோயிலைப்பற்றியும் விரிவாக ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இத்தல வரலாறென்று கைப்பிரதியாக தேவஸ்தானத்தார் வைத்திருக்கின்றனர்; இன்னும் அச்சேறவில்லை. இவ்வூர் திரு. K. S. கந்தசுவாமி யென்பார் இயற்றிய மங்கைத்தல சிற்ப கிளிக்கண்ணி என்ற சிறு செய்யுள் நூல் ஒன்று அச்சிட்டு வெளியிடப் பெற்றிருக்கின்றது. அதில் கோயிலில் காணப்படும் எல்லா சிற்பங்களைப்பற்றியும் கோவைப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது.

சிற்பச் சிறப்பு

சித்திவிநாயகர் கோயில்:—இது ஒன்பதே கருங்கற்களால் அமைக்கப் பெற்றது. (படம் காண்க.) இதைக் கட்டியதைப்பற்றி இருவேறு வரலாறுகள் கூறப்படுகின்றன. கோயிலுக்கு அடிப்படையிலிருந்து பெரிய மேடை எழுப்பப்பெற்றது. கல்தச்சர்கள் எல்லாம் கூடித் தலைமைச் சிற்பியிடம் நாங்கள் எல்லோரும் சேர்ந்துதானே கோயிலைக் கட்டமுடியும் என்று கர்வத்தோடு சொன்னார்களாம். அமைதியாகக் கேட்ட சிற்பி அவர்களுடைய ஆணவத்தை அடக்குவதற்காக ஒன்பது கற்களைக்கொண்டே இந்த விநாயகரின் சிறு கோயிலைக் கட்டி முடித்தாராம். மற்றொரு கதை என்னவெனின் கோயிலின் வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போது சிற்பியின் மகனான சிறுவன் ஒருவன் இந்த ஒன்பது கல் கோயிலைக் கட்டினானாம்.

குதிரை, யாளி மண்டபம்

இரண்டாவது வாயிலுக்கு முன்னால் இருப்பது; ஆறு தூண்களையுடையது; இரண்டில் யாளிகளும், நான்கில் குதிரைகளும் இருக்கின்றன. அவைகளில் ஏறிச் செல்வோர் ஒவ்வொருவரும் இரண்டு விதமாக அமைக்கப் பெற்றிருக்கின்றனர். ஒருபுறம் ஒரு மாதிரியாகவும், மற்றொருபுறம் வேறு வகையாகவும் ஒரே தூணில் இருப்பது கண்டு

மகிழத்தக்கது. ஒரு யாளியின் வாய்க்குள் நாலு அங்குல குறுக்களவுள்ள கல் உருண்டை இருக்கிறது. அதை அந்த வாய்க் குள்ளே உருட்டலாமே யன்றி வெளியே எடுக்கமுடியாது. இந்த மண்டபத்தின் கொடுங்கையில் குரங்குகளை இயற்கையான பாவனைகளில் செதுக்கப்பெற்றிருக்கின்றது.

மகாமண்டபம்

இந்த மண்டபத் தூண்கள் அழகிய சிற்பச் சிறப்பு வாய்ந்தவை. மண்டபத்தின் மேற்புறத்தில் 7 அடிச் சதுரமுள்ள ஒரே கல்லில் விரிந்ததாமரை செதுக்கப்பெற்றிருக் கிறது. தாமரை இதழ்களைக் கிளிகள் கொத்துவதுபோல் அமைக்கப் பெற்றிருக் கிறது. தாமரைப் பூவின் நடுவேயுள்ள மொட்டின்மீது ஒரு கல்வளையம். இது உருள வும் செய்கிறது. எட்டுத் திக்குகளிலும் அஷ்டதிக்குப் பாலகர்கள் தங்கள் வாகனங் களில் அமர்ந்திருக்கின்றார்கள். பணிப் பெண்கள் நிற்கின்றனர். நடுவே நடுவே கல் சங்கிலிகள் தொங்குகின்றன. என்னே தமிழ் நாட்டுச் சிற்பியின் கைத்திறன்! மகாமண்ட பத் தூண்களில் வாலிசுக்கிரீவர் சண்டையும், இராமர் வாலியை அம்பெய்யும் காட்சியும் காணலாம். வாலியிருக்கும் தூண்பக்கம் நின்று பார்த்தால் இராமர் உருவம் தெரி யாது. ஆனால் இராமர் சிலைப்பக்கமிருந்து பார்த்தால் வாலி தெரியும். மறைந்து நின்று அம்பெய்து வாலியை இராமர் கொன்ற கதை யைக் கல்லே சொல்லும்வண்ணம் அமைத்த சிற்பியின் நுண்மாண் நுழைபுலத்தை என் னென்றும் புகழ்வது! இம்மட்டோ! தூண் களின் உச்சியிலுள்ள சிங்கங்கள், யாளிகள் இவைகளின் வாய்களில் ஒன்று, இரண்டு, மூன்று கல் உருண்டைகள் இருக்கின்றன. ஒரு கொம்பைக் கொண்டு இவைகளை உருட் டிப் பார்க்கலாம். கைலாசநாதர் சந்நிதிமுன் புறத்தின் மேலேயுள்ள தாமரைக் கல் போன்றே முருகன், சிவகாமிஅம்மை இவர்கள் சந்நிதிகளுக்கு மேலேயும் இருக் கின்றன.

உட்பிரகாரத் தூண் சிற்பங்கள்

சொல்லப்படும் தூண்கள் எல்லாம் பிர காரங்களின் மதிற்சுவர்களை யொட்டியுள் ளவை. அவற்றை வரிசையாகப் பார்ப்போம். மேற்குப் பிரகாரத்தின் வடக்குப் பக்கம் முதல் இரண்டு தூண்களில் ரிஷிபத்தினிகள் உருவங்கள். இறைவனுடைய பிட்சாடன கோலத்தில் மயங்கி நிற்கின்றனர். ஒரு ரிஷி பத்தினி பிச்சை கேட்பவருக்கு அகப்பையில் அன்னம் கொண்டு வருகிறாள். அதைக் காகம் சாப்பிடுவதையும் கவனிக்கவில்லை. அவளு டைய கொண்டைச் சொருகும், அணிகலன் களும் கண்டு மகிழத்தக்கன. மூன்றாவது பார்வதியின் திருவுருவம். அதையடுத்துப் பிட் சாடனர். பிட்சாடனர் பக்கம் இன்னுமொரு ரிஷிபத்தினி வெகு ஒய்யாரமாக நிற்கிறாள். அதையடுத்துள்ளது திருமாலின் மோகினி அவ தாரச்சிலை. இருபுறமும் இரு முனிவர்கள் கெஞ்சும் பாவனையில் இருக்கின்றனர். அப் பாலுள்ள தூண்களில் தனித்தனியே பதஞ் சலி, வியாக்கிரபாதர், ஜெயமுனிவர், நந்திகேசு வரர் இவர்களுடைய திருமேனிகள் இருக்கின் றன. அதையடுத்து ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி. அதற்குப் பக்கத்தூணில் எல்லாம் வல்ல சித்தர் கல்யானைக்குக் கரும்பு கொடுக் கும் காட்சி. திடீரென்று சிற்பி மதுரைத் திருவிளையாடலை நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார். இதையடுத் துள்ள இரண்டு தூண்களில் புராண கதை யையும் கற்பனையையும் குழைத்துத்தருகிறார் சிற்பி. இடபவாகனத்தில் சிவ பார்வதி இரு வரும் ஆரோகணித்துச் செல்கின்றனர். இட பத்திற்கு நீர்வேட்கை ஏற்பட்டது. அதை யறிந்த இறைவி, சிவபெருமானை இடபத்து நீர் கொடுக்க வேண்டினர். அவர் தண்ணீ ருக்கு எங்கும் போகவேண்டியதில்லையே! சடையில் மறைத்துவைத்திருந்த கங்கையைச் சிறிது விட்டார். நீர் பெருகிற்று. இடபம் நீர் பருகிற்று. கங்கையான பெண்ணைத்தலை யில் தூக்கி மறைத்துவைத்திருப்பது கண்ட தேவி கோபம் கொள்கிறாள். இறைவன் அம் மையைச் சாந்தப்படுத்த முயல்கிறார். இடபம் கீழே படுத்துக்கொண்டு மேலேயிருந்துவரும் நீரைப்பருகுகின்றது. மேலே கங்கை பெண் உருவத்தில் காட்சியளிக்கிறாள். மேலே யிருந்து கீழே விழும் வெள்ளத்தை எதிர்த்து மீன்கள் செல்கின்றன. இயற்கையையும் எழில் நலத்துடன் சித்திரிக்கிறான் சிற்பி. மற் றொரு தூண் இறைவி அமைதிபெற்ற நிலை. இவ்விரண்டு தூண்கள் சித்திரங்களையும் சிவ சக்தி கோபம், சிவசக்திசாந்தம் என்று கூறுகின் றனர். இவைகளை யடுத்துள்ள தூணில் திரு

மால் சங்குசக்கரதாரியாக நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். அதற்கடுத்த தூணில் அகோரவீரபத்திரர் திருவுருவம். இது வரையில் மேற்குப் பிரகாரத்தின் வடபகுதியிலும், வடக்குப் பிரகாரத்திலும் உள்ள தூண் சிற்பங்களைப்பற்றிச் சொல்லப்பெற்றது. கிழக்குப் பிரகாரத்தில் சொல்வதற்கொன்றுமில்லை. ஆனால் ஒரு தூணில் யாளி வாயில் கல்குண்டு எப்படிச் செய்யப்பெற்றிருக்கிறதென்பதை மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பெற்றிருக்கிறது. ஒரே தூணில் ஒருபுறம் முழுவதும் பூர்த்தியான வேலை வழுப்பாக உள்ளது; மற்றொரு புறம் சொறசொறப்பாக வேலை முடியாத நிலையைக்காட்டி நிற்கின்றது. ஒரு தூணில் மச்ச, கூர்ம, வராக, வாமன, நரசிம்ம, இராம, பரசுராம அவதாரங்களைக் காட்டும் அழகிய சிறு சிற்பங்கள் இருக்கின்றன.

தெற்குப் பிரகாரத்தில் அக்கினி வீரபத்திரர், இடபாந்தகமூர்த்தி, காளிநிர்த்தனம் இவைகள் தனித்தனி தூண்களில் உள்ளன. காளி உருவம் தெற்குப் பிரகாரத்திலுள்ள ஊர்த்துவதாண்டவமூர்த்திக்கு நேரே அமைக்கப்பெற்றிருக்கின்றது. நடனப்போட்டியில் தோல்வியடைந்து தலை குனிந்து நிற்கும் காளியின் காட்சியில் நம் மனதைப் பறிகொடுக்கச் செய்கிறார் அந்தப் பெயர் விளையாத சிற்பியார். அதையடுத்த தூண்களில் முறையே ஐயனார், மாணிக்கவாசகர், காஞ்சி காமாட்சி, மன்மதன், இரதி, ஞானசம்பந்தர், அப்பர் இவர்களுடைய திருவுருவங்கள். (இவற்றில் சிலவற்றைப் படங்களில் காண்க). மன்மதன் கிளிமேல் அமர்ந்து மலர் அம்பைத் தொடுக்க எடுக்கும் பாவனையிலிருக்கின்றான். கிளிவாயிலே கடிவாளம் மாட்டப்பட்டும், சேணமும் அமைக்கப்பட்டும் இருக்கின்றன. அவன் கால்களை அங்கவடிகளில் மாட்டியிருக்கிறான். இரதிதேவி அன்னத்தின்மேல் இவர்ந்திருக்கிறாள். தொங்குகின்ற பின்னல் சடை மிக வனப்புடையது. இதையடுத்த இரண்டு தூண்களில் ஞானசம்பந்தர், அப்பர் இவர்களின் திருவுருவங்கள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தின் தென்புறம் பத்திரகிரியார், சண்டேசுவரர் இவர்களின் உருவங்களும் இருக்கின்றன.

நந்தி மண்டபம்

இந்த மண்டபத்தூண் ஒன்றில் அர்ச்சுனன், பரமசிவன் வேடரூபங்கொண்ட கிராத மூர்த்தி இந்த சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மற்றொரு தூணில் கண்ணன்—கோபியர் ஜலக்கிரீடை சித்தரிக்கப்பட்டிருக்கிறது பொதுவாகக் கோயிலில் பல இடங்களில் கோயிலைக் கட்டிய கட்டி முதலியார்களின் சின்னமான வாடாமல்லிகை மாலையும் வண்ணத்தடுக்கும் காணப்படுகிறது. இவற்றுடன் வில், கயல், புலி என்ற மூவேந்தர் கொடிச் சின்னங்களும் இருக்கின்றன.

திருக்குளங்கள்

இந்த கோயிலுக்குக் கிழக்கே இரண்டு திருக்குளங்கள் இருக்கின்றன. ஒன்று 180 அடிச் சதுரமுள்ளது. சிவந்த கற்களால் கட்டப்பெற்ற கைப்பிடிச் சுவர்கள் சுற்றிலும் இருக்கின்றன. கருங்கற்களாலான 36 நந்திகள் இந்த சுவர்களின் மேலிருக்கின்றன. நான்கு பக்கங்களிலும் இறங்கிக் குளிப்பதற்குக் கல்படித் துறைகள் உள்ளன. கைப்பிடிச் சுவர்களின் உட்பக்கத்தில் 360 முக்கோண மாடங்கள் இருக்கின்றன. இவைகள் விளக்குகள் வைப்பதற்காக ஏற்பட்டவை. இந்த திருக்குளத்தின் நடுவில் 16 தூண்களுடைய நீராழிமண்டபம் இருக்கிறது. இந்த குளத்திற்கும் வடக்கில் மற்றொரு 100 அடிச் சதுரத் திருக்குளமும் உண்டு. இதற்குக் கருங்கல் கைப்பிடிச் சுவர்களும் அவற்றின் மேல் சிவந்த கற்களால் செய்யப்பெற்ற 20 நந்திகளும் இருக்கின்றன.

கோயிலுக்கு வெளியே மண்ணில் புதைந்து பல கற்றூண்கள் கிடக்கின்றன. அவை ஆயிரக்கால் மண்டபம் அமைக்க, கட்டி முதலியார்களால் இங்கு கொண்டுவரப்பெற்றன வென்றும், கட்டமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டதென்றும் சொல்கின்றனர்.

கல்வெட்டுக்கள்

தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலை முதலில் கட்டத்தொடங்கியவர் மும்மடி கட்டி முதலியார். அவரைத் தொடர்ந்து சீயாள (சீயாழி அல்லது ஸ்ரீகால) கட்டி முதலியார் கட்டினார். வணங்காமுடிகட்டி முதலியார் கட்டி முடித்தார். இது கர்ண பரம்பரைக் கதை. இதற்காதாரமாகக் கல்வெட்

டுக்கள் எதுவுமில்லை. ஆனால் 13-ஆம் நூற்றாண்டிலேயே இந்த கோயில் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஒய்சள மன்னன் இராமநாததேவனின் கி. பி. 1268 ஆம் ஆண்டு தமிழ்க் கல்வெட்டொன்றில் கைலாசநாதர் கோயிலுக்கு நிலம் வழங்கியதைக் குறிக்கிறது. பூவாணியநாட்டுத் தாரமங்கலம் என்றும், இறைவன் பெயரை "உடையார் ஸ்ரீகைலாசமுடைய நாயனர்" என்றும் இக் கல்வெட்டு அறிவிக்கிறது. விஜயநகர மன்னரான வீரவசந்தராயரின் சகம் 1490 (கி. பி. 1568) ஆண்டுக் கல்வெட்டொன்றில் கைலாசநாதர் கோயிலுக்கும் இளமீசர் கோயிலுக்கும் இளமசமுத்திரம் என்ற ஊரைத் தானமாகக் கொடுத்ததை அறிவிக்கிறது.

இந்த கோயில் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான நிகழ்ச்சி யென்னவென்றால் சூரிய கிரணங்கள் மூலஸ்தான சிவலிங்கமூர்த்தி மேல் விழுவது. ஆண்டுதோறும் மாசி மாதம் 9-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரையில் அவ்வாறு விழுவதைச் சூரிய பூஜை என்று கூறுவர். சூரியனுடைய கதிர்கள் இராஜ கோபுர வாயிலின் வழியே வந்து நந்திமண்டபத்தின் ஊடே புகுந்து, பின்னர் மூன்று உள் வாயில்களையும் கடந்து சிவலிங்கத்தின் மேல் படுகின்றன. இதில் நந்தியின் கொம்பு நிழலும் விழுவதாகச் சொல்கின்றனர்.

பிற கோயில்கள்

ஏழம்பீசர் கோயில்: இது கைலாசநாதர் கோயிலுக்கு மேற்கேயிருக்கிறது. கிழக்கு பார்த்த சந்நிதி. இப்போது கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் அளவுக்குத்தான் இருக்கிறது. இதுவும் மிகவும் சிற்பச் சிறப்புடையது. பூவாணியநாட்டை இவ்வூருக்கு இரண்டு கல்தொலைவிலுள்ள அமரகுந்தியென்ற ஊரிலிருந்துகொண்டு ஆண்டுவந்த கட்டி முதலியார் ஒருவர் ஏழு அம்புகள் போட்டதாகவும், ஏழாவது அம்பு விழுந்த இடத்தில் இந்த கோயிலைக் கட்டியதாகவும், அதனால் இறைவனுக்கு ஏழம்பீசர் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் ஒரு கதை வழங்குகிறது. இதற்குச் சான்றாக கோயிலுக்கு அருகில் அம்புக்குறி பொறித்த கல் ஒன்று நாட்டப்பெற்றிருக்கின்றது. எளமன்கட்டி முதலியாரால் கட்டப்பெற்றதால் எளமீசர், இளமீசர் என்ற பெயர்கள் ஏற்பட்டன என்றும் கூறுகின்றனர். தாமரை இதழ்கள், எறும்புக் கூட்டங்கள், மூன்று அங்குல அளவில் நடராஜப் பெருமான் திருவுருவம் இவை சிற்பத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி நிற்கின்றன. இங்குள்ள தட்சிணாமூர்த்தியைச் சாந்தத்திற்கே எல்லையாக வடித்தமைத் திருக்கிறன் சிற்பி. பின்புறமிருந்து இடபம் ஒன்று அவர் காலை நக்குவது அப்பெருமானின் கருணைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. தென்முகக் கடவுளின் சடையழகும் பிரபையின் சோபையும் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த கோயிலிலும் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. விஜயநகர அச்சுதராயர் காலத்துக் கல்வெட்டில் தாரமங்கலத்தார் ஒருவர் சிதம்பரத்தில் ஒரு மடம் கட்டியதையும், அதைப் பராமரிக்க வரித் தொகைகளைக் கொடுத்ததையும் கூறுகிறது. திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் கல்வெட்டில் நில தானம் செய்ததைக் குறிக்கிறது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் III (கி. பி. 1276—90) கல்வெட்டு, இலட்சுமண சதுர்வேதிமங்கலத்து அந்தணர்களுக்கும் ஒரு குளம்கொடுத்ததைக் கூறுகிறது. அதே மன்னனுடைய மற்றொரு கல்வெட்டில் தாரமங்கலத்து முதலியார்கள் சிலர் பிராமணர்களுக்குக் குளம் ஒன்று வழங்கியதைக் கூறப்பட்டிருக்கிறது. அதே அரசனுடைய வேறு ஒரு கல்வெட்டில் இலட்சுமண சதுர்வேதிமங்கலத்து அந்தணர்களுக்கு நிலம் விற்றதைக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஒய்சள வீரராமநாததேவன் (கி. பி. 1256—71) கல்வெட்டு, நிலதானம் செய்ததைக் கூறுகிறது. விஜயநகர சதாசிவராயர் கல்வெட்டொன்றில் இராமகூடல் என்ற கோயிலுக்குத் தாரமங்கலத்து முதலியார் ஒருவர் ஒரு சிற்றூரைத் தானம் கொடுத்தது அறிவிக்கப்படுகிறது. விஜயநகர அச்சுதராயர் கல்வெட்டொன்றும் அதே முதலியாரால் நிலதானம் வழங்கியதைத் தெரிவிக்கின்றது. சுந்தரபாண்டியன் காலத்திய கல்வெட்டொன்று வடபூவாணிய நாட்டுத் தலைவராயிருந்த கண்டியத்தேவர் ஒரு சிற்றூரைத் தானமளித்ததைக் குறிக்கின்றது. மற்றுமோர் கல்வெட்டில் கௌடசூடாமணி, வித்தியா சமுத்திரம் என்ற விருதுகளை உடைய ஸ்ரீகாந்ததேவர் என்பாரின்

தந்தையாருக்குத் தாரமங்கலத்து நல்ல உடையப்பர் உள்ளிட்ட ஆறு வேளாளர்கள் குருதட்சிணையாக நிலம் வழங்கியதைக் கூறக் காண்கிறோம். ஒரு கல்வெட்டில் 'எழுகரை நாடு' என்ற பெயர் குறிக்கப்படுகிறது. அருணகிரிநாதர் பாடிய "விரகறநோக்கியும்" என்று தொடங்கும் திருப்புகழ்ப் பாடலின் இறுதியில் "இமையவர் நாட்டினில் நிறை குடி ஏற்றிய எழுகரை நாட்டவர் தம்பி ரானே" என்ற கூற்றுக்குச் சம்பந்தம் உண் டென்பர்.

பத்திரகாளி கோயில்:—இது ஊர்காவல் தெய்வம். ஏழும்பீசர் கோயிலுக்கு வடக்கே இருக்கிறது அதற்கு முன்னால் ஒரு சிறு குளம் இருக்கிறது. சுற்றிச் சுவர்கள் வட்ட மானவை; படிக்கட்டுகள் எட்டுகோண மானவை; உள்ளே குளம் சதுரமானது. இங்கு ஒரு வேடிக்கை. ஒரு கல்லை எடுத்து சுவரின்மேல் ஓங்கிவீசினால் அது சுவர் ஓரமா கவே ஓடி முன் எறிந்த இடத்திற்கே வந்து சேருகிறது. சுவர்களின்மேல் கல்லாலான சிங்க உருவங்கள் அமைக்கப்பெற்றிருக்கின் றன. மக்கள் இதை எட்டு வட்டக் கிணறு என்று வழங்குகின்றனர்.

வேலாயுதசுவாமி கோயில்:—கைலாசநாதர் கோயில் சந்நிதிக்கெதிரே ஊரின் மேற்குக் கோடியில் முருகன் வள்ளி தெய்வயானையுடன் எழுந்தருளியிருக்கிறார்.

வரதராஜப்பெருமாள் கோயில்:—இக் கோயில் கைலாசநாதர் கோயிலுக்கும் இள மீசர் கோயிலுக்கும் நடுவில் இருக்கிறது. இது கிழக்குநோக்கிய சந்நிதியுடையது.

முருகன் கோயில்:—கைலாசநாதர் கோயி லுக்குப் பின்புறம் கிழக்கே இரண்டு திருக் குளங்களுக்கும் தெற்கே இந்த சுப்பிரமணி யர் கோயில் இருக்கிறது.

இளமீசர் கோயிலிலுள்ள கி. பி. 1274 ஆண்டுக் கல்வெட்டொன்று அப்படியே எடுத்துக் காட்டாக கீழே தரப்படுகிறது:—

"ஸ்வஸ்திஸ்ரீசார்வபூமச்சக்கரவர்த்திகள் ஸ்ரீபொய்சள இராமநாத தேவர்க்கு யாண்டு 20-ஆவது சித்திரைமாதம்முதற்றியதி கொங் கான வீரசோழமண்டலத்து வடபூவாணிய நாட்டுத் தாரமங்கலத்து உடையார் இளமீசு வரமுடை நாயனார்க்கு இத்தாரமங்மலத்து ஊரவரும் முதலிகளும் தேவதானமாகவிட்ட நிலமாவது இவ்வூர் ஊரேரிக்கீழ் நன்செய் நிலத்து உடையார் ஸ்ரீகைலாசமுடைய நாய னார் தேவதானத்துக்குக் கிழக்கும் தெற்கும் ஆனநிலம் தடிபலகுழி ஐஞ்ஞூறும் சந்திரா தித்தவரை செல்லக் கடவதாக உதகபூர்வ மாகக் கொடுத்தோம் உடையார் இளமீசுர முடைய நாயனார்க்கு ஊரவரும் முதலி களும்."

கற்றூர் வியப்புறு கற்பணிக்கோயில் கமலநன்னீர்
வற்று துயர்அட்ட கோணக்குளமும் வகுத்ததன்றி
சுற்றூர் சதுரங்கம் வில்கயல் வேங்கை தொடர்
கொடிகள்
மற்றூர்க் கிலையெனக் கொள்கட்டியுங் கொங்கு
மண்டலமே

—கொங்குமண்டல சதகம்

எண். 19044/62 நாள் 13—5—1962

கோயில் நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்கள் கவனத்திற்கு.

சில செய்திகள் தவிர, மற்ற கோயில்களில் நடைபெறுகின்ற திருவிழாக்கள், குடமுழுக்குப் பெருவிழாக்கள் போன்றவைகளைப்பற்றிய செய்திகளை அவைகள் நடை பெறுமுன் 'திருக்கோயிலில்' வெளியிடுவதே பயனுள்ளதாக இருக்கும். ஆகையினால் ஆலய நிர்வாகப்பொறுப்பில் உள்ளவர்கள் தங்கள் கோயில்களில் நடைபெற இருக்கின்ற திருவிழா போன்ற செய்திகளை முன்னதாகவும் ஒவ்வொரு திங்களும் 15ந்தேதிக்குள்ளும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். காலதாமதம் செய்து அனுப்பப்படும் செய்திகள் 'திருக்கோயிலி'ல் வெளியிடுவது பொருத்தமாக இருக்காது.

எம். எஸ். சாரங்கபாணி,
ஆணையர்.

ஆணையர் அலுவலகம்
இந்துசமய அறநிலைய (ஆட்சித்) துறை
சென்னை-34.

டி. டிஸ். எண். 32280/61 (ஏ2) நாள் 27—4—62.

பொருள் :—வாணவேடிக்கை—அதிர்வெடி—சமய நிலையங்கள்—அறிவுறுத்தல்.

திருவிழா முதலிய நிகழ்ச்சிகளில், கோயில்களின் எல்லைக்குள்ளேயே அதிர்வெடி வெடிப்பதும் மற்ற வாணவேடிக்கைகள் செய்வதும் ஆணையர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கோயில் -கோபுரம், மதில், மண்டபம் முதலியவைகளுக்கு அதிர் வெடிச்சத்தத்தினால் சேதம் ஏற்படக்கூடும். எனவே மேற்படி பழக்கம் தவிர்க்கப் படவேண்டியதாகும்.

ஆகையினால், கோயில்களின் நிர்வாகப்பொறுப்பிலுள்ளவர்கள் அதிக சத்தம் உண்டாக்கிக்கெடுதல் தரக்கூடிய அதிர்வெடி போன்ற வேட்டுக்களைக் கோயில்களின் வெளிமதில்களுக்கு முந்நூறு அடி தொலைவிற்கப்பால் வெடிக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம். எஸ். சாரங்கபாணி,
ஆணையர்.

திருப்பூர்: விசுவேசுவரசுவாமி, வீரராகவப்பெருமாள் கோயிலில் இரதாரோகண மகோற்சவம் 13—5—62 முதல் 24—5—62 வரை நடைபெற்றது.

திருப்புன்கூர்: சிவலோகநாதசுவாமி கோயிலில் வைகாசி விசாகப்பெருவிழா 9—5—62முதல் 22—5—62வரை நடைபெற்றது.

திருநாங்கூர்: செம்பொன் அரங்கர் கோயிலில் மகா சம்ப்ரோக்ஷணம் 21—5—62 முதல் 24—5—62 வரை நடைபெற்றது.

திங்களூர்: கைலாயநாதசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 2—6—62முதல் 6—6—62வரை நடைபெறும்.

சோழவந்தான்: துரோபதையம்மன் கோயிலில் பூக்குழிவிழா 18—5—62 முதல் 7—6—62வரை நடைபெறும்.

திருநெல்வேலி: சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் பிள்ளையன் (உச்சிக்கால அர்த்தசாம) கட்டளைகள் வைகாசி விசாக உற்சவம் மற்றும் 1008 சங்காபிஷேகம் 17, 18, 19—5—62 தேதிகளில் நடைபெற்றன

திருவண்ணாமலை திண்டிவனம்ரோட்: கெங்கையம்மன் கோயிலில் காப்புவிழா 22—5—62ல் நடைபெற்றது. 23—5—62முதல் 26—5—62வரை சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருப்பழையாறை: சோமநாதசுவாமிக்கும் பரிவாரங்களுக்கும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 4—6—62முதல் 6—6—62வரை நடைபெறும்.

குன்றத்தூர்: சேக்கிழார் சுவாமிகளுக்கு 41ஆவது பெருந்திருவிழா 27—5—62முதல் 7—6—62வரை நடைபெறும்.

திருமெய்ஞானம்; ஞானபுரீசுவரர் கோயிலில் வைகாசி விசாக ஏகதின உற்சவம் 19—5—62ல் நடைபெற்றது.

தாரமங்கலம்

சம்பந்தர்

சண்டேசுவரர்

மாணிக்கவாசகர்

அப்பர்

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

(பங்குனி மாத இதழின் தொடர்ச்சி)

திருவாரூர்ச் செலவு

நாயனார் திருநல்லூரில் தங்கியிருக்கும் நாட்களில், அவருக்குத் திருவாரூர் சென்று வணங்குதல் வேண்டும் என்னும் அவா உண்டாயிற்று.

திருவாரூர்ச் சிறப்பு

திருவாரூரின் பெருமை இக்காலத்து விளங்காததாகவே உள்ளது. தில்லையைப் போல முற்காலத்தில் திருவாரூர் முதன்மை பெற்று விளங்கியது என்பது பலவாற்றால் உய்த்துணரக் கிடக்கின்றது.

திருநாவுக்கரசு நாயனார், ஒரு திருத்தாண்டகத் திருப்பதிகமே, திருவாரூர், கால எல்லையறியப்படாத மிகப் பழைய திருத்தலம் என்பதை விளக்குதற்பொருட்டு அருளிச் செய்துள்ளார். ("ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்று தொடங்குவது அத்திருப் பதிகம்.)

திருத்தொண்டத் தொகையை அருளுவித்தற்கு ஆலாலசுந்தரரை நிலவுலகில் வருவித்தருளிய இறைவன், பரவையாரை அத்தலத்திலே அவதரிக்கச்செய்து, ஆலால சுந்தரருக்கு அதனையே இருப்பிடமாகத் தந்தருளினான். அவர், அங்கிருக்கும் நாட்களிலே, தேவாசிரிய மண்டபத்தில் திருக்கூட்டமாய் உள்ள சிவனடியார்களைக் கண்டு வணங்கி, 'இவர்கட்கு அடியவனாக என்னை இறைவன் தந்தருளும் நாள் எந்நாளோ' என்னும் அவா மீதூர்ந்த பொழுதே இறைவன் அவ்வாறு செய்தருளப்பெற்றுத் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார்.

நம்பியாரூரர், தில்லையில் வந்து கூத்தப் பெருமானை வணங்கி இன்புற்றிருக்கும் நிலையில், "திருவாரூருக்கு வா" என்றருளிய அப்பெருமானது திருவருள் ஆணையின்படி, அவர் திருவாரூருக்குச் சென்ற பொழுது அவரை அடியவர் திருக்கூட்டம் வந்து எதிர்கொண்டது எனவும், அத்திருக்கூட்டத்தவர்களை நோக்கி நம்பியாரூரர், "திருவாரூர்ப் பெருமானார் என்னையும் ஆளாக ஏற்றுக் கொள்வாரோ" என்று வினவி, அப்பெருமானது திருவருளைப் பெற அவர்களையே வாயிலாக நினைந்தருளினார் எனவும் அறிகின்றோம்.

இனி, அவருக்கு முன்புதானே திருநாவுக்கரசு நாயனார் அங்குச் சென்றபொழுது அடியவர்கள் எதிர்கொண்டமையையும், "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் எமக்கும் உண்டுகொலோ" என அந்நாயனார் அங்குப் பெருவேட்கையுடன் அருளிச் செய்தமையையும் இங்கு இனிக் காண்போம்.

திருப்புகலூரில் திருநாவுக்கரசரைத் தலைப்பெய்து அவரால் திருவாரூர்த் திருவாதிரை விழாச் சிறப்பைக் கேள்வியுற்ற திருஞானசம்பந்தர் பேரவாவினால் உடனே புறப்பட்டுத் திருவாரூருக்குச் சென்றபொழுதும் அடியவர் திருக்கூட்டம் பேராரவாரத்துடன் எதிர்கொண்டமையையும், அவர்கள் முன்னிலையிலே திருஞானசம்பந்தர், "அந்தமாய் உலகாதியும்" என்னும் திருப்பதிகத்தால், "எந்தை தான்எனை என்று கொலுங் கொலோ" என்பது முதலாக ஆர்வத்தோடு அருளிச் செய்தமையையும் திருஞானசம்பந்தரது வரலாற்றில் காண்கின்றோம்.

இவ்வரலாறுகளால், தமிழ்ச் சங்கத்திற்கு மதுரை இடமாய் இருந்ததுபோல, திருவாரூர், சிவனடியார் திருக்கூட்டத்திற்கு இடமாய் இருந்தமை தெற்றெனப் புலப்படும். சிவனடியார்கள் அதன்கண் திருக்கூட்டமாய் இருந்ததற்குக் காரணம் அதன் பழைமை முதலிய சிறப்புக்களே எனலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட முசுகுந்தன் என்னும் சோழன் ஒருவன் இந்திரனிடத்திலிருந்த தியாகராசரது திருவுருவத்தைக் கொணர்ந்தபொழுது அதனை அத் தலத்திலே வைத்து வழிபட்டான் எனக் கந்தபுராணம் கூறுகின்றது. (அத் திருவுருவமே இப்பொழுது அங்குள்ள தியாகராசர் திருவுருவம்) இதனால், சோழமன்னர்களுக்கு உறையூர்

தலைநகரமாயும், காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாயும் விளங்கினமைபோலத் திருவாரூர், வழிபடுகடவுள் நகரமாய் விளங்கியிருந்த தென்பது பெறப்படும். இன்னோரன்ன உண்மைகள், 'முசுகுந்தன் இந்திரனிடமிருந்து ஒரு பூதத்தைக் கொணர்ந்து புகார் நகரத்தில் இருத்தினன்' என்பதுபோன்ற புறச் சமயத்தவரது கதைகளால் மறைந்தொழிந்தனபோலும்!

இங்ஙனமாதலின், தமக்குத் திருவடி சூட்டியருளிய நல்லூர்ப் பெருமானைப் பிரிந்து சென்றாயினும் திருவாரூரை வணங்குதல் வேண்டும் என்ற விருப்பம் நாயனார்க்கு உண்டாதல் இயற்கையே.

திருவாரூருக்குப் புறப்படுதல்

எனவே, நாயனார் திருநல்லூர்ப் பெருமானை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, திருவாரூரை நோக்கி வழிக்கொண்டருளினார். அப்பொழுது, இடையில் வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து திருத்தொண்டு புரிந்து சென்ற திருத்தலங்கள் பல. அவை:

திருப்பழையாறை
திருவலஞ்சுழி (சுவாமிமலை)
திருக்குடமூக்கு (கும்பகோணம்)
திருநாலூர் மயானம்
திருச்சேறை
திருக்குடவாயில்
திருநறையூர்ச் சித்தீச்சரம்
திருவாஞ்சியம்
திருப்பெருவேளூர்
திருவிளமர்

முதலியன.

அவற்றுள், திருப்பழையாறைக்கு அப்பொழுது அருளிச்செய்த திருப்பதிகம் இன்று நமக்குக் கிடைத்திலது.

திருவலஞ்சுழி

திருவலஞ்சுழிக்குக் கிடைத்துள்ள திருப்பதிகங்கள் இரண்டு. அவை, "ஓத மார்கடலின் விட முண்டவர்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமும், "அலையார்ந்த புனற்கங்கை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகமுமாம். இனி மற்றுமொரு திருப்பதிகம் "கருமணிபோற் கண்டத் தழகன் கண்டாய்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் திருவலஞ்சுழிக்கும் திருக்கொட்டையூர்க்குமாக அருளிச்செய்யப்பட்டது.

அவற்றுள் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் இறைவனை உணராது உறங்கிக் கிடக்கும் உலகரை உணர்விப்பதாயும், இறைவனுக்குத் தொண்டுபடுதற் சிறப்பினையும், அவனது பேராற்றலது பெருமையையும் அறிவிப்பதாயும் உள்ளது. திருத்தாண்டகத் திருப்பதிங்கள் இறைவனது இயல்பினைப் பலபடியாலும் வகுத்தருளிச் செய்தன.

திருக்குடந்தை

திருக்குடந்தையில் (கும்பகோணத்தில்) மூன்று தலங்கள் உள்ளன. அவை திருக்குடமூக்கு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக்காரோணம் என்பன. அவற்றுள் திருக்குடமூக்கிற்கு, "பூவணத்தவன் புண்ணியன்" என்னும் திருக்குறுந் தொகையாகிய ஒரு திருப்பதிகமும், திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்திற்கு, "சொன்மலிந்த மறைநான்கு" என்னும் திருத்தாண்டகமாகிய ஒரு திருப்பதிகமும் உள்ளன. திருக்குடந்தைக் காரோணத்திற்குத் திருப்பதிகம் காணப்படவில்லை.

அவற்றுள் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், திருக்குடமூக்கு இறைவனுக்குச் சிறந்த இல்லமாய் உள்ளமையைத் தெளிவிக்கின்றது.

"காமியஞ் செய்து காலங் கழியாதே" என உலகப் பயனை விரும்பி இறைவனை வணங்குதல் சிறந்ததாகாமையை அறிவித்தருளிய திருப்பாடலும் அத்திருப்பதிகத்துள்ளே உளது. திருத்தாண்டகத் திருப்பதிகம் இறைவனது இயல்பினை விளக்குவதாகும். குடந்தையுள் கங்கை முதலிய கடவுள் யாறுகள் பலவும் கடவுட்டன்மையால் வந்து கலந்து நிற்றலை இரு திருப்பதிகங்களும் குறிப்பிக்கின்றன.

திருநாலூர் மயானத் திருப்பதிகம் கிடைத்திலது.

திருச்சேறை

திருச்சேறைக்கு, "பெருந்திரு இமவான் பெற்ற" என்னும் திருநேரிசையும், "பூரியாவரும் புண்ணியம்" என்னும் திருக்குறுந்தொகையுமாக இருதிருப்பதிகங்கள் உள.

அவற்றுள், திருநேரிசைத் திருப்பதிகம் இறைவனது புகழ்களாகிய புராண வரலாறுகளை எடுத்தோதுவது. நாயனுரது வரலாற்றுக் குறிப்பு நன்கமைந்த ஒரு திருப்பாடல் அத்திருப்பதித்துள்ளே அமைந்து விளங்குகின்றது. அத்திருப்பாடல்,

"ஓர்த்துள வாறு நோக்கி
உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென் றெண்ணி
மயக்கில்வீழ்ந் தழுந்து வேனைப்
பேர்த்தெனை யாளாக் கொண்டு
பிறவிவான் பிணிக ளெல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வ னுரே"

என்பது. திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், இறைவனைப் புகலிடமாக அடைந்தவழி மனக்கவலை நீங்குதலைத் திட்பமுற அருளிச் செய்கின்றது.

"பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கிஇங் கின்பம்வந் தெய்திடும்"

"தப்பி வானந் தரணிகம் பிக்கிலென் ?
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்?"

என்பன அப்பகுதிகள்.

"மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்
ஓடி எய்த்தும் பயனிலை ஊமர்காள்"

"வைத்த மாடும் மடந்தைநல் லார்களும்
ஒத்தொவ் வாதஉற் றுர்களும் என்செய்வார்?"

"குலங்கள் என் செய்வ? குற்றங்கள் என்
செய்வ?"

"பழகி னுல்வரும் பண்டுள சுற்றமும்
விழவி டாவிடில் வேண்டிய தெய்தொணு"

என்னும் பகுதிகள் பெரும் பொருளாகிய இறைவனே உறுதுணையாவதன்றி ஏனைச் சிறுபொருள்களால் ஆவது ஒன்றில்லை. அதனுல், அவை என்ஞான்றும் பந்தமாய்த் துன்பதருவனவன்றி, வீடாய் இன்பந்தருவனவல்ல என உணர்விக்கின்றன. இன்னும்,

"என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே"

என இன்புற்றருளிய திருப்பாடலும் அதன் கண் காணப்படுகின்றது.

திருக்குடவாயில், திருநறையூர்ச்சித்தீச்சரம் என்னுந்தலங்களில் அருளிச் செய்த திருப்பதிகங்களை நாம் பெற்றிலோம்.

திருவாஞ்சியம்

திருவாஞ்சியத்திற்கு உரியதாய்த் திருத்குறுந்தொகைத் திருப்பதிகம் ஒன்றே உளது. அஃது, 'இறைவனை அடைவர்க்கு அல்லல் இல்லாமையை' அறிவுறுத்துகின்றது; "படையும் பூதமும்" எனத் தொடங்குவது.

திருப்பெருவேளூர்

திருப்பெருவேளூர்க்கு, "மறையணி நாவினனை" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம் ஒன்று உளது. அஃது, 'உணரற்பாலதாய பொருள் இறைவன் ஒருவனே என உணர்ந்து, அவ்வாற்றுனே அவனை உணருமாறுணர்ந்து உணர்தல் வேண்டும்' என்று உணர்த்துகின்றது.

"விரிவிலா அறிவினுர்கள் வேருெரு சமயம்
செய்தே
எரிவினுற் சொன்னு ரேனும் எம்பிராற் கேற்ற
தாகும்"

என அருளிச்செய்த அரும்பொருளும் அத் திருப்பதிகத்தின் கண்ணே அமைந்துள்ளது. வேருெரு சமயமாவது, இறைவன் திருவுள்ளக் குறிப்பிற்கு மாருய சமயம். எரிவு-பொருமை எனவே, 'அறியாமை காரணமாக, நல்லோர் பால் பொருமைகொண்டு, அவர்தம் நெறியை அழித்துப் பேசும் சமயத்தைச் சிலர் கட்டிச் சொல்வாராயினும் அதனையும் எம்பெருமான் ஒரு நெறியாக நிற்கும்படி அருள் புரிவன்' என அருளிச் செய்தவாறும், அங்ஙனம் இறைவன் அதனை ஏற்றுக் கொள்ளுதல் அந்நெறியின் பயனுல் அவர்க்கும், அவரைப் பின்பற்றி ஒழுகுவோர்க்கும் அவ்வறியாமை நீங்குதற் பயன் கருதி யென்க.

திருவிளமருக்கு அருளிச்செய்த திருப்பதிகம் கிடைத்திலது.

திருவாரூரை அடைதல்

இவ்வாறு நாயனுர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு திருவாரூரை அடைந்தருளினுர்.

'இறைவன் திருவருள் நிரம்பக் கைவரப் பெற்று, அழுக்காறு காரணமாகச் சமணர்கள் செய்த திங்குகளையெல்லாம் வென்று, கல்லே தெப்பமாகக் கடலைக் கடந்து கரையேறிய ஆளுடைய அரசர் எழுந்தருளுகின்றுர்' என்னும் களிப்பினுல், திருவாரூரின்கண் உள்ள அடியவர்கள், மாடமாளிகைகளும், திருவீதி

களும் மங்கலப் பொருள்களாலும், மகர தோரணம் முதலியவற்ருலும் அழகு பெற்று விளங்கும்படி நகரத்தை அலங்கரித்துக் கூட்டமாய் மதிற்புறத்துச் சென்று எதிர் கொண்டார்கள். அப்பொழுது அத்தொண்டர் குழாத்தைக் கண்ட நாயனர், இவர்கட்குக் தொண்டராகும் பேறு, சிவபிரானிடத்தில் இடையருது பேரன்பு செய்வார்க்கும் கிடைத்தல் அரிது; அங்ஙனமாக, பாழ்ங்கொள்கை பேசிப் பகட்டித் திரியும் சமணரது பகட்டுரையால் மயங்கி அவர்தம் சமயப் படுகுழியிலே வீழ்ந்து நெடுங்காலம் உழன்று அதன்பின் சிவபிரான் திருவுளம் இரங்கிச் சூலைநோயால் ஈர்த்து ஆட்கொள்ள அவனை அடைந்து சிறிதுகாலமாக அவனிடத்து அன்பு செய்யப்பெற்ற எனக்கு அப்பேறு கிடைக்கத் தகுவதொன்ருே' என எண்ணி இன்பம் மீதூரப்பெற்று, அம்மீதூர்வால் தம்மை மறந்த உணர்வுடையவராய், அவ்வின்பத்தைப்பொழியும் திருப்பதிகத்தை அருளிச்செய்து கொண்டே, அடியார்களுடன் திருவீதியுட் சென்றருளினர். அத்திருப்பதிகம், "குலம்பலம் பாவரு குண்டர்முன்னே நமக் குண்டுகொலோ" எனத் தொடங்கும் திருவிருத்தத் திருப்பதிகமாகும். அதன் இரண்டாவது திருப்பாடல்,

'மற்றிட மின்றி மனைதுறந் தல்லுணு
வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்கு
முண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனெ டன்றெரு
வேடுவனய்ப்
புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே"

என்பது. இத்திருப்பாடற் பொருள் பற்றியே சேக்கிழார் நாயனர்,

"பற்ருென் றிலாஅரும் பாதக ராகு
மமணர்தம்பால்
உற்ற பிணியொழிந் துய்யப்போந் தேன்பெற
லாவதுண்டே
புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமென்
றற்ற வுணர்வொடும் ஆரூர்த் திருவீதி
யுள்ளணைந்தார்"

என்றருளிச் செய்தார். பற்று—பற்றுக்கோடு. எனவே, "மற்றிடம்" என்றதில் இடம் என்றதன் பொருள் பற்றுக்கோடு என்றருளியவாறும். "தொண்டராம் புண்ணியம்" எனப் பன்மையாக அருளிச் செய்தமையால், "மக்களாயினர் ஒருதலையாகப் பெறுதற்கு உரிய புண்ணியம்" எனப் பொதுப்பட அருளிச் செய்த தென்க.

திருவாரூர்ப் பெருமானை வணங்கல்

இங்ஙனம் தொண்டர்கள் புடைசூழத் திருவீதியை வலமாகச் சென்று திருக்கோயிலின் வாயிலை அடைந்து தேவாசிரியத்திற்கு முன்னுக விழுந்து வணங்கி எழுந்து திருமாளிகையின் உள்ளே புகுந்து புற்றிடங்கொண்ட நாதரை நேர்படக் கண்டு கைகூப்பி வணங்கி உடம்பெல்லாம் மயிர் சிலிர்க்க, கண்களினின்றும் அன்புநீர் மழைபோலப் பெருகி வீழ,

"கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி!
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி!
அற்றவர்கட் காரமுத மானுய் போற்றி!
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி!
மற்றெருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி!
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி!
செற்றவர் புரமெரித்த சிவனே போற்றி!
திருமூலட் டானனே போற்றி! போற்றி!!"

என்பது முதலிய திருப்பாடல்களையுடைய போற்றித் திருத்தாண்டகத் திருப்பதிகத்தால் நெடிது போற்றி நின்ருர். அதன் பின்னும் அன்பு அடங்கப் பெருதவராய், "காண்டலே கருத்தாய்நினைந் திருந்தேன்" என்னும் சீகாமரப் பண் திருப்பதிகத்தை அருளிச்செய்து வாழ்த்தித் திருக்கோயிலை வலங்கொண்டு வெளிப் போந்தருளினர்.

இத் திருப்பதிகத்துள் நாயனர், தாம் முன்பு சிறிது காலம் புறநெறியிற் சென்றிருப்பினும், பின்பு அத்தவற்றை உணர்ந்து அதனின்றும் நீங்கிச் சிவபிரானையே வந்தடைந்தமையின், இனி ஒருபோதும் அத்தன்மையுடைய தவறு' தம்மால் நிகழாது என உறுதி சொல்லி, முன்பு நிகழ்ந்த தவற்றினைச் சிறிதும் திருவுளத்தில் கொள்ளாதிருத்தல் வேண்டும் என வேண்டிக்கொண்டுள்ளார். எனவே, தவறு செய்தலையே இயல்பாக உடைய நம்மனோர் அத் தவற்றை உணர்ந்து உய்திபெற அருள்வது இத்திருப்பதிகம் என்பது நன்கு புலனுகும். இதனுள்,

"அரும ணித்தடம் பூண்மு லையய
ரரம்பை யரோ டருளிப் பாடியர்
உரிமை யிற்றெழுவார்
உருத்திர பல்கணத்தார்

"விரிச டைவிர திக ளந்தணர்
சைவர் பாசு பதர்க பாலிகள்
தெருவி னிற்பொலியுந்
திரு வாரு ரம்மானே"

என எழுந்த திருப்பாடல், திருவாரூரில் பல வேறு வகைப்பட்ட சிவனடியார்களும் திரண்டிருந்தமையை நன்கு தெளிவிக்கின்றது.

தேவாசிரியனை அடைதல்

திருமுன்பினின்றும் வெளிப்போந்த நாயனர் திருமுன்றிலின்கண் உள்ள தேவாசிரிய மண்டபத்தை அடைந்தார். திருக்கூட்டம் இருந்தருளும் மண்டபம் அதுவேயாகலின், அதனை அடைந்து அங்குள்ள அடியவர் கூட்டத்தைக் கண்டார்; கண்ட பொழுது, முற்றுநேற்றே இறைவன் திருவடிக்குத் தொண்டுபூண்டு, அவனது அளவிலாப் பேரின்பத்தை இடையறாது நுகர்ந்து களிப்புமிக்கிருக்கும் அவர்களது நிலையை அறிந்தார்; அறிந்து, அவ்வாறிருக்கும் வாய்ப்புக் கிடைத்தும் அதனை யடையாமல் இழந்து, புறச் சமயத்துட்புக்கு இடர்க்கடலில் அகப்பட்டு அழுந்தி அலமந்த தம் நிலையை நினைந்து ஆருத் துயரம் எய்தினர்; எய்திய அந்நிலையில், அதனை இனிது புலப்படுத்தும், "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்" என்னும் காந்தாரப் பண் திருப்பதிகத்தை அருளிச்செய்து, ஒருவாறு அமைதியுற்று, அவ்வடியவர்களுடன் அம்மண்டபத்திற்றுனே வீற்றிருந்தருளினர்.

"பேதைமை என்பதொன் றியாதெனின்
ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்"

எனத் திருவள்ளுவ நாயனர் அருளிச்செய்தவாறு, நற்பொருளும் தீப்பொருளும் ஓரிடத்தே எதிர்ப்பட்டுக் கிடக்க, நற்பொருளைக் கைக்கொண்டு இன்பம் நுகராது விடுத்து, தீப்பொருளைக் கைக்கொண்டு துன்பம் உழக்கும் பேதையின் செயலை இனிது விளக்கும் பழமொழிகள் பலவற்றை ஒவ்வொரு திருப்பாடலின் இறுதியிலும் வைத்து அருளிச் செய்தமையால், அத்திருப்பதிகம், 'பழமொழித் திருப்பதிகம்' எனப் போற்றப்படுகின்றது. அதன் முதற்றிருப்பாடல் வருமாறு:—

"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்
தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி உழிதந்தென்
உள்ளம் விட்டுக்
கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும்
ஆரு ரரைக்
கையினல் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த
கள்வ னேனே"

இவ்வாறே ஏனைய திருப்பாடல்களிலும் திருவாய்மலர்ந்து, 'என் செயலும் இனைய தொரு பேதைமைச் செயலாய் இருந்தமை இரங்கத் தக்கது' என அருளிச்செய்தார். இத்திருப்பதிகம், சைவமாம் சமயம் சாரும் பெறற்கரிய ஊழினைப் பெற்ற எம்போலியர், எவ்வாற்றுலேனும் அதனை விடுத்துப் புறநெறியிற் செல்லக் கருதாதவாறு பாதுகாப்பதாகும்.

திருத்தொண்டியற்றல்

பின்பு நாயனர் தமது கைத்திருத் தொண்டினைத் புற்றிடங்கொண்ட பெருமானர் வீதிவிடங்காராய் எழுந்தருளி வந்து அருள்புரியும் திருவாரூர்த் திருவீதியிலே செய்ய விரும்பினவராய்த் தேவாசிரியனை விட்டு எழுந்து சென்றருளினர். திருவாரூர்த் திருவீதியிலே வீதிவிடங்கப் பெருமானது காட்சியைக் கண்டு களிக்கும் அடியவர்கள், நாயனரது காட்சியைக் கண்டு வியந்து பணிந்து களிப்பெய்தினர்கள். அக்காட்சியைக் குன்றைநகர்க் குலக் கவிஞராகிய சேக்கிழாரன்றி எழுதிக்காட்ட வல்லார் யாவர்! திருநாவுக்கரசரது திருவடிவத்தை என்றும் அடியவர் உள்ளத்து இருத்துவதாகிய அச்சொல்லோவியம் ஈண்டு ஒரு தலையாகத் தருதற்பாற்று:

"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும்
திருவடிவும் மதுர வாக்கிற்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலை
களும் செம்பொற் றுளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்
படையும் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்
தேத்திப் பரவிச் செல்வார்."

கல்லே மிதப்பாகக் கடலைக் கடந்துகரையேறியபின் திருவதிகையைஅடைந்தஇடத்திற் சொல்லப்பட்டுள்ள, "தூயவெண்ணீறு" என்னும் திருப்பாட்டும், சீகாழியை அடைந்து ஆளுடைய பிள்ளையார் முன் செல்லும்

பொழுது திருஞானசம்பந்தரது வரலாற்றின் கண் சொல்லப்படும் "சிந்தையிட யருவன்பும்" என்னும் திருப்பாட்டும் இங்குக் காட்டிய இத்திருப்பாட்டும், சிவனடியார்கள் நாள்தோறும் நினைந்து, நாயனரது திருவடியை உள்குதற்கு உரியனவாம். அது பற்றி மாதவச் சிவஞான யோகிகளும் தமது காஞ்சிப் புராணத்துள், இம்மூன்று திருப்பாட்டுக்களையும் தொகுத்தளித்தது போல,

"இடையருப் பேரன்பும் மழைவாரும் இணை
விழியும் உழவா ரத்திண்
படையருத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையருப் பெருந்துறவும் வாகீசப் பெருந்
தகைதன் ஞானப் பாடற்
றொடையருச் செவ்வாயும் சிவவேடப் பொலி
வழகும் துதித்து வாழ்வாம்"

என்னும் திருப்பாடலை ஆக்கி அளித்துள்ளார்.

இவ்வாறு திருவீதியிற் சென்று உழவாரப் பணிசெய்து, அங்கிருக்கும் அடியார்களுடனே அத்தலத்திலே பல நாள் எழுந்தருளியிருந்தார்.

திருப்பதிகங்கள் பல அருளிச்செய்தல்

அந்நாட்களிலெல்லாம் நாயனர் பூங்கோயிற் புற்றிடங்கொண்ட பெருமானைக் காலந்தோறும் தவருது சென்று அன்போடு பணிந்து திருப்பதிகம் அருளிச் செய்து, போற்றி இன்புற்ருர். அத்திருப்பதிகங்கள் "பாடிளம் பூதத்தினனும் என்பது முதலாகப் பல.

அத்திருப்பதிகங்களுள், "வேம்பினைப் பேசி" என்னும் திருவிருத்தத் திருப்பதிகத்தின் இரண்டாம் திருப்பாடலில், நமிநந்தியடிகள் நாயனரது திருத்தொண்டினை எடுத்தோதியருளினர். அத்திருப்பாடல்,

"ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன்
ஆரூ ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம்
பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாத னடித்தொண்டன்
நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணு
டறியுமன்றே"

என்பது, நமிநந்தியடிகள் நீரால் திருவிளக்கிட்டமையை அவரது வரலாற்றிற் காண்க.

திருவாரூரில் புற்றிடங் கொண்டதன்றி 'அரனெறி' என்னும் மற்ருெரு திருக்கோயிலும் உண்டு. நாயனர் அதனையும் வணங்கித் திருப்பதிகம் பாடியருளினர். இங்ஙனம் அன்பு மேலீட்டால் திருப்பதிகங்கள் பலவற்றை அருளிச் செய்துகொண்டும், திருவீதியில் உழவாரப்பணி செய்து கொண்டும் நாயனர் நெடுநாள் அங்குத் தங்கியருளினர். நாயனரது திருப்பதிகங்கள் திருவாரூருக்கு மிகப் பல உள்ளன; அவற்றின் பொருள்களைச் சிறிது சிறிது குறிப்பிடினும் மிக விரிவதாகும். ஆறு திருப்பதிகங்கள் முன்பே குறிப்பிடப்பட்டன. அவற்றுள் "பாடிளம் பூதத்தினனும்" என்னும் காந்தாரப் பண் திருப்பதிகம் இறைவனது அளப்பரும் பெருமையைப் புகழ்வது. அவற்றுட் சில தொடர்கள் அதியற்புதத்தனவாயத்தோன்றியுள்ளன; அவை,

"நரியைக் குதிரை செய்வான்;
நரகரைத் தேவு செய்வான்;
விச்சின்றி நாறு செய்வான்;
ஊழி அளக்க வல்லான்:
உகப்பவர் உச்சி யுள்ளான்;
தொழற்கு அங்கை துன்னி நின்ருர்க்குத்
தோன்றி அருள வல்லான்"

என்பனபோல்வன. இன்னும்,

"ஆயிரந் தாமரை போலும் ஆயிரம் சேவடி
யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந்
தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிரம் நீண்முடி
யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூ ரமர்ந்த அம்
மானே"

என்னும் அரிய பெரிய அதிசயத் திருப்பாடலும் அத்திருப்பதிகத்திற்ருன் வெளியாகி விளங்குகின்றது.

அதன் இறுதித் திருப்பாட்டுள் விளங்கும் "பையஞ் சுடர்விடு நாகப்பள்ளி கொள்வான் உள்ளத்தானும்" என்னும் தொடர் 'திருவாரூரின் கண் விளங்கும் தியாகேசப் பெருமான் பாற்கடலிற் பள்ளி கொள்ளும் திருமாலது திருவுள்ளத்தில் வீற்றிருந்து, பின்பு திருமால் இந்திரனுக்கு அளிக்க, இந்திரன் முசுகுந்தச் சோழனுக்கு அளிக்க, அவனுடன் திருவாரூருக்கு எழுந்தருளி, அவனல் அங்கு அமர்த்தப்பட்டு விளங்கு,

பெருமான்' என்னும் வரலாற்றைக் குறிப்ப தாகும்.

அத்திருப்பாடலின் இறுதியடியுள் வெளியாகியுள்ள, "ஐயைஞ்சின் அப்புறத் தானும்" என்னும் தொடர், 'இறைவன் தத்து வங்கட்கு அப்பாற்பட்டவன்' என்பதனை விளக்கும். 'ஆன்ம தத்துவம் இருபத்து நான்கிற்கு மேல் உள்ள வித்தியா தத்துவம் ஏழும் புருடன் என ஒரு தத்துவமாய் அடக்கி யும் கூறப்படும்' என்றல் சைவாகம நெறி.

நமிநந்தியடிகளது திருத்தொண்டினைப் புகழ்ந்த திருப்பாடலையுடைய திருவிருத்தத் திருப்பதிகத்தின் முதற்றிருப் பாட்டுள், நாயனுர் உலகரை நோக்கி, "உலகத்தீர், நீவிர் வயிருகிய பள்ளத்தைத் தூர்ப்பதற்குப் பொய்யும் புனைவும் பேசி வினைகளைப் பெருக்கிக்கொண்டு, மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்களையே உறு துணையாகத் தெளிந்து வாளா விருக்கின்றீர்! இதனுல் பின்னர்க் கொம்பர் இல்லாக் கொடி போல அலமந்து கெடுவீர்கண்டீர்! ஆகையால், திருவாரூரின்கண் விரும்பி எழுந்தருளியுள்ள நம் பெருமானது திருவருட் செல்வமாகிய திருநீற்றை உருவார அணிந்து அவனது திருவடிக்குத் தொண்டு செய்து உய்தியைப் பெறுங்கள்" என இரங்கி உரைத்தருளினுர்.

திருவாரூருக்கு எத்துணைத் திருப்பதிகங் கள்! என்னென்ன அரிய பொருள்கள்! முன்னர்க் குறித்த திருப்பதிகங்கள் உட் படக் காந்தாரப் பண் திருப்பதிகம் இரண்டு, சீகாமரப் பண் திருப்பதிகம் இரண்டு, குறிஞ் சிப் பண் திருப்பதிகம் ஒன்று, திருநேரிசைத் திருப்பதிகம் இரண்டு, திருவிருத்தத் திருப் பதிகம் இரண்டு, திருக்குறுந்தொகைத் திருப் பதிகம் இரண்டு, திருத்தாண்டகத் திருப் பதிகம் பத்து ஆக இருபத்தொரு திருப்பதி கங்கள் உள்ளன. இவற்றுள் இருதிருப்பதி கங்கள் திருப்புகலூரில் அருளிச் செய்யப் பட்டன. அவ்வரலாற்றை இனிவரும் பகுதி களிற் காணலாம். ஏனைய திருப்பதிகங்க ளெல்லாம் திருவாரூரின்கண் இருந்தே அருளிச் செய்யப்பட்டன.

இனி அவ்விடத்தே யுள்ள 'அரநெறி' என்னும் திருக்கோயிலுக்குத் திருக்குறுந் தொகைத் திருப்பதிகம் ஒன்றும், திருத் தாண்டகத் திருப்பதிகம் ஒன்றும் உள்ளன என்க. திருவாரூர் முதன்மை பெற்ற ஒரு திருத்தலம் என்பது திருப்பதிகங்கள் மிகுதி யாய் உள்ள இதனுலும் விளங்கும். இம் முதன்மை பற்றியே போலும் திருவாரூரிற் பிறந்தார்கள் பிறப்பிலேயே சிவனடியாராய் விளங்குகின்றனர். அத்தலம் பிறக்க முத்தி தரும் தலமாய் விளங்குகின்றது என்க.

'சூலப் படையானை' என்னும் சீகாமரப் பண் திருப்பதிகம், திருவாரூர், இறைவன் எளிதின் வெளிப்பட்டருளும் தலமாதலை விளக்குவது. அதன் ஐந்தாந் திருப்பாடலுள் 'திருவாரூர் தொன்மை மிக்கதலம் என்பதும், அங்குள்ள திருக்கோயில் 'பூங்கோயில்' எனப் படும் என்பதும் குறித்தருளப்பட்டன.

"படுகுழிப் பவ்வத்தன்ன" என்னும் திருநேரிசைத் திருப்பதிகம், ஐம்புலவேடரால் உளதாகும் துயரினை ஆற்றுது, அதனை நீக்கி அருள்புரியுமாறு இறைவனை வேண்டிக் கொண்டது. இது நம்மனோர்க்குப் பெரிதும் நலம் பயப்பதாகும்.

"குழல்வலங் கொண்ட சொல்லாள்" என் னும் திருநேரிசைத் திருப்பதிகம், இலக்கியச் சுவையால் இறைவனை ஏத்துவது.

"எப்போதும் இறையும் மறவாது" என்னுந் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம் இறை வனது இயல்பினை எடுத்தோதித் துதிப்பது. "கொக்கரை குழல்" என்னும் திருக்குறுந் தொகைத் திருப்பதிகத்துள் அரிய பொருள் கள் பல நிரம்பியுள்ளன.

"உயிரா வணமிருந்து" என்னும் திருத் தாண்டகத் திருப்பதிகத்துள் பலவகைப் பொருள்கள் பொதிந்துள்ளன. முதற்றிருப் பாடல், யோக நெறியால் இறைவனைத் தியானித்து அவனைத் தலைப்படு மாற்றை உணர்த்துகின்றது. "முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்" என்னும் அரிய திருப்பாட லும் அதன் கண்ணே விளங்குவதாகும்.

"பாதித்தன் திருவுருவில்" என்னும் திருத் தாண்டகத் திருப்பதிகத்துள், இறைவனைத் திருவாரூரில் கண்டு வணங்கிய பொழுது தமக்குத் தம்மை மறந்த பேரின்பம்விளைந்த வாற்றை விளக்குவது.

"நீற்றினையும் நெற்றிமேல்" "எம்பந்த வல் வினைநோய்" என்னும் திருத்தாண்டகத்

திருப்பதிகங்கள்,இறைவன் இயல்பினை விரித்தோதுவன.

"திருமணியைத் தித்திக்குந் தேனை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம்,இன்பமே வடிவமாகிய சிவபிரானைத் தாம் முன்பே அடையாது போனமையை நினைந்து இரங்கியருளியது. இன்னோரன்ன திருப்பதிகங்கள் நம்மனோர்க்குச் சிவபிரான் மாட்டுத் தோன்றும் அன்பினை வலியுறுத்துவனவாகும்.

"இடர்கெடு மாறுஎண்ணுதியேல்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், நெஞ்சத்து அலமரலைத் தவிர்த்து நிலைபெறுத்து மாற்றினைப் பலபடியாக எடுத்தோதியருளியது என்பது பலரும் அறிந்தது.

"ஒருவனுய் உலகேத்த நின்ற நாளோ" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் திருவாரூரின் தொன்மையை வியந்து அருளிச்செய்தது என்பது முன்பே குறிப்பிடப்பட்டது.

இங்ஙனம் எண்ணற்ற சிறப்புக்களுடன் திருவாரூர்த் திருப்பதிகங்கள் விளங்குகின்றன.

திருவாரூர் அரநெறித் திருப்பதிகம் இரண்டனுள் "எத்தீபுகினும்" என்னும் இந்தளப்பண் திருப்பதிகம் இறைவன் இயல்பினை விளக்குவது.

"காலையும் மாலையும் கைதொழு
வார்மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி
யார்க்கே"

என்னும் அரும்பொருள் அதன் கண் அருளப்பட்டது.

"பொருங்கைமத கரியுரிவை" என்னும் திருத் தாண்டகத் திருப்பதிகம் இறைவனையடைந்தவர்க்கே இருவினை நீங்குதலை உணர்த்துவது.

அருகில் உள்ள தலங்களை வணங்குதல்

திருவாரூரில் தங்கியிருக்கும் நாட்களில் அதற்கு அருகில் உள்ள திருவலிவலம், திருக்கீழ்வேளூர், திருக்கன்றுப்பூர் என்னும் தலங்களுக்குச் சென்று வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து மீண்டு திருவாரூரை யடைந்தார்.

அத்தலங்களுள் திருவலிவலத்திற்கு உள்ள திருப்பதிகம், "நல்லான்காண் நான்மறைக ளாயினான்காண்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றே. அது இறைவனது பெருமைகளை எடுத்துச் சொல்லி, அத்தகையோன் அடியவர் உள்ளத்தில் நீங்காது உறைதலை விளக்குவது.

திருக்கீழ்வேளூருக்கு உள்ள திருப்பதிகமும் ஒன்றே. அது, "ஆளான அடியவர்கட்கு அன்பன் தன்னை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம். அதுவும் இறைவனது பெருமைகளை எடுத்துக் கூறி, "அவன் என்றும் கேடில்லாத வனுகலின், அவனையே விரும்பி நிற்பார்க்கும் கேடுண்டாதல் இல்லை" எனத் தெரிவிப்பது.

திருக்கன்றுப்பூருக்கும் "மாதினை ஓர்கூறு கந்தாய்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றே உளது. அது இறைவனுக்கு அன்பு செய்யும் முறையை நன்கு விளக்கி, அவ்வாறு அன்பு செய்வாரது உள்ளமே இறைவன் காணப்படும் இடம் என அறிவுறுத்துகின்றது. "எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி' என்றற் றொடக்கத்துத் திருப்பாடல்களும் அதன் கண்ணே விளங்குகின்றன.

திருவாதிரைத் திருநாள் வணங்கல்

நாயனுர் திருவாரூரில் தங்கியிருக்கும் நாட்களில் திருவாதிரைத் திருநாள் வந்தது. அந்நாளில் வீதி விடங்கப்பெருமான் திருவீதி உலாப்போந்தருளும் சிறப்பினைத்தேவர்களும் முனிவர்களும் வணங்குதலை அறிந்து அடியவர்கள் அளவிலா ஆர்வத்துடன் ஆடல் பாடல் முதலிய பெருங்களிப்புடன் வழிபடுதாமும் அவர்களுடன் பேரன்போடு கண்டு களித்து இன்புற்றுப் பின்னும் சில நாட்கள் அங்கே தங்கியருளினுர்.

திருப்போரூர்:—நல்லா செட்டி குளக்கரைப்பந்தலில் திருநீலகண்டீசுவரர் திருப்பணி திருக்கூட்ட சங்கத்தார் 19-ஆம் ஆண்டு அன்னதான கைங்கரியம் 4, 6, 7—5—62 தேதிகளில் நடைபெற்றது. இவ்விழாவில் முருகன் திருஅவதாரம், திருநாவுக்கரசர் சரித்திரம், பாடல்கள் முதலியவைகளும் நிகழ்ந்தன.

கஞ்சமலைச் சித்தர்



பதஞ்சலி

விஷ்ணு



ஆலிங்கனமூர்த்தி

மலைவையாவூர்

(பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில்)

நம்முடைய நாட்டில் பழங்காலத்தில் மலைகள் மேலும், குன்றுகள் மேலும் பல கோயில்கள் கட்டியிருக்கின்றனர். அத்தகைய கோயில்கள் முருகன், சிவபெருமான், திருமால்முதலியவர்களுக்காகக்கட்டப்பெற்றவை. மலைக்கோயில்களைப் பார்த்தால் நான்கு பக்கங்களிலும் வெகு தூரம் வரையில் தெரியும்படியான மலைகளையோ குன்றுகளையோ தேர்ந்தெடுத்துக் கட்டியிருக்கிறார்கள் என்பது நன்கு விளங்குகிறது. சென்னையிலிருந்து விழுப்புரத்திற்குச் செல்லும் இருப்புப் பாதை வண்டியில் பயணம் செய்வோர் படாளம் என்ற நிலையத்திற்கு அருகே வரும் போது மேற்கே மலைமீது ஒரு கோயில் இருப்பதைக் காணலாம். அது திருமால் கோயில். இந்த ஊரை மலைவையாவூர் என்பர். வையாவூர் என்ற பெயருடைய இன்னும் சில ஊர்கள் இருக்கிறபடியாலும், இவ்வூரில் மலை இருக்கிறதனாலும் இதை மலைவையாவூர் என்றழைக்கின்றனர். செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் பகுதியைச் சேர்ந்தது. இப்பகுதி, சென்னை-விழுப்புரம் இருப்புப் பாதையில் படாளம் என்ற நிலையத்திற்கு மேற்கே நான்கு கல் தொலைவிலுள்ளது. சென்னையிலிருந்து தெற்கே செல்லும் நெடுஞ்சாலையில் 45-ஆவது கல்லிலிருந்து வேடந்தாங்கலுக்குச் செல்லும் கிளைச்சாலையில் இரண்டு கல் சென்றால் இவ்வூரை யடையலாம். படாளம் நிலையத்திலிருந்து வருவதை விட பஸ் மூலமாக இவ்வூருக்குச் செல்லலே எளிது. பறவைகள் வாசம் செய்யும் இடமான வேடந்தாங்கலுக்குச் செல்லும் பஸ்கள் இவ்வழியாகச் செல்கின்றன. இந்த சாலை மலைக்குக் கிழக்குப் பக்கமாகவும், தென்புறமாகவும் போகிறது. "பக்த விஜயம்" என்ற நூலை எழுதிய தேவராஜதாஸ் என்பவர் கட்டிய சத்திரம் ஒன்று இங்கே இருக்கிறது.

மலைவையாவூருக்கு தட்சிண சேஷகிரி, விசாகபுரி என்ற வேறு பெயர்களும் உண்டு. மலைமேல் கோயிலுக்குச் செல்ல கிழக்குப் பக்கம் 365 படிகளும், தென்புறம் 600 படிகளும் உள்ளன. மலையின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 400 அடி. தெற்குப் பக்கம்

துவாரபாலகர்

இருக்கும் படிகள் வழியாகத்தான் பெருமாள் எழுந்தருளுவார். அவ்வழியாக மேலே சென்றதும் அனுமான் சந்நிதியிருக்கிறது. கோயிலுக்குள் ஒரே பிரகாரம்தான். கிழக்கு பார்த்த சந்நிதி. எதிரில் கருடாழ்வார் காட்சியளிக்கிறார். உள்ளே சென்றதும் சீனிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் சேவை சாதிக்கிறார். அவர் எழுந்தருளியிருப்பது ஆனந்த விமானம். பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் என்ற திருநாமத்தை உடையவர். பெருமாள் சந்நிதிக்குத் தெற்கு அலுமேலு மங்கைத் தாயார் சந்நிதியும், வடக்கே ஆண்டாள் சந்நிதியும் இருக்கின்றன. மற்றும் தென்புறத்திலே சக்கரத்தாழ்வார் சந்நிதியிருக்கிறது. இந்த சந்நிதிக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இருபுறமும் வாயில்கள் உள்ளன. ஒரே விக்கிரகத்தில் ஒரு பக்கம் சக்கரத்தாழ்வாரும், மற்ற பக்கம் ஜுவாலா நரசிம்மரும் இருப்பது கண்டு மகிழத் தக்கது. வடக்குப் பிரகாரத்தில் ஆழ்வாராதியர் (மூலவர்) சந்நிதியும், உடையவர், மணவாள மாமுனிகள் (உற்சவர்-மூலவர்) சந்நிதியும் இருக்கின்றன. கோயிலுக்கு வெளி

யில் கிழக்கு நோக்கி ஒன்றன் பக்கம் ஒன்றாக மூன்று சந்நிதிகள் இருக்கின்றன. ஒன்றில் சக்கரவர்த்தித் திருமகனை இராமபிரான் சீதாபிராட்டி, இளையபெருமாள் இவர்களுடன் சேவை சாதிக்கிறார். இரண்டாவதில் வராக மூர்த்தி பூமாதேவியுடன் காட்சியளிக்கிறார். மூன்றாவதில் வேணுகோபாலன் ருக்மணியுடன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறார். இந்த மூன்று சந்நிதியிலுமிருக்கும் திருவுருவங்கள் மிகவும் அழகியவை. சிற்பிகளின் கைத்திறமைக்கு எடுத்துக் காட்டாக நிற்கின்றன. இந்த கோயிலிலுள்ள எல்லா திருமேனிகளும் அற்புதச் சிற்ப வேலைப்பாடமைந்தவை. துவார பாலகர் உருவங்கள் மிகச் சிறந்தன. ஆழ்வார்கள் திருவுருவங்கள் சிறியவையாயிருப்பினும் பேரழகு படைத்தவை.

மலையடிவாரத்தில் கிழக்குப்படிகள் தொடங்குமிடத்தில் திருக்குளம் ஒன்று இருக்கிறது. இதை வராகபுஷ்கரிணி என்று கூறுகின்றனர். கோயிலில் நாள் தோறும் இரண்டு கால பூசை நிகழ்கின்றது.

கள்ளபிரானுக்கு சித்திரைப் பிரமோற்சவமும், புரட்டாசியில் சீனிவாசனுக்கு உற்சவமும் நடைபெறுகின்றன.

இத் தலத்தைப் பற்றித் தனியே மான்மியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.



கோயில் முன்மண்டபம்

ஆனால் வராகபுராணத்தில் இப்பகுதியைப் பற்றிய சுலோகம் இருக்கிறது.

"த்ரிவெண்பா பஸ்சிமேயாகே சுகனத்
யுத்தரே தடே
வராஹ க்ஷேத்ர மஹிதே தக்ஷிணேஷே
பூதரே"

என்பது அந்த சுலோகம். தட்சிண சேஷகிரி என்ற மலையில் பிருகு முனிவர், இலட்சுமி வராகர் தரிசனத்திற்காகத் தவம் செய்கிறார். இலட்சுமிவராகர் பூமிப்பிராட்டியார் விரும்பியபடி ஆதிசேஷனைப் பர்வதாகாரமாக்கிப் பிருகு முனிவருக்குக் காட்சி யளித்து, அந்த முனிவர் விருப்பத்திற்கிணங்கி அந்த மலைமேல் எழுந்தருளி யிருக்கிறார்.

திருவேங்கட மலையிலிருந்து சீனிவாசப் பெருமாள் தன் பத்தினியுடன் இரதத்தில் புறப்பட்டு வந்து இந்த மலைமேல் எழுந்தருளினார். அங்கு தவ மியற்றிக் கொண்டிருக்கும் பிருகு முனிவருக்குக் காட்சி யளித்தார். யாதவ பக்த சிகாமணிகளாகிய மொண்ணையக்கோன், பிராட்டிக்கோன் என்ற இருவருக்கும் சேவை சாதித்து, பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் என்ற திருநாமத்துடன் மலைமேல் கோயில் கொண்டிருக்கிறார். இத் தலத்தில் மற்றொரு நிகழ்ச்சியும் கூறப்படுகிறது. வெங்கடேசப் பெருமாள் திருவுளப்படி திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்த உற்சவ மூர்த்திகளான கள்ளபிரான், உபயநாச்சிமார், சங்கத்தாழ்வார், செல்வர் என்ற பஞ்சபேரத்துடன் வடமலை முதலியார் என்ற பக்தர் மலைவையாவூருக்கு எழுந்தருளச் செய்தார். இது நடந்தது தென்னாட்டில் மகம்மதியர் கலகத்தின் போதென்பர். இந்த மூர்த்திகள் எல்லாம் மிகவும் அழகாகத் திகழ்கின்றன. பார்த்தவர்கள் கண்பெற்ற பயனைப் பெற்றவர்கள் ஆவார்கள். வடமலை முதலியார் கள்ளபிரான் பூசை முதலிய செலவுகளுக்காக மதுராந்தகம் பகுதியிலுள்ள அத்திமானம் என்ற ஊரின் பிரிவாகிய வெண்ணகுத்தன் என்ற சிற்றூரைத் தானமாக அளித்தார்.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி]

(முன் தொடர்ச்சி)

இவ்விதமாக அரசனிடம் பாதி ராஜ்யம் பெற்று குட்டி அரசான ஆளவந்தாரை அவருடைய குரு மிகவும் பாராட்டி நன்றி செலுத்தினர். தன்சிடன் சீரும் சிறப்பும் பெற்று உயர்ந்ததில் அவர் அடைந்த மகிழ்ச்சியினும் ஆக்கியாழ்வானுடைய வித்யா கர்வப் பிடியினின்று தானும் தம் போன்ற வித்வான்களும் விடுதலை பெற்றதே அவருக்கு ஆறுதலளித்தது. இத்தகைய அசாதாரண சீடனொருவனுக்கு கற்பிக்கும் பாக்கியம் பெற்றோமே என்று அவர் மிக மனமகிழ் வெய்தினர். ஆளவந்தாரும் (இனி யமுனைத்துறைவரை ஆளவந்தார் என்றும் அழைக்கலாமே) அரசனிடம் தான் பெற்ற வற்றை யெல்லாம் தன் குருதிருவடிகளில் சமர்ப்பித்து வணங்கி அவர் ஆசீர்வதித்து அவற்றை மீண்டளிக்க அவற்றை குரு ப்ரஸாதமாகப் பெற்றுக் கொண்டார். தம் குருவுக்கு அவர் மனம் நிறையக் காணிக்கை செலுத்திவிட்டு தம்மூர் திரும்பி ஒரு அரசனுக்குரிய சீரும் சிறப்பும் தோன்ற வாழ்ந்து வந்தார்.

பெறுதற்கரிய திருமகனைப் பெற்ற ஈசுவர முனிகள் தம் புதல்வராகிய ஆளவந்தாருக்கு உரிய காலத்திலே திருமணம் செய்து வைத்தார். ஆளவந்தாரும் விதிப்படி இல்லற வாழ்வில் அமர்ந்து அரச போகத்தில் திளைத்தார். சில காலமானவாறே ஈசுவரமுனிகள் தனக்கு அந்திய காலம் நெருங்குவதை உணர்ந்தார். தம் குமாரரின் அவதார வைபவத்தையும், அவருக்காக உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகளிடம் கூறிப் போந்த சில புருஷார்த்தங்கள் பற்றியும் மைந்தருக்குத் தெரிவியாமலிருக்கவும் கூடாது; வியக்தமாக யாவற்றையும் கூறினுலோ மஹாபண்டிதரான மைந்தர் மனம் இல்வாழ்விலிருந்து சடக்கென மாறினுலும் மாறிவிடும்; இள வயதினராய் போகபோக்கியங்களிலே திளைத்திருக்கும் வரை அதனை உதறி யெறியும்படியான வழியிலே அப்போது மூட்டுவதும் உசிதமன்று; என்று தம் மனத்திலே தீர எண்ணி மைந்தரிடம் இவ்விஷயங்களைப்பற்றி சூசகமாக அறிவித்தார். ஆளவந்தாரும் அதைக் கேட்டு அவற்றின் உண்மையை உடனே ஆயாமல் தன் வயதுக்கேற்ப இருந்து விட்டார். சில காலம் கழிந்தவாறே ஈசுவரமுனிகள் தன் பிதாவும், உலகுய்ய வந்த பெருமானுமாகிய ஸ்ரீமந் நாதமுனிகளின் திவ்விய விக்கிரகத்தை மனத்திலே தேக்கி அவர் திருவடிகளே தாரகமாக இப்பிறவிக் கடலைக் கடந்து இறைவனடி சேர்ந்தார். ஆளவந்தார் தம் பிதாவுக்குக் கோலாகலமாக பிரமமேத சம்ஸ்காரங்கள் செய்து பின் தன் பத்னியாளோடு இனிது வாழ்ந்து வந்தார்.

அத் தம்பதிகளின் மனைமாட்சியின் நன்கலங்களாக திருவரங்கப் பெருமாளரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சொட்டை நம்பி என்று நான்கு புதல்வர்கள் அவதரித்தனர். ஆளவந்தாரும் நான்கு புத்திரர்களைப் பெற்ற தசரதனைப் போல ஆனந்தக் கடலில் மூழ்கி இனிது இல்வாழ்வு வாழ்ந்து வந்தார்.

இங்ஙனம் ஆளவந்தார் மனையறத்து வாழ்ந்து வருகையில் சில ஆண்டு செல்லவே இவருக்கு ஜாதகர்ம நாம கரண காலத்தே வந்து இவருக்கு யமுனைத்துறைவர் என்று பெயர் சூட்டி சங்க சக்கரப் பொறியும் ஒற்றிய ஸ்ரீமணக்கால் நம்பி என்ற ஆசிரியர் ஆளவந்தாரைக் கடாக்ஷிக்கத் திருவுளங் கொண்டார். ஸ்ரீஉய்யக் கொண்டார் நியமித்துப் போனபடி ஸ்ரீஆளவந்தாருடைய அவதார ரகஸ்யத்தையும் உய்யக் கொண்டார் அருளிய புருஷார்த்தங்களையும் ஆளவந்தாருக்கு விரைவிலே அறிவித்துவிடவேண்டும் என்று துடித்தவர்தான் மணக்கால்நம்பி. ஆளவந்தார் ஆக்கியாழ்வானை வென்று அரச போகம்பெற்று அமோகமாக வாழ்வு நடத்தியதை மணக்கால் நம்பி கேட்டு பரம மகிழ்ச்சி எய்தினர். எனவே இளைஞர், பரமனருளால் போக போக்கியங்கள் கிடைக்கப் பெற்றவர்: இன்னும் சில காலம் மனையற வாழ்விலே அநுபவிக்கட்டுமே என்றுதான் காத்திருந்தார். ஆளவந்தார் நான்கு புதல்வர்களைப் பெற்று அவர்களோடு விளையாடி மகிழ்வுற்ற

பின் இனிமேல் நாம் நம் பொறுப்பை நிறை வேற்றலாம் என்று நிச்சயித்தார் மணக்கால் நம்பி. அவருக்கும் வாள்களாகி நாள்கள் சென்று கொண்டிருந்தன வல்லவா?

ஒருநாள் மணக்கால் நம்பி ஆளவந்தார் திருமாளிகையை அடைந்தார். ஆசார்யனைச் சீடன் தேடி அடைய வேண்டியதே நியதி. அம்முறையில் ஆளவந்தார் தம்மை நாட வழியேதென்று தேடினார். கடைசியில் ஒரு உபாயத்தைக் கைக் கொண்டார். ஆளவந்தார் திருமடைப்பள்ளியில் ஆளவந்தாருக்குத் தளிகை பண்ணும் (உணவு சமைக்கும்) ஸ்ரீவைஷ்ணவரைத் தெரிந்து கொண்டார். அவர் மூலம் ஆளவந்தாருக்குத் தூதுளங்கீரையில் மிகவும் தேட்டம் என்பதை அறிந்தார். மறு நாள் முதல் தினமும் காலையில் மணக்கால் நம்பி நிறையத் தூதுளங் கீரை கொணர்ந்து திருமடைப்பள்ளியில் கொடுத்து வந்தார். அதை எவ்வாறு ஆளவந்தார் ரஸிக்கிறார் என்றும் கேட்டுத் தெரிந்தார். ஆயிற்று நான்கு மாதங்கள் கழிந்தன. ஸ்ரீமணக்கால் நம்பி எதிர்பார்த்தபடி அவரை ஆளவந்தார் கூப்பிட்டுவிடவில்லை. என்ன செய்வதென்று தோன்றவில்லை. பகவத்யானத்திலே லயித்து அவனை மனத்திலே எப்போதும் காணவல்ல பாகவதன் வெளியே பகவானை மறந்து நடந்தால் அவனை உணர்த்த பகவான் செய்யும் உபாயம் என்ன? தன் வடிவை அவன் அகக்கண்ணினின்றும் மறைத்து விடுகிறான். உள்ளே அவனைக் காணாத பாகவதன் அவனை வெளியே காண அலறுகிறான். அது போன்று எந்தத் தூதுளங்கீரையிலே லயித்து அது வரும் வரலாறு கூட ஆராயாத ஆளவந்தாரை உணர்த்த அத் தூதுளங்கீரையை மறைப்பதன் மூலம் தான் முடியும் என்று கண்டார் மணக்கால் நம்பி. இரண்டு மூன்றுநாள் தூதுளங்கீரை கொண்டுவந்து கொடுப்பதை நிறுத்தினார். ஏதோ அவசரத்தில் ஆளவந்தாரும் முதலில் தூதுளங்கீரை யில்லை என்பதை உணர வில்லை. எனினும் உண்டபின் எப்போதும் போன்ற மனநிறைவு மட்டும் இல்லை. ஆனால் மூன்றாம்நாள் தன் மனநிறைவின் குறையை உணர்ந்து கொண்டார் ஆளவந்தார். பரிசாரகரிடம் ஏன் இரண்டு மூன்று நாட்களாகத் தூதுளங்கீரை இல்லை என்று கேட்டார். பரிசாரகர் விநயத்துடன், "ஏதோ ஒரு வயதான ஸ்ரீவைஷ்ணவர் தினமும் நிறையத் தூதுளங்கீரை ஸமர்ப்பித்து வந்தார். விடிவோரையிலேயே வந்துவிடுவார். தேவரீர் ஆக்ஞைப்படி தான் ஸமர்ப்பித்து வருகிறார் என்று நினைத்திருந்தேன். ஏதோ இரண்டு மூன்று நாட்களாக அந்த ஸ்வாமியைக் காணோம். ஏதேனும் சரீர அசௌக்யமோ என்னமோ" என்று பதிலிறுத்தார். ஆளவந்தாருக்கு வியப்புண்டாயது. 'எவ்வளவு காலமாக இது நடக்கிறது?' என்று கேட்டார். 'ஏறக்குறைய நான்கு மாதங்களாக' என்றார் பரிசாரகர். நமக்குத் தூதுளங்கீரையில் பிரியம் என்று அவருக்கு எப்படித் தெரிந்தது? என்று வினவினார் ஆளவந்தார். பரிசாரகர், "அடியேன் தவறு செய்யவில்லை. அந்த ஸ்வாமி பார்த்தால் மஹாஸாத்விகியாகக் காண்கிறார். தினமும் காலையில் துவாதச ஊர்த்துவ புண்டரமும் தாமுமாக தேவரீர் தகப்பனார் போன்று தோன்றுவார். அவரோடு பேசிக்கொண்டிருக்கையில் தேவரீருக்கு மிகவும் பிடித்த உணவுப்பண்டம் எது என்று பேச்சுப் போக்கிலே கேட்டார். அடியேனும் தூதுளங்கீரை என்று சொல்லி வைத்தேன். மறுநாள் முதல் அந்தஸ்வாமி கீரை ஸமர்ப்பித்து வந்தார். அடியேன் அதை அங்கீகரித்து வந்தது தவறானால் க்ஷமித்தருள வேணும்" என்று தெண்டம் ஸமர்ப்பித்தார். ஆளவந்தார் கடகடவென்று சிரித்து "அபசாரம்! ஸ்வாமீ எழுந்திரும். உம்பேரில் எனக்கு ஏன் கோபம் வரப்போகிறது. தேவரீர் செய்தது ஒன்றும் குற்றமில்லையே. அதிருக்கட்டும்; எனக்குப் பிடித்த பண்டமாகத் தேடியளிக்கும்படி நான் அந்தஸ்வாமிக்கு ஒன்றும் செய்யவில்லையே. அவர் யாரென்றும் என்னால் ஊகிக்க முடியவில்லை. ஏதோ வேறு ஒரு எண்ணத்தோடுதான் இது நடந்திருக்க வேண்டும். சரி! ஸ்வாமீ! அந்தப் பெரியவர் அநேகமாக நாளையே வருவார். வந்தால் அவரைப் போகவிடாது என்பால் அழைத்து வாரும்" என்று கூறிப் போய்விட்டார். பரிசாரகரும் தன் பயம் தீர்ந்து ஸ்ரீமணக்கால் நம்பியை எதிர்நோக்கி யிருந்தார்.

ஆளவந்தார் எதிர்பார்த்தபடியே ஸ்ரீமணக்கால் நம்பி தளதளவென்று ஒளி விடும் இளந் தூதுளங்கீரையை நிறைய ஏந்தியவராய் ஆளவந்தார் திருமடைப்பள்ளி வாயிலிலே மறுநாள் காலையில் காட்சியளித்

தார். தூதுளங்கீரையை வாங்கி உள்ளே வைத்துவிட்டு பரிசாரகஸ்வாமி ஸ்ரீமணக்கால்நம்பியைத் தெண்டம் ஸமர்ப்பித்து "ஸ்வாமீ! தேவரீர் வந்தால் உள்ளே உடனே அழைத்து வரும்படி ஆஜ்ஞை. கிருபை கூர்ந்து இப்படி எழுந்தருளவேணும்" என்று பிரார்த்தித்து அவரை உள்ளே அழைத்துப் போய் ஆளவந்தார் திருமுன்பே இட்டு இதோ அந்த ஸ்ரீவைஷ்ணவர்!" என்று ஆளவந்தாருக்கு அறிமுகப்படுத்தி விட்டுப் போய்விட்டார், தளதளவென்று பழுத்து ஊர்த்துவ புண்டரங்கள் இலங்க நின்ற ஸ்ரீமணக்கால் நம்பியைக் காலில் விழுந்து வணங்கி, ஆளவந்தார் அவருக்குப் பதினாறு வகை உபசாரமும் பண்ணி ஒரு உயரிய ஆதனத்திருத்திக் கூப்பிய கையராய் "ஸ்வாமீ! அடியேனுடைய பிதாவைக் கண்டது போன்றதொரு குதூகலம் மனத்திலே எழுகின்றது. இத்தனை விலக்ஷணமுடைய தேவரீர் அடியேனுக்கு ஸேவை சாதிக்க நேரே எழுந்தருளியிருக்கக் கூடாதா? சுற்றி வளைத்து ஒரு உபாயம் கைக்கொண்டீரே! தேவரீருக்கு என்ன தேவை. பொன்னா? பூமியா? எதுவேண்டுமாயினும் எவ்வளவு தேவையாயினும் ஸமர்ப்பிக்கக் காத்திருக்கிறேன்" என்று விநயமாக விண்ணப்பித்தார். கேட்ட மணக்கால்நம்பி திருவுள்ளத்தே மிக மகிழ்வுற்று, அவரைக் குளிரக் கடாட்சித்து "என் அப்பனே! உம் சரீரகாந்தியையும் அங்கலக்ஷணங்களையும் காணும்போது உமது பாட்டனாரும் அடியேனுடைய ஆசார்யருமான ஸ்ரீமந்நாதமுனிகளை ஸேவித்தது போன்று ஒரு மனநிறைவுண்டாயிற்று. நமக்குப் பொன்னும் வேண்டாம் பூமியும் வேண்டாம். நாம் கொடுக்க வந்தோமே யன்றிக் கொள்ளவல்ல. உம்முடைய பூர்வர்கள் தேடிச் சேமித்து வைத்த அர்த்தங்களை உம்மிடம் சேர்ப்பிக்கும்படி நம்மிடம் வைத்துப் போயிருக்கின்றார்கள். அவற்றை உமக்குக் கொடுத்து க்ருதக்ருத்ய (செய்யவேண்டியதைச் செய்தவ)னாக நம்மை ஆக்கிக்கொள்ளவே வந்தோம். உமது பிதா மகனார் நீர் அவதாரம் செய்யப்போகிறீர் என்று எதிர்நிகழ் உணர்வோடு அவர் தேடிய அர்த்தவிசேஷங்களை எல்லாம் நம்முடைய ஆசார்யரிடத்திலே வைத்து உம்மிடம் சேர்க்கும்படி ஆணையிட்டுத் திருநாடலங்கரித்தார். நம் ஆசார்யரான ஸ்ரீ உய்யக்கொண்டாரும் அவர் வாணாட்கால வரைவிலே நீர் அவதரிக்கப் பெறுமையாலே ஆசார்ய கட்டளை நிறைவேற்றும் பாக்கியம் பெற்றிலோமே என்று மனம்நொந்து அவ்வர்த்த விசேஷங்களை நம்மிடம் கொடுத்து உம்மிடம் உரியகாலத்தே சேர்ப்பிக்கும்படி ஆஜ்ஞாபித்துத் திருநாட்டுக் கெழுந்தருளினார். நாமும் நம் நாட்காலத்தே நீர் அவதரிக்கும் பாக்யம் கிட்டுமோ வென்று பயந்துகொண்டே யிருந்தோம். உலகு செய்த தவப்பயன், நீர் அவதரித்தீர். உம்முடைய பிதா நியமனப்படி நாமே உமக்கு நாமகரணமும் செய்து சங்க சக்கரலாஞ்சனையும் அளித்தோம். உரிய பருவம் வரட்டும் என்று காத்திருந்தோம். உம்முடைய பால்ய வெற்றிப் பிரதாபங்களை எல்லாம் உளம் குளிரக் கேட்டோம். பெறற்கரிய பெருஞ் செல்வம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தீர். அந்த போகநுகர்ச்சியை நீர் சிலகாலம் அநுபவிக்கும்படி பொறுத்திருந்தோம்.

"மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும் மலரடிகண்ட மாமறையாள் தோகைமாமயிலன்னவரின்பம் துய்த்திலாமையில் அத்த இங்கொழிந்து போகம்நீ எய்திப்பின்னும் நம்மிடைக்கே போதுவாய்" என்று பெருமான் மறையவனுக்கருளிய அருள்மொழியைத் திருமங்கைமன்னன் ஸாதித்திருந்தது நம் நினைவுக்கு வந்தது. அதுபோல் நீரும் இச்செல்வ நுகர்ச்சியை முற்றூட்டாகச் சிலகாலம் அநுபவிக்கவேணு மென்றிருந்தோம். மனைவாழ்வை முறைப்படி மாண்புடன் வாழ்ந்து சக்கரவர்த்தியைப்போல் நான்கு புதல்வர்களைப் பெற்று மகிழ்ந்தீர். அவர்களும் உரிய பருவம் எய்தியிருக்கின்றார்கள். இனி உமது மூதாதையர் நம்மிடம் வைத்துப்போன செல்வத்தை உம்மிடம் சேர்ப்பித்து விடவேண்டும் என்று நிச்சயித்தோம். இச் செல்வம் பிற செல்வம்போல் நம்மைத் தான்தேடி வருவதொன்றன்று. அதனை நாம் தேடவேண்டும். எனவே அம்முறைப்படி நம்மை நீர்தேட ஒருவகை செய்தோம். அவ்வளவே" எனக் கூறிமுடித்தார். ஆளவந்தார் ஸ்ரீமணக்கால் நம்பி சொன்னவற்றையெல்லாம் உடல் புளகேறக் கண்களிலே உவகைநீர் ஊற்றெடுத்தோட வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தவர் மணக்கால்நம்பி கூறி முடித்தவாறே தன் வயமிழந்து கீழேவிழுந்து மணக்கால் நம்பி திருவடிகளிரண்டையும் பற்றிக் கொண்டு தழுதழுத்த குரலில் "ஸ்வாமீ!

அடியேன் என்ன பாக்யம் செய்தேன் அடியேன்பால் தேவரீருக்குள்ள ஆதரம்தான் என்னே. அதுவும் அடியேனுடைய பூர்வர்கள் திருவருளே! ஸ்வாமீ! இனியும் ஏன் தாமதம். அடியேன் ஸித்தனயிருக்கிறேன். அவ்வர்த்த விசேஷங்களை கிருபைகூர்ந்து அடியேனுக்கருள் செய்யவேணும்'' என்று பிரார்த்தித்தார்.

ஸ்ரீ மணக்கால் நம்பி ஆளவந்தாரை வாரியெடுத்துத் தழுவி மிகவும் மகிழ்வுற்றவராய் அவரை அணைத்தபடியே "வாராய்! என் அப்பனே! ஸந்நிதியும் க்ஷேத்ரமும் ஒன்றிரண்டு நாளில் காட்டிக்கொடுக்கக் கூடியவையல்லவே! நாள்தோறும் படிப்படியாக, முறையாக நாம் ஊட்டப்பெற வேண்டியதாகையாலே தினந்தோறும் நாம் வந்து உமக்கு அதை ஊட்ட வகைசெய்தால் நாம் உமக்கேற்கக் கூடிய வகையிலே அவற்றை ஊட்டுகிறோம்'' என்று விடையளித்தார். ஆளவந்தாரும் தம் மாளிகையிலுள்ளாரனைவருக்கும் நம்பிகள் எப்போது வந்தாலும் தடையின்றி எங்கும் செல்ல விடுமாறு கட்டளை பிறப்பித்தார்.

அதுமுதல் நம்பிகள் தினமும் ஆளவந்தார் திருமாளிகைக்கு எழுந்தருளிப் பரமார்த்தங்களை ஆளவந்தாருக்கு பிரஸாதித்து வந்தார். முதலிலே வேதஸாரமான ஸ்ரீபுருஷஸூக்தம் உபதேசித்தார். பின் படிப்படியாக ஸ்மிருதிகளில் உயர்ந்த மனுஸ்மிருதியையும், புராணங்களில் தலைசிறந்ததான ஸ்ரீ விஷ்ணுபுராணத்தையும் அருளிச்செய்து ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்தைப் பண்படுத்தினர். பின்னர் எல்லா அர்த்தங்களையும் கைப்படு பொருளாகக் காட்டிக்கொடுக்கும் ஸ்ரீ பகவத்கீதையின் பதினெட்டு அத்தியாயங்களையும் விரிவாயும் தெளிவாயும் ஓத உன்னி குன்றமெடுத்தபிரான் பார்த்தனுக்குரைத்தாற்போல் கீதையை உபதேசித்தார். ஆனல் பகவான் ஒருமுகூர்த்தத்தில் உரைத்த கீதையை நாள் ஒன்றுக்கு ஒரு அத்தியாயமாகப் பதினெட்டு நாள் விரிவுரையோடு நம்பிகள் உபதேசம் செய்தார்.

"………குன்ற மெடுத்தான் பார்த்தனுக்குலவும்
தேர்மேலிருந்து அன்பால்''

''அருளும் பகவத்கீதையெனும்
அத்தியாயம் பதினெட்டும்
உருளும் சகடம் உதைத்தபிரான்
உரைத்தபடியே ஆங்கு அவற்குத்
தெருளும் ஆர்த்திமிகத் தோன்றச்
செப்பினர் நாள்பதினெட்டில்
மருளும் பிறவித் துயர்கடிந்த
மணக்கால் நம்பி…………''

என்று கூறும் பழைய செய்யுட் குரும்பரையொன்று.

இவ்வண்ணம் கீதையின் பொருள் கேட்ட ஆளவந்தாருக்கு உள்ளத்தே ஆர்த்தி மிகவும் பிறந்தது. அதன் காரணமாக தாம் கேட்டவற்றால் கூறப்படு பொருளைக் காண வேண்டும் என்ற அவா பெருகி வெள்ளமிட்டது. நம்பிகளிடத்தே விநயத்தோடு ஆளவந்தார் "ஸ்வாமீ! இவற்றால் சொல்லப்பட்ட பொருளைக் காணலாகும் உபாயம் உண்டோ'' என்று இழந்த குரலில் கேட்டார். மணக்கால் நம்பியும் அவரை ஏகாந்தமாக அருகே அழைத்து அவரது வலச்செவியிலே "மெய்ம்மைப் பெருவார்த்தை'' என்று பெரியாழ்வார் போற்றிய சரமச்லோகார்த்தத்தை மெல்ல ஸாதித்தருளினர். கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டப்பெற்ற அவ்வர்த்தத்தை வாங்கி ஏற்ற ஆளவந்தாருக்கு பால்பிடிக்கப் பெற்ற நெற்கதிர்போலே, அவ்வர்த்த கன விசேஷத்தாலே சரணுகதி நெஞ்சிலே பெருகித் தேங்கிற்று. அதன் பலனுக சாத்விகம் தலைப்பெய்தது. தலைதானே தாழ்ந்து வணங்கிற்று. பகவதநுகூலம் வந்து கூடப்பெற்றமையாலே சர்வலோக சரண்யனை பகவான்பால் பற்று மிகுந்தது. இறைப்பற்று மிகவே இகப்பற்றில் அவருக்கிருந்த பற்று தன்னடைவே பிடி தளர்ந்து அது உறங்குவான் கைப்பண்டம் போல்தானே நழுவிற்று. மணக்கால் நம்பி அவர் நிலைகண்டு மிகவும் மனம்மகிழ்ந்து அவருக்கு மந்திர ரத்னமான திருமந்திரத்தையும் துவயத்தையும் (திருமந்திரம் "ஓம்நமோ நாராயணய'' என்ற எட்டெழுத்து; துவயம் என்பது "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே: ஸ்ரீமதே நாராயணய நம:'' என்ற இரு வாக்கியங்கள்) அவருக்கு உபதேசிக்க ஆளவந்தார் திருமாமகள் கேள்வன் சேவடிச் செந்தாமரையில் தேங்கிய உள்ளத்தராய் அது கிட்டாமையாலே ஏற்பட்ட தாபத்தாலே மனம் அனல் சேர் மெழுகாக உருகினர்.

"இருந்த சரமச்லோகத்தைத் திருமந்திரத்தை
எழில் துயத்தைப்
பொருந்த வுரைத்தார் ஆளவந்தார்
புவன மேழும் தொழுதேத்தக்
குருந்திலேறி ஆய்மகளிர் கோலக்கூறை
யெடுத்த மரும்
கருந்தண் முகில்மேல் மனம்இருத்திக்
கரைந்து கனல்சேர் மெழுகானுர்"

என்றது செய்யுட் குருபரம்பரை. ஆளவந்தார் நிலேகண்ட மணக்கால் நம்பிகள் அவர் உள்ளம் பாங்காகப் பக்குவமாயினமை கண்டு உளம் மகிழ்ந்து, நிலேயற்ற செல்வமெல்லாம் தன்னடையே நெகிழ்ந்து நீங்க நிலேயான செல்வத்தை நாடித் தேடி ஏங்கும் உள்ளத்துக்கு எய்ப்பினில் வைப்பாக உள்ள நிதி ரவ்யய: "மன்பதைக் கெய்ப்பினில் வைப்பு" என்று ஸகஸ்ரநாமத்தில் போற்றப்பெரும் அக் கொள்ளக்குறை யாக்கொழு நிதியை இனி அவருக்குக் காட்டலாம் என்று நிச்சயித்து ஆளவந்தாரை நோக்கி "நசஜ்ஞான ஸ்யஸங்கோச: நசைவ யமகோசர: தஸ்மாத் ரங்கம் மஹாபுண்யம் கோநஸவேத புத்திமான்" என்று பெரியோர்கள் கூறினர்கள். ஜ்ஞான வர்த்தகமாய், நமன்தமரால் ஆராயப் பட்டறியாததாய் புண்ய வர்த்தகமுமாயிருந்துள்ள திருவரங்கத்தை இனிநீர் ஸேவிக்க வேண்டிய காலம் பக்குவமாகிவிட்டது. நாம் திருவரங்கம் போதும் உம்முடைய நிதியை நீர் ஸேவிக்கலாம்" என்று கூறினர். ஆளவந்தாரும் தம் பேற்றுக்கு மகிழ்ந்து அதி விரைவிலே அரங்கமாநகர் செல்ல ஆயத்தம் செய்தார்.

(தொடரும்)

ஆரணி:—குயப்பாளையம் வேதபுரீசுவரர் திருக்கோயில் பஞ்சபுராணத்திருப்ப புகழ் வார வழிபாட்டுச்சபையின் 14ஆம் ஆண்டு நிறைவு விழாவும், திருநாவுக்கரசர் குருபூசை விழாவும் 29, 30—4—62 தேதிகளில் நடைபெற்றன.

திருத்தணி:—சுப்பிரமணிய சுவாமி கோயிலில் திரு. முத்துசாமி தீக்ஷிதர் அவர்களின் 186 ஆவது ஜெயந்தி விழா 8, 9, 10—4—62 தேதிகளில் நடைபெற்றது. அவ் விழாவில் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர், ஆணையர் மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள். இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

கோவிலூர்:—மந்திரபுரீசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—4—62 முதல் 19—4—62 வரை நடைபெற்றது. சமயச்சொற் பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

ஆழ்வார்திருநகரி:—எம்பெருமானுர் கோயிலில் திருவாதிரை திருநட்சத்திர விழா 29—4—62 முதல் 8—5—62 வரை நடைபெற்றது.

ஸ்ரீபெரும்புதூர்:—பாஷ்யகாரசுவாமி கோயிலில் சைத்ரோற்சவம் 29—4—62 முதல் 9—5—62 வரை நடைபெற்றது.

திருமக்கோட்டை:—அரங்கனுதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 23—4—62 முதல் 4—5—62 வரை நடைபெற்றது.

சென்னை—ஏழுகிணறு:—ஆஞ்சநேயசுவாமிகோயிலில் ஸ்ரீராமநவமி விழா 4—4—62 முதல் 15—4—62 வரை நடைபெற்றது. 4—4—62 ஆரம்பவிழாவில் சென்னை முதலமைச்சர் திரு. கே. காமராஜர் அவர்கள் கலந்துகொண்டார்கள். பாஷ்யக்காரர் என்னும் உடையவர் உற்சவம் 29—4—62 முதல் 9—5—62 வரை நடைபெற்றது.

திருவாஞ்சியம்:—வாஞ்சிநாதசுவாமி கோயிலில் ஒய்வுவிடுதி அடிக்கல் நாட்டுவிழா சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ.,பி. எல்., அவர்களால் 1—5—62ல் நடைபெற்றது.

சலவன்பேட்டை:—நரசிம்மசுவாமி கோயிலில் வரகவி நரசிம்மதாஸ் சுவாமிகளுக்கு 113வது குருபூஜை விழா 2—5—62ல் நடைபெற்றது.

சென்னை—சௌகார்பேட்டை:—அருணுசலஈசுவரர், வரதராஜப்பெருமாள் கோயிலில் திருநாவுக்கரசு நாயனுர் திருநாள் விழா 29—4—62ல் நடைபெற்றது.

திருவண்ணாமலை
அருணாசலமுடைய மகாதேவர்க் கோயில் கல்வெட்டுப் பாடல்

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், திருவையாறு]

—O—

இது நூற்று முப்பத்தாறு அடிகொண்ட நேரிசைப்பா என்னும் பாடலாலமைந்தது. பல்லவ மன்னராகிய கோப்பெருஞ் சிங்கரும், அவரது புதல்வரும் அண்ணாமலையார்க்கும், உண்ணாமுலையாருக்கும், முருகக்கடவுளுக்கும் அமைத்த திருப்பணிகள், ஆடை யாபரணங்கள், தோப்பு, ஏரி குளம் முதலிய அறநிலையங்கள் பற்றியும் எடுத்துக் கூறுவது. இவற்றிற் பலவற்றிற்கு அரசராகிய தமது பெயரை இட்டு அவனியாளப் பிறந்தான் திருவாசிகை என்று வழங்கியது முதலியவை கவனிக்கத்தகும். இதில் காணப்படும் தோப்பு, குளம் முதலியவற்றில் சில விசேட தினங்களில் கடவுள் எழுந்தருளி உற்சவங் கொண்டருளுவதற்கு வகுத்தவை. ஏனையவை மாந்தர் நன்மைக்கென வகுக்கப் பட்டவை என்பதனையும் இப்பாடல் குறிப்பிடுகின்றது. இதில் அருணாசல முடைய மகாதேவரைக் "கண்ணாரமுதர்" எனக் கூறுவது திருவாசகத்தில் "அண்ணாமலையெம் அண்ணாபோற்றி கண்ணா ரமுதக் கடலே போற்றி" என வருவதில் உள்ள தொடராகும்.

கோப்பெருஞ் சிங்கதேவன், பல்லவர் பெருமான், சகலபுவனச் சக்கரவர்த்தி, அவனியாளப் பிறந்தான், குரை கழற் காடவன், பரதம் வல்ல பெருமாள், நிச்சங்கன் என்று கூறிக்கொள்கின்றனன். நிச்சங்கன் என்பதற்கு அகப்பற்று, புறப்பற்று அற்றவன் என்று பொருள் கூறுவதினும், பிறருதவி வேண்டாதவன் (அசகாய சூரன்) என்று பொருள் கொள்ளுதலே நன்று.

அவன் புதல்வன் காடவகுமாரன், காங்கயன், ஆட்கொண்டதேவன், அவனியாளப் பிறந்தான், வேணாவுடையான் என்ற பட்டம் உடையவன். கொங்கு நாட்டில்தாராபுரம் தாலூகாவில் பண்டை யரசரால் சிறப்புப் பெற்ற ஒரு குடும்பத்தினர் இன்றும் வேணாவுடையாக் கவுண்டர் எனக் கூறிக் கொள்கின்றனர். வேணாவுடையார் என்பது வேணாடுடையார் என்ற தொடரின் மரூஉ. கொடுந் தமிழ் நாடுகளைக் கூறும் வெண்பா வொன்றில்

"தென்பாண்டி குட்டங் குடங்
கற்கா வேண்பூழி,
பன்றியருவா வதன் வடக்கு
நன்றாய, சீதமலாடு
புனனாடு செந்தமிழ்சே,
ரேதமில் பன்னிரு
நாட்டெண்"

எனக் கூறப்படும் வேண் நாடு என்பது இதுவே.

ஸ்வஸ்திஸ்ரீ

கார்வளர் மேனிக் கமலக் கண்ணன்
பார்வளருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்

சொன்மறை யரக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணா ரமுதர்
அருண மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்

காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமுஞ்
செங்கதி ரெறிக்கு மங்க சுத்தமும்
பாகு வலையமும் பைம்பொற் பலதொழில்
திருவுடை யாடையுந் திருக் கழற் கீழிடும்
பெந்த பாதமும் பிறங்கிருட் கண்டமும்

இளஞா யிற்றி னெழினிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யளாப் பிறந்தார்
திருவா சிகையுஞ் சிங்கா சனமுங்
கற்பக விருக்கமு முத்தின் பந்தலும்
ஓடரி மைக்க ணுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற்பெரு மாளுக்
கினமா ணிக்க மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமா ளென்னுந்
திருவா சிகையுஞ் சிறந்தசெங் கதிரொளி

விளங்குமா ணிக்கமுந் துளங்கும் வயிரமுங்
கட்டிய பொலன்தருக் கூடமஞ் சனமுங்
கண்ணா ரமுதர் காமக் கோட்டத்
துண்ணா முலையா முமையவள் தனக்குப்
பருமணி நிறைத்த திருவுடை யாடையும்

வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியும் தேவியர் மேனியும்
பைந்நிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவும்
மல்லை காவல னிச்சங்க மல்லன்

பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி இவன்மகன்
வாடா வாகைக் காடவ குமாரன்

வான்புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தண்புனற் பாலியும்
பெண்ணையுங் கோவலும் மேவுகை யுடையவன்
எண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் வீர ரசனி

கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவர்
ஆரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து

நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்து மேம்படத் தங்கோன்
வாகையுங் குரங்கும் விசயமுந் தீட்டிய
வடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகங் கடந்த காங்கயன்

கண்ணா ரமுதர் கனங்குழை பாகத்
தண்ணா மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையுங் கொடுத்துப் பாவல் ருரைப்பில்
நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த

வென்றிபுனை தோளாட் கொண்ட தேவன்
வேணா வுடையா னென்னும் பெயரான்
நீணாள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பளி யறையும்

திருவமு தேற்றும் பெருமண் டபமும்
விரிவுடன் செய்த திருக்காக் கள்ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண் டபமுஞ் செழுமலர் தொடுத்த
கண்ணிவா டாது கண்ணிமை யாது

மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்கு சுட ரெறிக்கும்
படித்தள மென்னவும் படிமுன் றுக்கும்
அடித்தள மென்னவு மடையா மன்னவர்
மலைத்தளம் பறித்தம் மன்னவர் சுமந்த

சிலைத்தளங் கொண்டு செய்த சிலைத்தளமும்
எல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும் பண்டாரமும் பிறைமுடிப் பெருமாள்
இந்நாள் வந்திருந் தமையுந் தோன்றவும்

முன்னா ளளந்த முறைமை காணவும்
வாட்டங் கண்ணியர் மனைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்த
நான்முகத் தொருதனி நாயகி தனக்கும்

அப்படி வகுத்த வணிநெடுந் தெருவுஞ்
செப்பிய கதிரவர் திசைவலம் போதுஞ்
சோதி நன்மணி வீதிகள் இலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க
மேலைவகுத் தனைய காங்கயன் மடமுங்

காணிற் பயிலுங் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
யிருமருங் கிரட்டவு மிமையவர் துதிக்கவும்
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்புந் தீர்த்தமு மாகிய

வமுத நன்னதி யனைத்திலுந் தூய
தமிணாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசங்
கொண்ட காடவ குமாரன் தோப்புங்
கவன வெம்பரிக் கதிர்வழி தடுத்த

வவனி யாளப் பிறந்தான் தோப்புந்
தலநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்
வெம்மை நாளில் வெஞ்சுர னடைந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயும்
அம்மை மடமு மைய னேரியும்

வெற்பகந் துளைத்தெனக் கற்புடை யராவி
அடனெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்ல பெருமாள் கிணறும்
அளிமுரல் கமலமு மாம்பலு மலர்ந்து
குளிர்புனற் காடவ குமாரன் தடாகமுங்

குன்றுகரை யன்னக் கோடுயர் நெடுங்கரை
வென்றுமலை கொண்ட பெருமா ளேரியுஞ்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்
வளஞிமி ருர்க்கு மடவிளம் பாளை

விசை கமழ் வீர ராயந் தோப்புங்
.........ற்குச் செய்து கொடுத்த
கடலென நிறைந்த கார்வயல் விளைக்கும்
விச...... ...சைநிச்சங்க மல்ல னேரியும்

காங்கயன் தடாகமும் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
இவ்வகை யாவையுஞ் செய்தன னதனாற்
பாவை பாகன் சேவடித் தாமரை
யணிந்த சென்னியர் ஆர்க்குங் கண்ணினர்

அணிந்த நீற்றின ராகம நன்னெறி
படிந்த நெஞ்சினர் பரசம யங்களைக்
கடிந்த வாணையர் கண்ணுதற் பெருமான்
ஆதி நாதனாய் வேடங்கொண்டு
பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்

டார்த்தெழு மந்நா ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதரர்
ஆதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்

றெண்ணிய நாற்பத் தெண்ணு யிரவரும்
திருவரு ளிவன்மேல் வைத்தனர்
இருநிலந் தன்னி லினிது வாழ்கெனவே

[Taken from the South Indian Inscriptions Volume VIII]

குறிப்புரை

அடி 1. அரசரைத் திருமாலாகவே கூறும் வழக்கு உண்மை அறிக.

அடி 2. காதிற் கம்பி—திருவேட மென்னும் ஓரணி. மடங்களில் துறவிகள் அணிவது. திருவாரூர்த் தியாகராசப் பெருமானுக்குக் கம்பிக்காதழகர் என்னும் பெயருண்மை அறிக.

அடி. 42. தண்டகநாடு—தொண்டை நாடு. பாலி—பாலாறு.

குறிப்பு: சென்ற இதழில் (அதாவது 1962—மாலை 4—மணி 8) பக்கம் 383—வரி 10இல் திருஞான சம்பந்த அடிகள் என்பதை, சிவஞான சம்பந்த அடிகள் என்று திருத்திக் கொண்டுபடிக்கவும்.

வள்ளியூர்:—சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சித்திரைத் திருவிழா 3—5—62 முதல் 12—5—62 வரை நடைபெற்றது.

கோவூர்—சுந்தரேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 8—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

ஆணையர் அலுவலகம்
இந்துசமய அறநிலைய (ஆட்சித்) துறை
சென்னை-34.

டி. எஸ். எண். 4363/61 (ஏ2) நாள் 14—3—62.

பொருள் :—புதுப்பித்தல் செப்பனிடுதல் - பணியினை செயற்படுத்தல்-இந்துசமய நிலையங்கள் (கோயில்கள்) - இந்து அல்லாதாருக்கு ஒப்பந்தம் கொடுத்தல் - சம்பந்தமாக அறிவுறுத்தல்.

இந்து சமய நிலையங்களை—கோயில் முதலியவற்றை—புதுப்பிக்கும் செப்பனிடும் பணியினை சில இடங்களில் இந்துக்கள் அல்லாதருக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டிருப்பதாக ஆணையரின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஒப்பந்தங்களை, இதர சமயப்பற்றுள்ளவர்களிடத்தில் ஒப்படைப்பதால் அவர்கள் டி வேலைகளைச் செய்யுங்காலை இதர சமயத்தவர்கள் அனுமதிக்கப்படாத இடங்களுக்குச் செல்ல வாய்ப்பு இருப்பதால் அது கோயில்களின் பழக்கவழக்கங்களுக்கு முரண்பாடானது என்ற காரணத்தால் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும். ஆகையினால், கோயிலுக்குள் செய்யவேண்டிய புதுப்பித்தல், செப்பனிடுதல் போன்ற வேலைகளின் ஒப்பந்தங்களை இந்துக்களுக்கே கொடுப்பது நல்லது என்று கருதப்படுகிறது.

கோயில்களில் குறிப்பிட்ட இடத்திற்கு அப்புறம் இந்துக்கள் அல்லாதார்களை அனுமதிப்பது பழக்கவழக்கத்திற்கு புறம்பானதாகவிருக்குமாதலால் சமய நிலையங்களின் நிர்வாகப் பொருப்பில் உள்ளவர்கள், டி வேலைகளுக்கு இந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தே ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுத்தேர்ந்தெடுக்கப்படவேண்டும் எனக்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம். எஸ். சாரங்கபாணி,
ஆணையர்.

சேலம் சுகவனேசுவரர் கோயில்

காா்கொண்ட மணிமிடறும் கனல்மழுவும்
மறிமானும் கரத்திலேந்திச்
சீா்கொண்ட மதிநதியும் ஆடரவும்
கரந்தைவன்னி தேனுா்கொன்றைத்
தாா்கொண்ட செஞ்சடையும் அடியா்மனத்
தாரமுதாய்த் தழைக்குங்கோமான்
தோ்கொண்ட சேலபுரிச் சுகவனத்தெம்
இறையடியைச் சோ்ந்துவாழ்வாம்

—தலபுராணம்.

சேலம் மாவட்டத்தின் தலைமையிடம் சேலம் என்ற பெருநகரம். இப்பெயர் ஏற்பட்டதன் காரணங்களைப் பலவாருகக் கூறுவர். சேரர் இல்லம் என்பது சேலம் என்ருயிற் றென்பர்; சேலை நெசவு சிறப்புற்ற இடமாதலின் சேலம் என்பர்; உத்தமசோழபுரம் கிருஷ்ணம ராஜாவின் சாசனத்திலும், கொங்குமண்டல சதகத்திலும் குறிக்கப்பட்டுள்ள சாலநாடு என்பது சேரநாடு என்பதன் மரூஉ மொழியென்றும் கூறுவர்; சேரம் என்பது சேலம் என்ருயது என்று சொல்லுவர்; சைலம் அல்லது மலைசூழ்ந்த ஊராயினமையின் சேலம் என மருவி வழங்கப்பெற்ற தென்பாரும் உளர். சேலம் நகரைச் சுற்றிலும் குமரமலை, நாமமலை, தலைமலை, பொய்மான்மலை, கந்தமலை, கஞ்சமலை, சடாயுமலை, சோ்வராயன்மலை முதலியவை சூழ்ந்திருத்தலால் சைலம் என்ற பெயரே சேலம் என்ருயிற்று என்று கருதுவதற்கிடமுண்டு. இந்நகரில் உள்ள பல கோயில்களில் சுகனேசுவரர் கோயிலே சிறந்து விளங்குகிறது. ஊரின் நடுநாயகமாய்த் திகழ்வதுமதுவே. இத்திருக்கோயில் சேலம் சந்திப்பிலிருந்து கிழக்கே நான்குகல் தூரத்திலும், சேலம்நகர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து கால் கல் தொலைவிலும் இருக்கிறது.

இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள்ளன. அவைகளுக்குக் கோபுரங்களும் இருக்கின்றன. ஒரே பிரகாரம்தான். கிழக்குக் கோபுரத்திற்குமுன் நாலுகால் மண்டபம், பதினுறுகால் மண்டபம் இருக்கின்றன. அவைகளுக்கெதிரில் திருக்குளம் காணப்படுகின்றது. தெற்குப் பிரகாரத்தில் அறுபத்து மூவர், நால்வர், சப்தகன்னியர் சந்நிதிகள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் தென்புறம் ஐயப்பன், வலம்புரிவிநாயகர், கங்காளமூர்த்தி, காசிவிசுவநாதர் சந்நிதிகளும், வடபக்கம் பஞ்சபூதலிங்கங்கள், கலைமகள், கஜலட்சுமி, ஜேஷ்டாதேவி சந்நிதிகளும் இருக்கின்றன. வடமேற்கு மூலையில் அறுமுகப் பெருமானின் தனிக்கோயில் அமைந்துள்ளது. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுரர் சந்நிதியும், கிழக்குப் பிரகாரத்தில் பைரவர், சூரிய பகவான் சந்நிதிகளும் உள்ளன. சுகவனேசுவரர் (மூலவர்) சந்நிதி கிழக்குநோக்கியும், சுவர்ணும்பிகை சந்நிதி தெற்கு நோக்கியும் இருக்கின்றன. மூலவர் சுயம்பு லிங்கமூர்த்தி.

கோயில் இருக்கும் இடத்தை சுகவனம், பாவநாசம், பட்டீச்சுரம், நாகீச்சுரம், மும்முடித்தலைவாயில் என்று தலபுராணம் கூறுகிறது. சாபம்பெற்ற சுகமுனிவர் வழிபட்டுப் பேறு பெற்றதால் சுகவனம் என்றும், தேவர்கள் பூசித்துப் பாவம் நீங்கப்பெற்றதால் பாவநாசம் என்றும், காமதேனுவாகிய பசு வழிபாடுசெய்து இறைவனருள் பெற்றமையின் பட்டீச்சுரம் என்றும், ஆதிசேடன் பூசனைபுரிந்து பேறு பெற்றதால் நாகீச்சுரம் என்றும், சேர சோழ பாண்டியர் மூவரும் வழிபட்டதால் மும்முடித்தலைவாயில் என்றும் பெயர்கள் உண்டானதாகக் கூறப்படுகிறது. இவ்வூர் சௌந்தரராஜப் பெருமாள் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் இராஜஸ்ரய சதுர்வேதமங்கலம் என்று ஊரின் பெயர் குறிக்கப் பெறுகிறது.

சுகம் (கிளி) வழிபட்டதால் இறைவனுக்கு சுகவனேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணம் கூறுகிறது. கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் கிளிவண்ணமுடையார் என்று காணப்படுகிறது. எப்படியோ

கிளிவண்ணம், கிளிவனம் ஆகி சுகவனம் ஆகி விட்டது. பாடல்பெற்ற பாண்டி நாட்டுப் பதிகளில் ஒன்று திருப்பூவணம் என்பது. தேவாரத்தில் பூவணத்தெம்புனிதர் என்றும், கல்வெட்டுக்களில் பூவணமுடைய நாயனர் என்றும் காணப்படுகிறது. அங்கும் பூவணம், பூவனம் ஆகிப் பின் புஷ்பவனம் ஆகிவிட்டது. இறைவன் பெயரும் புஷ்பவனேசுவரர் தான். அதைப்போலவே கிளிவண்ணம், சுகவண்ணம் ஆகி, சுகவனம் ஆய்விட்டது. இன்னும் இத்தலத்துப் பெருமானுக்கு பட்டீச்சுரர், நாகீச்சுரர், பசவநாசர், கிளிவனநாதர், மும்முடிநாதர் என்ற திருப்பெயர்களும் உண்டு. சுவர்ணம்பிகைக்கு சொன்னம்மை, மரகதவல்லி, பச்சைநாயகி என்ற திருநாமங்களும் உண்டு.

இத்தல விருட்சம் அரசமரம். வேதங்கள் பெருமானை அரசமர வடிவில் வழிபட்டனவாம். இத்தலத்தில் பாவநாச தீர்த்தம், தேனு தீர்த்தம், அமண்டுக (தவளைபாயாத) தீர்த்தம், மனுசரண தீர்த்தம் இவைகளுள் ளனவாகத் தலபுராணம் கூறுகிறது. சேர்வ ராயன் மலையில் உற்பத்தியாகி இந்நகர் ஊடே ஓடி காவிரியுடன் கலப்பது மணிமுத்தாறு. "மணியும் முத்தும் கொழித்துறலால் மணிமுத்தாறு" என்று பெயர் உண்டாயிற்று.

கோயிலில் நாள்தோறும் ஐந்துகால பூசை நடைபெறுகின்றது. எல்லா மாதங்களிலும் உரிய விழாக்கள் நிகழ்கின்றன. வைகாசி விசாகத்தைக் கடைசி நாளாகக் கொண்டு பத்து நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. சித்திரை ஆண்டுப்பிறப்பு நாளில் சிறப்புவிழா நடைபெறுகிறது. தை மாதம் முதல் தேதியில் சுவாமி குகையென்ற இடத்துக்கு எழுந்தருளுகிறார்.

இத்தலத்தைப்பற்றி வடமொழியில் சுகாரண்ய மகாத்மியம் என்ற நூல் ஏட்டுச் சுவடியாக இருக்கிறது. தமிழில் பாவநாசத் தலபுராணம் என்றநூல் செய்யுட்களால் இத் தலத்தின் பெருமைகளைக் கூறுகின்றது. இது, அட்டாவதானம் சொக்கலிங்கப் புலவர் என்பவரால் இயற்றப்பெற்றது. பாயிரம், திருக் கயிலாயச் சருக்கம், வீரபத்திரச் சருக்கம், பாவநாசச் சருக்கம், நதிச் சருக்கம், வீரபத்திரச் சருக்கம், சரவதிச் சருக்கம், காமதேனுச் சருக்கம், அனந்த சருக்கம், மனுசரணச் சருக்கம், கிளிபூசித்தச் சருக்கம், குட்டம்தீர்த்த சருக்கம், பரிச்சித்துச் சருக்கம் என்னும் பன்னிரண்டு சருக்கங்கள் கொண்டது. 672 பாடல்களை உடையது. பிரமதேவன் சாபத்தால் சுகமுனிவர் கிளியுருவம் அடைந்தார். பாவநாசப்பதியில் வந்து இறைவன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு பலாமரத்தில் மற்றக் கிளிகளுடன் வசித்து வந்தது. வச்சிர காந்தன் என்ற வேடன் ஒருவன் கிளிகளை விரட்டினான். எல்லா கிளிகளும் ஒரு புற்றில் போய் ஒளிந்துகொண்டன. வேடன் கோபங் கொண்டு புற்றை மண்வெட்டியால் வெட்டினான். கிளிகள் இறந்தன. சுகமுனிவரான அரச கிளி தன் சிறகுகளை விரித்து அடியிலுள்ள சிவலிங்கப் பெருமானைக் காத்தது. என்றாலும் வேடன் அந்த கிளியையும் வெட்டினான். இறைவன் திருமுடிமேலும் வெட்டு விழுந்தது. (அந்த அடையாளத்தை இலிங்க மூர்த்திமேல் காணலாம்.) அரசகிளி சாபம் நீங்கப்பெற்று சுகமுனிவராயிற்று. அவர்,

சிறுமை யாயினும் செல்வங்க ளாயினும்
மறுமை யிம்மைக ளாயினும் மற்றினி
உறுதிநின் சரணென் றெழியா துறப்
பிறைய ணிந்தாய்அருள் செய்யும் பெற்றியே

என்று இறைவனை வேண்டி வரம் பெற்றார். அவருடைய உற்சவசிலை கோயிலில் இருக்கிறது. தலத்துக்குச்சுகவனம் என்ற பெயர் உண்டாயிற்று.

மகததேசத்தில் மாதவி என்ற இடைப் பெண்ணுக்கு பிறவி என்ற மகள் இருந்தாள். ஔவையார் மழையில் நனைந்து கொண்டு அவள் வீட்டிற்கு வர அவ்வம்மையாருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்தாள். ஔவையார் தாமே அப்பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பதாகச் சொல்லி சேலத்திலிருந்துகொண்டு,மூவேந்தருக்கும் திருமுகம் தீட்டி அனுப்பினார். மாதவியும் தன் மகளுடனும், மணமகனுடனும் சேலம் வந்தாள். மூவேந்தர்களும் வந்தார்கள். திருமணமும் நடைபெற்றது. மூவேந்தர்களும் மணமக்களை ஆசீர்வதிக்கு முன் ஔவையாரை ஒரு அற்புதம் நிகழ்த்தவேண்டும் என்றனர். ஔவையார், சுகவனப் பெருமானை நினைந்து மூன்று பனந்துண்டுகளை மரமாக வளர்த்து

பழம் தரும்படிப் பின்வரும் பாடலைப் பாடினார்:—

திங்கட்குடையும் சேரனும்
சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட
வந்துநின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத்தீன்று
பச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றிஅடிக்
கண்கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று
பழந்தரவேண்டும் பனந்துண்டமே.

அவ்வளவில் பனந்துண்டுகள் மரமாக வளர்ந்து பழங்களைத் தந்தன. மூவேந்தர்களும் மணமக்களுக்கு ஆசிவழங்கி, தாங்கள் வந்ததற்கு அடையாளமாக சேரபுரி, உத்தம சோழபுரம், வீரபாண்டி என்ற மூன்று ஊர்களை அமைத்தார்கள். சேலத்துக்கு மும்முடித்தலைவாயில் என்ற பெயர் ஏற்பட்டது. பாரியின் மகளிரான அங்கவை, சங்கவை என்ற இருவரையும் ஔவையார் திருக்கோவலூர் மன்னனுக்கு மணம்செய்து வைத்த வரலாறு ஈண்டு நினைக்கத்தக்கது.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் திருக்கயிலாயம் சென்றதைக் கேட்ட ஔவையார் இத்தலத்திலிருந்தே விநாயகர் உதவியால் முன்னால் கயிலாம் அடைந்தார் என்று பின்வரும் தல புராணப் பாடல் கூறுகிறது:—

கருணை நிறையுங் கடலனைய
கைம்மா முகத்தோன் ஔவையைக்கொண்
டருண நிறத்தன் துதிக்கையால்
அண்டகோ டிக்குப்பால் வென்
வருண வரைக்கோபுர முகப்பு
வாயில்வைக்க அருள் கொண்டாள்
தருண மாதுபங் கன்வரைச்
சாரல் சேரன்வரக் கண்டாள்.

இந்த செய்திகளையன்றி, தலபுராணத்தில் வேறு சில வரலாறுகளும் உள்ளன. புராணசாரபோற்றித் திருஅகவலினும் அவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

அருணகிரிநாதர் இத்தலத்தெழுந்தருளியுள்ள முருகப்பெருமான் பேரில் கீழ்க்காணும் திருப்புகழ்ப் பாடலை ஓதியருளியுள்ளார்:—

பரிவுறு நாரற் றழல்மதி வீசச்
சிலைபொரு காலுற் றதனாலே
பனிபடு சோலைக் குயிலது கூவக்
குழல்தனி யோசைத் தரலாலே
மருவியல் மாதுக் கிருகயல் சோரத்
தனிமிக வாடித் தளராதே
மனமுற வாழத் திருமணி மார்பத்
தருள்முரு காவுற் றணைவாயே
கிரிதனில் வேல்விட் டிருதொளை யாகத்
தொடுகும ராமுத் தமிழோனே
கிளரொளி நாதர்க் கொருமக னாகித்
திருவளர் சேலத் தமர்வோனே
பொருகிரி சூரக் கிளையது மாளத்
தனிமயி லேறித் திரிவோனே
புகர்முக வேழக் கணபதி யாருக்
கிளையவி நோதப் பெருமாளே.

சேலம் 'வித்தியாலங்கார' சிவசுப்பிரமணியக் குருக்கள் என்பார் இயற்றிய 'ஸ்ரீசுவர்ணாம்பிகை பிள்ளைத்தமிழ்', "ஸ்ரீசுவர்ணாம்பிகை பஞ்சரத்தினம்" என்ற நூல்களும் இத்தலத்தைப் பற்றியனவே. சென்னை அருட்கவி சேதுராமன் என்பவர் சுகவனேசர், சொர்ணாம்பிகைமீது பாடல்கள் பாடியிருக்கின்றார்.

கோயில் பழமையான கோயிலாயினும் புதிய தோற்றத்துடன் காணப்படும். இப்போதும் திருப்பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கோயிலில் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுக்கள் காணப்படுவதால் இது 12-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கோயிலாக இருக்கவேண்டும். கோயிலிலுள்ள நிருத்தமண்டபம் சுந்தரபாண்டியனால் கட்டப்பெற்றது. 10-ஆம் நூற்றாண்டிலிருந்த வீரபாண்டியனிடம் பணிபுரிந்த நாராயணதேவன் காலத்தில் கோயில்மதில்களும், திருக்குளமும், சத்திரமும் கட்டப்பெற்றன. கோயிலுக்கு முன்னுள்ள கல்யாண மண்டபமும் நாலுகால் மண்டபமும் 1823-ல் மாவட்ட கலெக்டராக இருந்த டேவிஸ் என்பவரின் நன்கொடையால் கட்டப்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. பின்னர், கோயில் தருமகர்த்தராக இருந்த திரு. K. P. A. R. இராமசாமி முதலியார், சென்னை உயர்மன்ற நீதிபதியாயிருந்த திரு. K. சுந்தரம் செட்டியார் இவர்களுடைய பெருமுயற்சியால் உள் மண்டபம், விநாயகர் கோயில், முருகன் கோயில், மேற்குக் கோபுர

வாயில் முதலியவைகள் இரண்டு இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்று 27-4-1947ல் சிறப்பாகக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

கோயிலினுள்ள இரண்டு கோபுரங்களும் சிற்ப வேலைப்பாடமைந்தவை. மூல மூர்த்தியான சுயம்புலிங்கம் சிறிது ஒரு பக்கம் சாய்ந்துள்ளது. திருமுடிமேல் வேடனால் வெட்டப்பட்ட தழும்பு காணப்படுகிறது. கிளிமுகம் கொண்ட சுகமுனிவர் உருவம் மிக அழகானது. முருகன் கோயிலின் சுற்றுச் சுவர்களில் ஆறுபடை வீடுகளைக் காட்டும் மூர்த்திகளின் சிற்பங்கள் செதுக்கப்பெற்றிருக்கின்றன. "ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே" என்ற கந்தர் கலிவெண்பாவின் கூற்றுக்கேற்ப ஆறுபடை வீடுகளையும் இங்கேயே கண்டு வழிபட்டு மகிழலாம். கோயிலைப் புதுப்பிக்கும்போது கண்டெடுக்கப்பட்ட பெரியம்மை தேவியின் சிலை எருதுமுகங் கொண்ட புதல்வர்களுடன் தனி இடத்தில் வைக்கப் பெற்றிருக்கிறது.

இந்தக் கோயிலில் பத்து கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. அவைகளை அரசாங்கத்தார் படியெடுத்து 1882-ஆம் ஆண்டில் 42 முதல் 51 வரையுள்ள எண்களாகப் பதிவு செய்திருக்கின்றனர். அவை, சுகவனேசர் கர்ப்பக்கிரக வாயில் வலது இடதுபுறங்கள், நிருத்த மண்டபத்தூண், கோயில் வடபுறத்துச் சுவர், சுவர்ணாம்பிகை சந்நிதியிலுள்ள ஒருகல், அம்பிகை கோயில் வாயிலின் இரு புறங்கள் இந்த இடங்களில் காணப்பெறுகின்றன. கோபரகேசரிவர்மன், கோராஜ கேசரிவர்மன், சுந்தரபாண்டியன் இந்த மன்னர்கள் காலத்தில் ஏற்பட்டவை. சுந்தர பாண்டியன் காலம் கி. பி. 1275—1302 என்று கூறுவர் ஆராய்ச்சியாளர். கல்வெட்டில் இறைவன் பெயர் கிளிவண்ணமுடையார் என்று குறிக்கப் பெறுகிறது.

சேலத்தில் இன்னும் பார்க்கவேண்டிய பல கோயில்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை சௌந்தரராஜப்பெருமாள், காசி விசுவநாதர், கோட்டை பெரியமாரியம்மன், செவ்வாய்ப்பேட்டை பிரசன்ன வெங்கடாசலபதி, ஷை மாரியம்மன், அம்மாபேட்டை குமரகுரு சுப்பிரமணியர், குமரகிரி ஞான தண்டபாணி, குகை அம்பலவாணசுவாமி, இராமலிங்கசௌடேசுவரி, கன்னிகாபரமேசுவரி, வீரபத்திரசுவாமி என்ற பெருமாள், மீனாட்சிசுந்தரேசர் முதலியோர் கோயில்களாம். குமர குருசுப்பிரமணியர் கோயில் 35 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பெற்றது. வடக்கு வாயிலில் கோபுரம் இருக்கிறது. மீனாட்சி சொக்கநாதர் சந்நிதிகள் இருக்கின்றன. சௌந்தரராசப்பெருமாள்கோயில் மகாமண்டபத்தூண்களிலும், கர்ப்பக்கிரக வாயில் வலதுபுறமும், வடக்குச் சுவரிலும், சுந்தரவல்லித்தாயார் சந்நிதியைச் சுற்றிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோமாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி, சுந்தரபாண்டியன் இவர்கள் காலத்தில் ஏற்பட்டவை அக்கல்வெட்டுக்கள். சேலத்தை 'இராஜஸ்ரய சதுர்வேதமங்கலம்' என்று அவை குறிக்கின்றன. குமரகிரி ஞானதண்டபாணி கோயிலைப்பற்றி இவ்விதழில் தனிக்கட்டுரை வெளியிடப்பெற்றிருக்கிறது.

சிகரமா மலையும் சினகர மாடமும்
மகரமீனுகளும் மணிமுத்துநதியும்
திகழ்பல வனங்களால் சிறந்திடுஞ் சேல்
நகரின் நாமமும் நாலோ ரிரண்டாய்
விளங்க வைத்த வித்தக போற்றி!
சொன்னம்மை பாகச் சுகவனேச போற்றி!
அத்தா போற்றி! அமலா போற்றி!
முத்தா போற்றி! முதல்வா போற்றி!
அங்கணு போற்றி! அரசே போற்றி!
சங்கர போற்றி! சம்புவே போற்றி!
போற்றி போற்றி! புனிதா போற்றி!
போற்றி போற்றி! சிவசிவ போற்றி!

—புராணசாரப் போற்றித்திரு அகவல்.

தேவகோட்டை:—அரங்கநாதப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 1—5—62 முதல் 13—5—62 வரை நடைபெற்றது.

நாட்டரசன் கோட்டை:—கண்ணுடைய நாயகி அம்மன் கோயிலில் பிரம்மோற்சவம் 10—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

அம்பாசமுத்திரம்:—கிருஷ்ணசுவாமி கோயிலில் வைகாசி விசாகப்பெருவிழா 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

நரசிம்மப்பெருமான்

[திரு. K. R. இராஜகோபாலன், B. Sc. (Hons) தாம்பரம்]

இறைவன் நல்லவர்களைக் காத்து தீயவர்களை ஒழிக்க சந்தர்ப்பத்துக்கொப்ப பற்பல வடிவங்களை எடுத்து வந்துள்ளான் என்பது யாவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட அவதாரங்களில் ஒன்றுதான் நரசிம்மாவதாரம்; பிரகலாதன் என்ற சிறுவனின் இன்னல்களைத் தீர்க்கவும், அவன் தந்தையான இரணியனின் கர்வத்தை அடக்கவும் எடுத்த—பாதி மனித உருவும் பாதி சிங்க உருவும் கொண்ட அச்சந்தரும்—அவதாரம் என்பதும் தெரிந்த ஒன்றுதான். அந்த விபவாவதாரத்தைப் பற்றி சிறிது விரிவாக கூறுகிறது இந்த கட்டுரை.

கோயில்கள்

தனியாக சிங்கப்பெருமானுக்கே என்று ஏற்பட்டுள்ள தலங்கள் பல உண்டு. முக்கியமாக—கடிகாசலம் என்ற சோளங்கிபுரம், (சோளசிங்கபுரம்) அஹோபிலம் என்ற சிங்கவேள் குன்றம், சேலத்தை அடுத்துள்ள நாமக்கல், செங்கற்பட்டுக்கு அருகே உள்ள சிங்கப்பெருமாள் கோயில், ஆந்திரப் பிரதேசத்தில் வால்டேருக்கு அருகையில் உள்ள சிம்மாசலம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

கடிகாசலத்தில் மலைமேல் கோயில் கொண்டுள்ளார் சிங்கப்பெருமான். மகாவிஷ்ணுவை "பர்வதானும் அதிபதி" என்று அழைப்பதுண்டு. அதற்கொப்ப பல இடங்களில் நரசிம்மர் மலைகள் மேல்தான் எழுந்தருளியுள்ளார். இந்த மலையும் கோயிலும் சுற்றுப் புறங்களிலிருந்து வெகு தொலைவிலேயே காணக்கிடைக்கின்றது. இங்கு ஒரு நாழிகை (கடிகை) தங்கி, ஆண்டவனை வழிபட்டாலும் முத்தி பெறலாம்என்று கூறுவர். முதலாழ்வாகளில் ஒருவரான பேயாழ்வார் இத்தலத்தை "வண்டு வளம் கிளரும் நீள்சோலைவண்பூங்கடிகை"என்றும்பாடியுள்ளார். இங்குள்ள மூர்த்தியானது கிழக்கு நோக்கி, மிகவும் கம்பீரதோற்றமுடையதாய் கண்களில் சாந்தபாவத்துடன் உள்ளது. தாயார் திருநாமம் அமிருதவல்லி. இங்கு மற்றுமொரு சிறப்பு இந்த சந்நிதியை எதிர் நோக்கி வேறொரு மலைமேல் எழுந்தருளியுள்ள ஆஞ்சநேயரின் "யோகநிலை" உருவம். சங்கு சக்கரங்களுடன் சதுர்புஜனாய் விளங்கும் ஆஞ்சனேயர் வேறு எங்கும் காணக்கிடைக்காத காட்சி.

நாமக்கல்லிலும் நரசிம்மரும், ஆஞ்சனேயரும் ஒருங்கே காணப்படுகின்றனர். இங்கும் மலைமேல்தான் நரசிம்மர் சந்நிதி. கீழே அதை நோக்கியபடியே நின்ற திருக்கோலத்தில் ஹனுமார். இவரால் ஒன்று சேர்க்கப்பட்டனராம் திருமகளும், பெருமாளும். பல்லவ காலத்தினதாய் பழமை வாய்ந்த இக்கோயிலானது கல்லினின்று குடைந்தெடுக்கப்பட்டது. சங்கு, சக்கரம் அபயஹஸ்தத்துடன் எழுந்தருளியுள்ள சுவாமியின் திருமேனி சாந்தமும் கருணையும் நிரம்பப் பெற்றுள்ளது. உற்சவ மூர்த்திகளும் அழகான உருவங்களே.

கர்னூல் மாவட்டத்திலுள்ள அஹோபிலம் என்றக்ஷேத்திரம், நந்தியால் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து 38 கல் தொலைவில் உள்ளது. "சிங்கவேள் குன்றம்" என்றால் யாவராலும் விரும்பத்தக்க கட்டழகு உடைய நரசிம்மர் எழுந்தருளியிருக்கும் மலை. இந்த இடத்தில் ஒன்பது நரசிம்ம சந்நிதிகள் உள்ளனவாம். இங்கு ஏழு குன்றுகள் உள்ளதால் இத்தலத்தை "சிங்கவேழ் குன்றம்" என்றும் கூறுவர். இத்திருப்பதியின் பெயரையொட்டியே ஸ்ரீவைஷ்ணவ மடங்களில் முக்கியமானதொன்றான அஹோபிலமடம் ஆதிவண் சடகோபரால் நிறுவப்பட்டுள்ளது. இத்தலத்தைக் குறித்த ஆழ்வார்கள் பாடல்களிலிருந்து இதன் பழமையை அறிகிறோம். திருமங்கை ஆழ்வார் அருளிய பாடல்களில் இத்தலத்தின் வர்ணனையும் கிடைக்கிறது. சிங்கங்கள் தாங்கள் கொன்ற யானைகளின் தந்தங்களைக் கொண்டு வந்து பகவானின் திருவடிகளிலே சமர்ப்பிக்கின்றனவாம்; இங்கு நாய்களும், கழுகுகளும் புலிகளும் கூடியுள்ளனவாம்; கொழுத்த வெயிலும், அந்த வெய்யிலின்

அழலைச் சுமந்து வீசும் கழல் காற்றும் ஒலி செய்கின்ற நெருப்பினால் பாதி கருகிய மூங்கிற் புதர்களும், நெல்லி, வாகை பனைமரங்களால் நிறைந்தும் இவை களைக் காட்டிலும் கொடியவர்களாய்த் திரிகின்ற வேடர்களின் வில்சத்தத்தாலும், பறை இறைச்சலாலும் யாத்திரீகர்கள் அச்சப்படும்படியாக அமைந்த இடம் என்று அறிகிறோம்! இந்தமலையின் சுற்றுப் புறங்களில் 15—16ம் நூற்றாண்டு கல்வெட்டுக்கள் பல கிடைத்துள்ளன. இவைகளிலிருந்து, கோல்கொண்டா சுல்தான் இப்ராஹீமினால் அனந்தபுரத்து சைவ அரசர்களின் உதவியால் இக்கோயில்கள் சிதைக்கப்பட்டன வென்றும், பின்பு சகாப்தம் 1506-ல் வீரப் பிரதாப வீரரங்கராய தேவரால் மீட்கப் பெற்றதாயும் அறிகிறோம். இது அஹோபில மடத்தின் ஆறுவது அதிபரான பராங்குச வண் சடகோப ஜீயரவர்களின் காலத்தில் நடந்ததாம். இவர் எழுதிய பலநூல்களில் "நரஸிம்மஸ்தவம்" என்பதும் ஒன்று.

ஆந்திரப் பிரதேசத்தில் தான் நரசிம்ம வழிபாடு அதிகம் என்று தெரிகிறது. கல்வெட்டுக்களிலிருந்து பற்பல நரசிம்ம சந்நிதிக்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. அவைகளில் பழமையானது பெல்லாரி மாவட்டத்திலுள்ள அரங்கபுரம் என்னும் கிராமத்தில் இருக்கும் நரசிம்மர் கோயிலின் இரண்டு கல்வெட்டுக்கள். அவை 10—12ம் நூற்றாண்டுக்குரியன. குண்டூர் மாவட்டத்தில் மூன்று இடங்களிலும், கடப்பையில் இரண்டு இடங்களிலும், நெல்லூர் மாவட்டத்தில் நாலைந்து இடங்களிலும் சிங்கப்பெருமானின் ஆலயங்கள் உள்ளனவென்பதை கல்வெட்டுக்களால் அறிகிறோம். விஜய வாடாவிற்கு அருகேயுள்ள மங்களகிரி நரசிம்மருக்கு பானகம்தான் மிகவும் விருப்பம் என்று தெரிகிறது. மற்றும் சேலம் மாவட்டத்தில் பெண்ணகரத்துக்கு அருகே ஹளேபுரத்தில் நரசிம்மர் கோயிலில் கன்னட மொழியில் கல்வெட்டுள்ளது.

மற்றும் மைசூர் நாட்டில் மேலைக் கோட்டை என்று பிரசித்திபெற்ற திருப்பதியில் ஒரு மலைமேல் அழகிய சிங்கரின் ஆலயம் ஒன்று உள்ளது. காஞ்சி பேரருளாளன் சந்நிதியிலும் ஓர் குகா நரசிம்மர் கோயில் உள்ளது. இவரைத் தரிசித்தப் பிறகே வரதராஜனைக் காணச் செல்வர்கள் பக்தர்கள். திருவல்லிக்கேணி பார்த்தஸாரதிப் பெருமாளுக்குப் பின்புறம் கோயில் கொண்டுள்ள "தெள்ளிய சிங்கனைப்" பற்றி ஆழ்வாரும் பாடியுள்ளார். இது பற்றி சென்னையிலுள்ளவரும் நன்கு அறிவர். கல்கருடனுக்கு பெயர்போன நாச்சியார் கோயிலிலும் ஒரு யோக நரசிம்மர் சந்நிதி உள்ளது.

சிற்பங்கள் முதலியன

புகழ்பெற்ற எல்லோரா மலைக் குகைகளில் பல நரசிம்ம சிற்பங்கள் அழகே வடிவாயும், பல அச்சத்தை யூட்டும் கோரவடிவாயும் அமைந்துள்ளன. காஞ்சிபுரம் வரதராஜர் ஆலயத்தின் நூற்றுக்கால் மண்டபத்தில் பற்பல திருக்கோலங்களில் அமைந்துள்ள சிங்கப்பெருமானின் சிற்பங்களைக் கண்டுகளிக்கலாம். திருக்குறுங்குடி அழகிய நம்பி கோயிலிலுள்ள இரண்டு அழகான சிங்கவடிவங்களும், நாகப்பட்டினத்தில் இரணியனை சம்ஹாரம் செய்யும்போது கோர உருக்கொண்ட சிற்பமும், திருக்கண்ண மங்கை உக்கிர நரசிம்மர் சிலையும், திருகோஷ்டியூரில் வடவேசுவரர்,தக்ஷிணேசுவரர்என்று அழைக்கப்படும் இரணியனோடு போராடும் வகையில் அமைந்துள்ள சிற்பங்களும் பக்தர்களால் கண்டு அனுபவிக்க வேண்டியவைகள். நாச்சியார் கோயிலிலுள்ள யோக நரசிம்மனின் செப்புச்சிலை கலை அழகு நிரம்பி சங்கு சக்கரங்கள் இருகைகளில் துலங்க, மற்றிருகைகள் முழங்கால்கள் மேல் யோக முத்திரையில் இருக்க கம்பீரமாக வீற்றிருந்தருளுகிறது.

சிங்கப்பெருமானைப்பற்றிய பாடல்கள்

சாதாரணமாக எல்லா ஆழ்வார்களுமே நரசிம்மாவதாரத்தை உகந்து பாடியிருக்கிறார்கள். முக்கியமாக திருமங்கையாழ்வார் நம் நாட்டிலுள்ள எல்லா திருப்பதிகளையும் கண்டு, அங்குள்ள மூர்த்தங்களை கண்ணார சேவித்து அழகழகான பாடல்களால் வாயார வாழ்த்தியுள்ளார். அவர் பாட்டுக்களிலிருந்து ஓரிரு எடுத்துக் காட்டுகள்:—

அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர்
கோளரியாய், அவுணன்
கொலைக்கையாளன் நெஞ்சிடந்த
கூருகிருளனிடம்

மலேத்த செல்சாத்தெறிந்த பூசல்
வண் துடிவாய் கடுப்ப
சிலைக்கை வேடர் தெழிப்பருத
சிங்கவேள் குன்றமே.
[பெரிய திருமொழி 1-7-2]

மிக்கானை மறை ஆய்விரிந்த
விளக்கை என்னுள்
புக்கானை புகழ்சேர் பொலி
கின்ற பொன் மலையை
தக்கானை கடிகத்தடங்குன்றின்
மிசை இருந்த
அக்காரக்கனியை அடைந்து
உய்ந்து போனேனே.
[பெரிய திருமொழி 8-9-4]

இராமன் கிருஷ்ணன் இரு அவதாரங்கள் தாம் ஆழ்வார்களால் அதிகமாகப் பாடப்பெற்றவைகள். மற்றவைகள் நரஹரியானபெருமானின் அவதாரமே அதிகமாகப் பாடப்பட்டுள்ளது என்று சொல்ல வேண்டும். எல்லா பாடல்களிலுமே சிங்கப்பெருமானின் அழகினை ஆய்ந்து ஆய்ந்து கூறியுள்ளார்கள், நம்மாழ்வார் "சிற்றத் தோடருள் பெற்ற அவன் அடிக் கீழ்புக நின்ற செங்கண் மால் நாற்றத்தோற்றச் சுவையொலி உறல் ஆகி நின்ற எம்மான்" [திருவாய்மொழி 6-5-6] — என்று அருளியுள்ளார்.

பத்து அவதாரங்களையும் கூறும் பாடல்களுள் கீழ்க்கண்டது சொல்நயமும் எளிமையும் கொண்டதாகும்:—

"மீனெடு ஆமைகேழல் அரிகுறள்
ஆய் முன்னும் இராமன் ஆய்
தான் ஆய் பின்னும் இராமனுய்
தாமோதரனுய் கற்கியும்
ஆனுன் தன்னைக் கண்ணபுரத்து
அடியான் கலியன் ஒலிசெய்த
தேன் ஆர் இன்சொல் தமிழ்மாலை
செப்ப பாவம் நில்லாவே."
[பெரிய திருமொழி 8-8-10]

கவிச்சக்கரவர்த்தியான கம்பன் தந்துள்ள வருணனை யானது பயங்கரமானதாகவே உள்ளது:—

"நசை பிறந்து இலங்கப்பொங்கி,
நன்று நன்று, என்ன நாக்கு
விசை பிறந்த உருமுவீழ்ந்தது
என்ன ஓர் தூணின் வென்றி
இசை திறந்து அமர்ந்தகையால்
எற்றினன்; எற்றலோடும்
திசை திறந்து அண்டம்
கீறிசிரித்தது செங்கட்சீயம்"

வேதாந்த தேசிகர் என்று புகழ்பெற்ற ஸ்ரீவைஷ்ணப் பெரியார் அருளிய கிரந்தங்கள் பற்பல; அவற்றுள் நரசிம்மனைப் பற்றி "காமாஸிகாஷ்டகம்" என்ற எட்டு பாடல்களையும் தம் தசாவதார ஸ்தோத்திரத்தில் ஒரு பாட்டையும் பாடியுள்ளார். [காம— விரும்பிய, அல்லது விரும்பத்தக்க, ஆஸிகா ஆஸனம்]

இப்பாடல் காஞ்சிபுரத்து வேகவதி நதிக்கரையிலுள்ள யோக நரசிம்மனைப் பற்றியது. மற்றும் தசாவதார ஸ்தோத்திரத்தில் இவ்வவதாரத்தின் சிறப்பினைப் புதுமையானதும் அழகானதுமான வழியில் விவரித்துள்ளார்.

"திடீரென்று மகாராட்சசனுன இரணியனின் வீட்டுத்தூணனது பிரம்மாவுக்கு தாத்தாவாகி விட்டது!"

துவைத மதாச்சாரியாரான மாத்வாச்சாரியார் தம்முடைய ஸ்தோத்திரமொன்றில் மிகச் சுருக்கமாக நரசிம்மனின் தனிப் பெருமைகளை எடுத்துக் காட்டியுள்ளார். கீதகோவிந்தம் எழுதிய ஜயதேவரும் தம் தசாவதார தோத்திரத்தில் சிங்கனின் பெருமையை விவரித்திருக்கிறார்.

ஆதிசங்கரரும்பற்பல பாடல்களை அளித்துள்ளதை நாம் அறிவோம். அவற்றுள் இலட்சுமி நரசிம்ம கருணாரச தோத்திரத்தில் பிராட்டியாரை மடிமேல் வைத்து அணைத்தவாறு கொலுவிருக்கும் பெருமானை அழாக அனுபவித்துப் பாடுகிறார்.

மற்ற விஷயங்கள்

அவுணனும் இரணியகசிபுவை தன் கூர்மையான உகிராலேயே பிளந்து இரத்தம் சிதற அவனைச் சங்காரம் செய்த பின்பும் நரசிம்மத்துக்குக் கோபம் தணியவில்லையாம். அது எப்படி தணிந்தது என்பதற்குப் பல கதைகள் உள்ளன. இலட்சுமிதேவியானவள், தேவதைகளோடும், பிரகலாதனேடும் கூடி நரசிம்மத்தை துதித்துப் பாட அதன் உக்கிரம் குறைந்து, பக்தர்கள் விரும்பும் திருக்கோலத்தில் இலட்சுமிநரசிம்மராகக்

காட்சியளித்தாராம். ஆந்திரப் பிரதேசத்தில் செஞ்சுக்கள் என்ற மலைஜாதியினர் உண்டு. அவர்களிடையே உள்ள ஒரு வரலாற்றின் படி உக்கிர நரசிம்மன் உறுமிக்கொண்டே காடுகளிலும் மலைகளிலும் சஞ்சரித்துக்கொண்டிருந்ததாம். அப்பொழுது அங்கு செஞ்சுப்பெண் ஒருத்தியைக் கண்டதாம். இதே அவர் கோபத்தைத் தணித்துவிட்டதாம்; பிறகு அந்தபெண்ணை மணந்து கொண்டாராம். அவள் இலட்சுமியின் அவதாரமென்றும், அவளுக்கு செஞ்சு லட்சுமி என்றும் பெயர் தந்துள்ளனர்.

திருக்குடந்தைக்கு அருகில் திருபுவனம் என்ற சிவத்தலமொன்றுண்டு பட்டுநூல் நெசவிற்கு தமிழ் நாட்டில் பெயர் பெற்ற இடங்களில் இதுவும் ஒன்ருகும். அங்குள்ள கம்பஹரேசுரவர் கோயிலில் சரபரின் சந்நிதியுள்ளது. உலகத்தினை அழிக்க முற்பட்ட நரசிம்மரை அடக்க தேவர்கள் சிவபிரானைப் பிரார்த்திக்க, அவர் சிங்கமுகத்துடனும், விரிந்த சிறகுகளுடனும் அண்டபேரண்ட பட்சி (சரப) உருவெடுத்து நரசிம்மத்தின் சீற்றத்தை அடக்கி, தேவர்களின் பயத்தைப் போக்கினராம்.

மற்ருெரு வரலாற்றின்படி பிரகலாதன் விருப்பத்திற்கிணங்க நரசிம்மர் சாளக்கிராம உருவில் கண்டகீ நதிக்கரையில் வீற்றிருந்தாராம். இவரைக் காணத் திருமகள் கமலவனத்திடையே கமலாலயம் (குளம்) அமைத்து அதற்கு அருகில்தவமிருந்தாளாம். ஆஞ்சனேயர் சஞ்சீவிபர்வதத்தை எடுத்து வரும் பொழுது இந்த சாளக்கிராமத்தையும் எடுத்துக்கொண்டு, தாகம் தீர்த்துக் கொள்ள கமலாலயத்திற்கு வந்து, சாளக்கிராமத்தை வைத்து, நீர் அருந்துகிருர். பின்பு நரசிம்மரைத் தூக்க, அவர் எழமறுத்துவிடுகிருர்! திருமகளையும் சேர்த்துக் கொண்டு அனுமாருக்குக் காட்சி அளிக்கிருர், அழகிய சிங்கர்! இந்த காட்சியும் இதை கண்டுகளிக்கும் அனுமனது நெடிதுயர்ந்த உருவமும் இன்றும் நாமக்கல்லில் காணக்கிடைக்கின்றன.

திருமணஞ்சேரி: உத்வாகநாத சுவாமி கோயிலில் திருக்கல்யாண விழா 10—5—62 ல் நடைபெற்றது.

திருவாரூர்: ஆதிரெத்தினேசுவரர் கோயிலில் வைகாசி விசாக மகோற்சவம் 9-5-62 முதல் 20—5-62 வரை நடைபெற்றது.

திருபுல்லாணி: பட்டாபிராமசுவாமி கோயிலில் சைத்ரோற்சவம் 8-5-62 முதல் 18-5-62 வரை நடைபெற்றது.

திருமருதூர்: நயினர் கோயிலில் நாகநாதசுவாமி கோயிலில் வசந்தோற்சவம் 9-5-62 முதல் 21-5-62 வரை நடைபெற்றது.

காளையார்கோயில்: சோமேசுவரக் கடவுளின் பிரம்மோற்சவம் 9-5-62 முதல் 19-5-62 வரை நடைபெற்றது.

சென்னை: பெத்துநாய்க்கன்பேட்டை வரதராசப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 17-5-62 முதல் 26—5—62 வரை நடைபெற்றது.

திருமுண்டீச்சரம்: சிவலோகநாத சுவாமி ஆலயத்தில் அப்பர் சதயத்திருவிழா 20-4-62 ல் நடைபெற்றது.

பாம்பணி: நாகநாதசுவாமிக்கு பிரம்மோற்சவம் 9-5-62 முதல் 20-5-62 வரை நடைபெற்றது.

தாராபுரம்: காடு ஹனுமந்தராயசுவாமி கோயிலில் இரதோற்சவம் 11-5-62 முதல் 20—5-62 வரை நடைபெற்றது.

சேலம் கோட்டை: சுந்தரராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 11-5-62 முதல் 8-5-62 வரை நடைபெற்றது.

பண்ணப்பட்டு: சோமசுந்தரேசுவர சுவாமி கோயிலில் நடைபெற்ற இலட்சார்ச்சனை விழா 4-2-62 ல் முடிவுற்றது.

குமரகிரி தண்டாயுதபாணிகோயில்

கருவமனமேக கடினகுணமாற
கசடு வழிபோக விபரீதக்
கவலை நிலையோட கலகஉளம்தீய
கருணை வடிவேலைக் கரமேந்தி
பருவ மயில்மீது பகலவனும்நாண
பருவுருவ சேவற் கொடியாட
பசிய் குறமாது பணிபிடியினோடு
பயலென் துதிபூண வருவாயே!
அருணகிரி நாதன் அழகுபுகழ்ப்பாவை
அனுதினமுஞ் சூடும் முருகோனே!
அருமை யபிராமி அரியயனுஞ்சூழ்
அரன் பிரணவங்கேட்க அருள்வோனே!
குருபர னென்றோதி குமியுமடியார்கள்
குறைகளையுஞ் ஞானக் கதிரோனே!
குலவு தமிழோதும் குறுமுனிவன் போற்றும்
குமரகிரி மேவும் திருவேளே!

—ஸ்ரீகுமரகிரி குருப்புகழ்.

பண்டைத் தமிழ்மக்கள் நிலத்தை நான்கு வகையாகப் பிரித்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காடுசார்ந்த இடமும் முல்லை; நாடும் நாடு சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். இவை நான்கும் அல்லாதது பாலைநிலம் என்றும் கூறுவர். இந்த நிலங்களுக்குரிய தெய்வங்கள், வாழ் கின்ற மக்கள், உரிய பொருள்கள் முதலிய வைகளையும் கூறியிருக்கின்றனர். குறிஞ்சிக் குத் தெய்வம் முருகன்; முல்லைக்குக் கடவுள் திருமால்; மருதத்திற்கு இந்திரன்; நெய்தலுக்கு வருணன். "மாயோன் மேயகாடுறை யுலகமும் சேயோன்மேய மைவரை யுலகமும்" என்று கூறியிருக்கிறார் தொல்காப்பியனார். நம் நாட் டின் பல இடங்களில் குன்றங்களின்மேல் குமரன் கோயிலில் கொண்டெழுந்தருளி யிருப்பதை நாம் காண்கிறோம். திருப்பரங் குன்றம், பழனி, திருத்தணி, வள்ளிமலை, சென்னிமலை, மருதமலை, வேழிமலை, பெரும் பேறு, மயிலம், சுவாமிமலை (கட்டுமலை), விராலிமலை, திருச்செங்கோடு, பழமுதிர் சோலை, குன்றக்குடி, கழுகுமலை, திருமலை முதலியவை முக்கியமான முருகனுடைய மலைக்கோயில்கள். இவைபோன்றதொன்று குமரகிரி தண்டாயுதபாணி கோயில். இது சேலம் மாவட்டத்தில் சேலம் நகரத்தின் பாங்கர் உள்ள ஓரு குன்றின்மேல் அமைந்திருக் கிறது. சேலம் நகரின் ஒரு பகுதியாகிய அம்மாபேட்டையிலிருந்து ஒருகல் தொலைவி லுள்ளது. பஸ் முதலிய வண்டி வசதிகள் உண்டு. குமரன் கோயில் மிகப் பழயகோயில் அன்று. சில ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்றதுதான். இறைவன் பழமைக்கும் பழ மையன், புதுமைக்கும் புதியவனன்றோ! மலை மேல் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்ப வன் ஞான தண்டாயுதபாணி. துறவுக் கோலத்துடன் விளங்கி அன்பர்கட்கெல்லாம் திருவருளை வாரி வழங்குகின்றான்.

இந்த மலைக்கோயிலுக்குச்செல்ல சேலம் நகர பஸ்ஸில் அம்மாபேட்டைக்குச் சென்று அங்கிருந்து நடந்தோ அல்லது வண்டிகள் மூலமோ ஒருகல் தொலைவு போனால் அடைய லாம். முதலில் பெரிய ஏரி ஒன்று மலைக்கு முன்னால் இருக்கிறது. மலையடிவாரத்தில் நாவல் மரம் ஒன்றும், அதையடுத்து ஒருமண் டபமும் இருக்கின்றன. விநாயகசதுர்த்திக்கு அடுத்து வரும் சஷ்டியில் ஒரு சிறந்த திரு விழா நடைபெறுகிறது. முருகப்பெருமான் தமிழ் மூதாட்டியான ஔவைப்பிராட்டிக்கு நாவற்பழம் கொடுத்த கதையை யாவரும் அறிவர். அறுமுகக் கடவுள் ஔவையாரை ஆட்கொள்ள வேண்டுமென்று திருவுளம் கொண்டார்; ஒரு மாடுமேய்க்கும் சிறுவனாக ஔவையார் போகும் வழியிலுள்ள ஒரு நாவல் மரத்தின்மேல் ஏறியமர்ந்திருந்தார். ஔவையார் நடந்துவந்த களைப்பினால் அம் மர நிழலில் தங்கினார், நீர்வேட்கை எடுத்தது. மரத்தின்மேலிருந்த பையனைப் பார்த்து சில நாவற்பழங்கள் போடும்படி கேட்டார். சிறு வன், "பாட்டி! சுடும்பழம் வேண்டுமா?

சுடாதபழம் வேண்டுமா?" என்று கேட்டான். தண்டமிழ் மூதாட்டியான ஔவையாருக்கு ஒன்றும் புரியாமல் திகைத்தார். "நாவற் பழத்தில் சுடும்பழம், சுடாதபழம் என்று உண்டோ அப்பா?" என்று அம்மையார் சொன்னார். உடனே சிறுவன் கனிந்த பழங் களாகப் பறித்துக் கீழேபோட்டான். மண் ணில் விழுந்து நசுங்கியதால் அவைகளில் மண் ஒட்டிக்கொண்டது. அவைகளைப் பொறுக்கி ஔவையார் மண் போவதற்கா வாயால் ஊதினார். மரத்தின்மேலிருந்த சிறு வன் கலகல என்று சிரித்து, "தாயே! பழம் சுடுகிறதால்தானே ஊதிச் சாப்பிடுகிறீர்கள்" என்று கூறினான். நல்லிசைப் புலமை மெல் லியாரான ஔவையார் தன் அறியாமைக்கு வருந்தினார். இடைச் சிறுவனிடம் தாம் தோல்வியடைந்து விட்டோமே என்று எண் ணிக் கலங்கினார். அவ்வளவில் இடைச்சிறுன் மறைந்தான். முருகப்பெருமான் தன் சுய உருவத்தில் ஔவையார் முன் தோன்றிக் காட்சியளித்து மறைந்தான். தம்மை வலிந்து ஆட்கொண்ட தமிழ்த் தெய்வத்தைப் புகழ்ந்து பாடினார் அம்மையார். இக்கதையே இங்கு விழாவாக, இன்பந்தரும் காட்சியாக நடத்துகின்றனர். "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற பழமொழியின் உண்மை இக்கதையால் அறிந்துகொள்கி றோம்.

குமரகிரியை நோக்கினால் ஏறக்குறைய பழனிமலைத் தோற்றமாக இருக்கிறது. படிக் கட்டுகளும் அவ்வாறே யமைந்துள்ளன. படி கள் ஏறுகிற இடத்தின் ஒருபுறம் 'தியான நிலையம்' ஒன்று கட்டப்பெற்றிருக்கிறது. அங்கு காசிசுவாமிகள் என்ற துறவியார் இருக் கிறார். சில சத்திரங்களும் இருக்கின்றன. படிகள் தொடங்குமிடத்தில் இரண்டு சமா திக்கோயில்கள் இருக்கின்றன. இவை இக் கோயிலைக் கட்ட காரணமாக இருந்த கருப் ண்ண சுவாமிகள், அவர் மனைவியார் வள்ளி யம்மையார் இவர்களுக்காக எழுப்பப்பெற் றவை.

கருப்பண்ண சுவாமிகளின் வரலாற்றை ஒரு சிறிது அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். சேலம் நகரைச்சேர்ந்த அம்மாப் பேட்டையில் மாரியப்ப முதலியார் சின்னம் மாள் என்ற இருவருக்கும் ஒரே ஆண் மக வாய்ப் பிறந்தார் கருப்பண்ணன். குழந்தை பிறந்த ஒன்பதாவது மாதமே தந்தையார் வீட்டைவிட்டு வெளியேறி, தலயாத்திரை யாகப் போய்விட்டார். தாயார் பராமரிப்பில் வளர்ந்தார் கருப்பண்ணன். மணப்பருவம் அடைந்தார். வள்ளியம்மையாரை அவருக் குத் திருமணம் செய்வித்தனர். இவர்களுக்கு ஆறு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன. இல்லற வாழ்வில் சதா தெய்வசிந்தனையுடன் வாழ்ந்து வந்தார் கருப்பண்ணன். பக்கத்து வீட்டில் காஞ்சி புரம் ஏகாம்பர முதலியார் என்பவர் ஏற் பாடு செய்த சமயச் சொற்பொழிவுகளையெல் லாம் கேட்டு வந்த கருப்பண்ணனுக்கு பக்தி ஞான வைராக்கியம் மிகுந்தது. அவ்வாறிருக் கும்கால் காளி உபாசனை செய்யும் பிராமண சந்நியாசி ஒருவர், தாய்தந்தையர்க்கு ஒரே மகனாகவும் அங்கலட்சணமும் உடைய கருப் பண்ணரைக் காளிக்குப் பலியிட எண்ணம் கொண்டார். இவருடன் பழகிவரும்போது ஒருநாள் கருப்பண்ணரை அழைத்து சந்நி யாசி ஏரியில் ஒரு குழிவெட்டச் சொல்லி அதில் ஒரு யந்திரத்தை வைக்கச்சொன்னார். கருப்பண்ணரும் குழியில் இறங்கினார். "கருப்பண்ணன் என் அடியான். அவனால் பல அருட்பணிகள் நடைபெற இருக்கிறது. அவனைப் பலியிட்டால் உனக்கு ஆபத்து" என்று காளிதேவியின் கடுங்குரல் எச்சரித் தது. சந்நியாசியும் கருப்பண்ணரைக் குழியி னின்றும் ஏறிவரச் சொல்லி அவர் அடிகளில் வீழ்ந்து வணங்கி தான் செய்ய இருந்ததைச் சொல்லி மன்னிப்பு கேட்டார். பிறகு கருப் பண்ணரும் மனை, மனைவி, மக்கள் முதலிய வற்றைத் துறந்து குமரகிரிக்குச் சென்றார். கொண்டலாம்பட்டி பூசாரி இவரை வரவேற் றார். பின்னர் கருப்பண்ண சுவாமி பழனியை அடைந்தார். மலையடிவாரத்தில் அன்னம் தண்ணீரின்றிக் கடுந்தவம் புரிந்தார். முரு கன் ஒரு கிழவன்போல் தோன்றி "குமரகிரி யில் என் பாதஅடையாளங்கள் உள்ள இடத்தில் என்னைப் பிரதிஷ்டை செய்து திருப்பணி செய். இதோ ஒரு லங்கோடு" எனச் சொல்லிக்கொடுத்தருளி மறைந்தார். சேலத்திற்குத் திரும்பியகருப்பண்ண சுவாமி கள் பழுதுபட்டிருந்த சுகவனேசர் தேரைப் புதுப்பித்துத் தேர்த்திருவிழா நடத்தினார். பின்னர் குமரகிரி தண்டாயுதபாணியைப் பிர திஷ்டை செய்து கோயில் திருப்பணியைத் தொடங்கினார். கடைக்குக்கடை, வீட்டுக்கு

வீடு சென்று பொருள் திரட்டி மலைக்கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வித்தார். தனி ஒருவராகவே பெருமுயற்சி செய்து கட்டியதற்கு இப்பெரியாரின் திடவைராக்கிய சித்தம்தான் காரணம். அவர் செய்த திருப்பணியைத் தொடர்ந்து இன்னும் பல அன்பர்கள் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள்; இன்னும் செய்ய இருக்கிறார்கள். படிகள் நடுவே மண்டபங்களும், மேலே பெரியதொரு கல்யாண கூடமும் அதற்கு மேலே ஞான தண்டாயுதபாணியின் திருக்கோயிலும் அமைந்திருக்கின்றன. இளந்துறவிக் கோலத்தில் கா[illegible]ளிக்கும் குமரக்கடவுளின் திருவுருவம் எழில் நலம் சார்ந்தது. அவன் சந்நிதியில் உயிர்ச்சேவல் ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. கோயில் பட்டர் நிலையாக மலைமீதே இருக்கிறார். இங்கு வெள்ளிக்கிழமை, சஷ்டி, கிருத்திகை, அமாவாசை முதலிய நாட்களில் மக்கள் திரளாக வந்து, வழிபட்டுத் தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகின்றனர். பங்குனி உத்திரத்தில் பத்து நாட்கள் பிரம்மோற்சவம் வெகு சிறப்பாக அன்பர்களால் நடத்தப்பெறுகின்றது.

"ஸ்ரீ குமரகிரித் தலவரலாறும் தலப் பதிகமும்" என்ற நூலை, சுவாமி ஜோதி வளையாபதிசித்தர், ஆலம்பாளையம் திரு. ஆ. அரங்கநாதன், கவிஞர் திரு. ஆ. தியாகராஜ முதலியார் என்ற மூவரும் சேர்ந்து இயற்றியுள்ளனர். அந்நூலினின்றும் இரு பாடல்கள் பின்வருவன:—

சீதகங் கையணி நாதனுங்குலவி
தேவிகொஞ்சுசுக வுரையாடி
தேசுகண் ணேயுமை காதல்கொண்டுவகை
தீரதன் கைகொடு முகமூட
ஆதிவந்த வுலகாதி யெங்ஙனுமே
ஆரநின்றுஇரு ளதுவாகி
ஆனநொந் தவுயிர் தீதுகண்டுசிவன்
ஆளநன் நுதலின் விழியாலே
சோதிதந்துஅறு தீயிணைந்துவர
தூயவம் பிகைநொந் திடர்தீர
சூரன் வம்புகெட யாவரும்மகிழ
தோகை தன்னின்மிக நடமாடி
ஓதுகொங் குவினின் சேலநன்னகர
மோடும்ம மைகுகை பலவூர்சேர்
ஓரம்நின்றகுமரா சலம்அதனின்
யோகவங்கமமர் பெருமாளே.

சென்னியாறும் திருமுடியும்
செழுந்தண் சோதித்திருமுகமும்
சிறந்தகருணை நோக்களிக்கும்
திருக்கண்உடைய தெள்ளமுதென்
றுன்னித்துதித்து உனதடியார்
உன்றன் உண்மையுளவறிந்து
உயர்மாதவராய் பிறப்பிறப்பு
ஒழித்துஉனது ஒளிவடிவில்
மன்னியிருக்கும் வாழ்வுற்றார்
மடைமை யுடைய அடியேன் நின்
மலர்த்தாள் வண்மையறியாது
மயங்கியிருந்தேன் என்செய்வேன்
கன்னிமலைமான் ஈன்றெடுத்த
கண்ணே கவின்சூழ் குமரகிரி
கருதியமர்ந்த கந்தாஎன்
கவலைதீர்ப்ப தெந்நாளோ,

திருவாய்மூர்:—தியாகராஜ சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 1—5—62 முதல் 21—5—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

ஆழ்வார்திருநகரி:—ஆதிநாதராழ்வார் கோயிலில் நம்மாழ்வார் திருஅவதார விழா 8—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

அரியக்குடி:—சீனிவாச வேங்கடேசர் கோயிலில் பிரம்மோற்சவம் 11—5—62 முதல் 23—5—62 வரை நடைபெற்றது.

பழூர்:—விசுவநாதசுவாமி கோயிலில் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 6—5—62 நடைபெற்றது.

காட்டுப்பரூர்:—ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 12—5—62 முதல் 21—5—62 வரை நடைபெற்றது.

காரைக்குடி: கொப்புடையநாயகி அம்மன் கோயிலில் செவ்வாய் உற்சவம் 8-5-62 முதல் 17-5-62 வரை நடைபெற்றது.

தனியூர் புனுகீசுவரசுவாமி கோயில்

பூமேவு தூயவனு மாயவனுந் தொழுதெழவெண்
　　பொடியே கொள்வேந்
தூமேவு விரையெனவே யுரையெனவே தாக
　　மமுன் சொற்றும்வேறு
பாமேவு விதங்கொடுவா னனியூரிற்
　　றனியூரிற் பரவோர் பூசை
மாமேவு பேரன்புண் முழுகீசர் புழுகீசர்
　　மலர்த்தாள் போற்றி

—*தனியூர்ப்புராணம்.*

உலகிலுள்ள எண்பத்துநான்கு இலட்சம் உயிர் வகைகளையும் படைத்து அவைகளுடன் கலந்து நிற்கின்றான் இறைவன். ஞானசம்பந்தப் பெருந்தகையார் திருவீழிமிழலைத் தேவாரத்தில் "உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிரைசேரப்படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்" எனத் திருவாய் மலர்ந்தருளுகிறார். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன்கோயில்" என்ற திருவாக்கும் இறைவன் எல்லா உயிர்களிலும் நிறைந்து நிற்கும் சர்வவியாபகத் தன்மையையும் விளக்கி நிற்கிறது. அம்மட்டோ! இறைவன் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை யாதொரு பேதமின்றிக் கருணை காட்டுகின்றான். தன்னை வந்தடையும் ஊர்வன, பறப்பனவாகிய விலங்குகள் பறவைகட்கும் அவனுடைய அருள்வெள்ளம் சுரந்தோடும். அத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றை நம்முடைய தலபுராணங்கள் கூறுகின்றன. திருக்குற்றாலம், சீகாளத்தி, மதுரை திருவானைக்கா இவ்விடங்களில் யானையும், திருநல்லூரில் சிங்கமும், அயவந்தி (சாத்தமங்கை)யில் குதிரையும், கருவூர், திருவாவடுதுறை, பட்டீச்சரம், திருவாமாத்தூர் இப்பதிகளில் பசுவும், திருவையாற்றில் ஏறும், சிவபுரத்தில் பன்றியும், தென்குரங்காடுதுறை, வடகுரங்காடுதுறை, குரங்கணின் முட்டம், குரக்குக்கா, குரக்குத்தளி, வாலிகண்டபுரம் இவைகளில் குரங்கும், சீகாளத்தி, திருப்பாம்புரம் இவற்றில் பாம்பும், திருச்சேலூரில் மீனும், திருமணஞ்சேரியில் ஆமையும், திருந்துதேவன்குடியில் நண்டும், ஸ்ரீசைலத்தில் வண்டும், திருச்சிற்றேமம், ஈங்கோய்மலை இத்தலங்களில் ஈயும், திருப்பாதிரிப்புலியூரில் முயலும், திருஎறும்பியூரில் எறும்பும், ஊற்றத்தூரில் தவளையும், திருநாரையூர், மதுரை இவ்விடங்களில் நாரையும், வலிவலம், மதுரை இவற்றில் கருங்குருவியும், சிறுகுடியில் கருடனும், குரங்கணின் முட்டத்தில் அணிலும், காகமும் இறைவனை வணங்கிப் பேறுபெற்றன.

இதேபோன்று புனுகுபூனை ஒன்று இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றது தனியூர் என்ற தலத்தில். இப்பதி பாடல்பெற்ற திருமயிலாடுதுறையென்னும் மாயூரத்தின் ஒரு பகுதியாகிய கூறைநாடேயாகும். கூறைநாடு சேலைகள் நெசவுக்குப் புகழ்பெற்ற இடம். பெரிய ஊர்களாய் இருப்பவற்றைத் தனியூர் என்று கோயில் கல்வெட்டுக்களில் காணலாம். மாயூரநாதர் கோயிலுக்கு மேற்கே முக்கால் கல் தொலைவில் தனியூர் இருக்கிறது. மாயூரம் இருப்புப்பாதை சந்திப்பிலிருந்து கிழக்கே முக்கால்கல் தூரத்திலிருக்கிறது. கோயில் மேற்குநோக்கியிருக்கிறது. ஐந்து நிலைக்கோபுரமொன்று கோயில் வாயிலை அணிசெய்து நிற்கின்றது. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. கோபுரவாயிலைத் தாண்டி உள்ளே நுழைந்ததும் வடபுறம் தெற்குநோக்கி வசந்தமண்டபம் இருக்கின்றது. தென்புறம் கிழக்குநோக்கி நிர்த்தன விநாயகர், சகஸ்ரலிங்கம், சனீசுவரர் சந்நிதிகள் உள்ளன. இறைவன் சந்நிதிக்கு முன்னால் தெற்குநோக்கி அம்பாள் சந்நிதியிருக்கிறது. அம்பிகையின் திருநாமம் சாந்தநாயகி என்பது. அந்த சந்நிதியைக் கடந்து இரண்டாவது வாயில்வழியேசென்று உட்பிரகாரம் அடையலாம். நேரில் மூலஸ்தானத்தில் சிவலிங்கமூர்த்தி மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். அவருடைய திருப்பெயர்கள் புனுகீசுவரசுவாமி புனுகீசுவரமுடையார், புழுகீசர் என்பன. புனுகு, புழுகு இவை புனுகுபூனையைக் குறிக்கும். புனுகுபூனை இவ்விறைவனைப் பூசித்துப் பேறுபெற்றதால் சிவபெருமானுக்கு இத்தலத்தில் இப்பெயர் ஏற்பட்டது. மேற்கு உட்பிரகாரத்தில் விநாயகர், உற்சவமூர்த்திகள், முருகன், கஜலட்சுமி இவர்கள் சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் நடராஜ

ஜர், சண்டேசுரர் சந்நிதிகளும், மேற்குப் பிரகாரத்தில் பைரவர், சூரியன், கிழகுமரர் இவர்களுடைய சந்நிதிகளும், தெற்குப் பிரகாரத்தில் அறுபத்துமூவர் சந்நிதியும், நேசநாயனுர் தனிச் சந்நிதியும் உள்ளன. அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவரான நேசநாயனுர் அவதரித்த திருப்பதி காம்பிலிநகரம் என்று பெரியபுராணம் கூறுகிறது. ஆந்திர நாட்டிலுள்ள காம்பிலி என்ற ஊரில் அந் நாயனுருக்குக் கோயில் முதலிய எதுவும் இல்லையென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கூறைநாட்டுத் தனியூரில் சேலை நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைச் சாலியர் என்றழைக்கின்றனர். நேசநாயனுரும் சாலியர் (அறுவையர்) குலத்தினராதலின் சாலியர்கள் நிறைந்து வாழும் தனியூர்க் கோயிலில் அவருக்குத் தனிச்சந்நிதி ஏற்பட்டதுபோலும்.

இத்தல விநாயகர் வரதவிநாயகர். தல விருட்சம் பாரிசாதம் அல்லது பவளமல்லிகை. தீர்த்தம் சிவதீர்த்தம் என்ற மந்தாகினி தீர்த்தம் திருக்குளமாகத் தெற்குப் பிரகார மதிலுக்கு வெளிப்புறமிருக்கிறது. கோயிலுக்குள்ளிருந்தே செல்ல வாயிலுண்டு. சித்திரா பருவத்தில் தீர்த்தவாரி உற்சவம் உண்டு. நாலுகால பூசை நாடோறும் நிகழ்கிறது. இக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் தனியூர்ச்சிவனடியார் திருக்கூட்டத்தினரால் வார வழிபாடு நடைபெறுகிறது. ஆண்டுதோறும் புரட்டாசி முதல் ஞாயிற்றுக்கிழமை சிவபூசை மகாநாடும் நடக்கின்றது.

தனியூர்ப்புராணம் என்ற தலபுராணத்தை மகாவித்துவான் மினுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியுள்ளார்கள். 1907--ல் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் பதிப்பித்திருக்கிருர். திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், நைமிசவனப்படலம், தலவிசேடப் படலம், தீர்த்த விசேடப்படலம், மூர்த்தி விசேடப்படலம், புழுகேசப்படலம், சிவாலய தரிசனவிதிப்படலம் என்ற எட்டுப் படலங்களை யுடையது; 202 பாடல்கள் உள்ளன. தலத்தின் பெயர் தனியூர், பாரிசாதவனம், புழுகேசம் என்று கூறப்படுகிறது. பாடல்கள் சொல்நயம், பொருள்நயம் செறிந்து விளங்குவன. திருநாட்டுப் படலத்தில் பொதுவளம் கூறும்போது,

> பொலிதரு கவேர மேலோன்
> புத்திரி பொலிதலானும்
> மலிதரு காவினுளும்
> வேரிவார்ந் தொழுகலானும்
> ஒலிதரு புனலைக்காவு
> மேரிகளுடைமை யானும்
> நலிதர லொழியகா
> வேரிநாடென நவில்வர்சான்ருேர்

என்பதில் காவேரி என்ற பெயர் ஏற்பட்டதின் காரணத்தைக் கூறும்போது அச்சொல்லையே பிரித்து அழகுபட அமைத்திருப்பது கண்டுமகிழத்தக்கது. [கா - சோலை. வேரி – தேன் காவும் - சுமக்கும்]. உழவு முதலியவற்றை,

> உழுபவரோதை யெங்குமுறுவளம்
> பொலியத் தெய்வந்
> தொழுபவரோதை யெங்குந்
> தொக்கநென் முளைகள்வீசி
> எழுபவரோதை யெங்கு
> மின்புனறகவிற் பாய்த்திக்
> கெழுபவரோதை யெங்குங்
> கிளர்புகழ்ச் சோழநாட்டில்

என்ற பாடலில் கூறியுள்ளது, சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறியிருக்கும் "உழவரோதை மதகோதை உடைநீரோதை" என்ற பாடலை நினைவுக்குக் கொண்டுவருகின்றது. பறவைகள் விலங்குகள் இறைவனை வழிபட்ட தலங்களை அழகாக எடுத்துக்கூறியிருக்கிருர்கள் பிள்ளையவர்கள், புனுகுபூனை வழிபட்டதை யறிந்த சோழமன்னன் இறைவனுக்குக் கோயிலை எழுப்பினுன் என்று இத்தல புராணம் கூறுகின்றது. கோபுர வாயிலின் தென்புறம் புனுகுபூனை சிவலிங்கப்பெருமானை வழிபடுவதுபோன்ற உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

> நிலவுபுழு கீசர்கலப் பினுக்கேற்ப மணத்தவெளி
> நிகிழ்ச்சி யானே
> பலவுயிரும் புரந்தருளு மதற்கேற்ப மணத்தவகப்
> பண்பி ஞனே
> குலவுமிரு பொருட்பெயர் கொண்டனையெனவா
> னேர்பரவக் குளிர்பூஞ்சோலை
> கலவுதனி யூரமருஞ் சாந்தநாயகி மலர்த்தாள்
> கருதி வாழ்வாம்.

—தனியூர்ப் புராணம்

ஸ்ரீரங்கநாதசுவாமி வகையரு தேவஸ்தானம்

ஸ்ரீரங்கம்.

அறிவிப்பு

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் நிதி நிலைமையை விருத்தி செய்வதற்காகவும் ஸேவார்த்திகளின் சௌகரியத்தை முன்னிட்டும் 1-7-1962 முதல் சில மாறுதல்கள் ஏற்படுத்த இருக்கிறது.

முக்கியமாக பூஜா நேரங்கள் போக சேவா காலங்களை, ஏறக்குறைய இரு பகுதிகளாகப்பிரித்து ஒரு பகுதியில் தர்மசேவையும் மறுபகுதியில் ஒரு சிறு கட்டணத்தின் பேரில் சேவையும் நிர்ணயித்திருக்கிறது.

1. பூஜா காலங்கள்

1. காலை	7—00 - 8—30	பொங்கல் (காலை சந்தி)
2. பகல்	11—30 - 12—30	பெரியவசரம் (உச்சிக்காலம்)
3. மாலை	5—30 - 6—30	க்ஷீரான்னம் (சாயரக்ஷை)
4. இரவு	8—30 - 9—15	செலவுசம்பா—அரவணை (அர்த்த ஜாமம்)

2. ஸேவா காலங்கள்

அ. தர்ம ஸேவை

1. காலை	6—30 - 7—30	விஸ்வரூபம்
2. காலை	10—30 - 11—30	
3. பகல்	12—30 - 1—30	
4. மாலை	4—30 - 5—30	
5. இரவு	7—30 - 8—30	

ஆக ஐந்து மணி நேரங்கள்.

ஆ. கட்டண ஸேவை

நேரம்			கட்டணம்
1. காலை	8—30	10—00	தலா 0—25 ந.பை.
2. பகல்	2—30	3—30	தலா 0—50 ,,
3. மாலை	3—30	4—30	தலா 0—25 ,,
4. மாலை	6--30	7—30	தலா 0—25 ,,

ஆக நாலரை மணி நேரங்கள்

குறிப்பு : பிற்பகல் 1-30 முதல் 2-30 வரை சாதாரணமாக இடைவேளை.

அர்ச்சனைகள்

கட்டண ஸேவை காலங்களில்தான் அர்ச்சனை செய்யப்படும். 25 ந: பை. கட்டண ஸேவை காலங்களில் அஷ்டோத்திர அர்ச்சனைகளும், 50 ந.பை. கட்டணஸேவை காலத்தில் ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் செய்யப்படும். சந்நிதியில் வசதியாக நிற்கும் ஸேவார்த்திகள் அனைவர்களுடைய அர்ச்சனை சாமான்கள், சீட்டுகள் இவைகளை வாங்கிக்கொண்டு ஒரே அர்ச்சனையாக செய்யப்படும். தர்மசேவை காலங்களில் அர்ச்சனை கிடையாது.

இலட்சார்ச்சனை செய்ய விரும்புகிறவர்கள் முன் அறிவிப்பின்பேரில் இடை ஓய்வு வேளை காலத்தில் செய்யலாம்,

அர்ச்சனை விகிதங்கள்

அஷ்டோத்திரம்	0·75
ஸஹஸ்ரநாமம்	2·50
இலட்சார்ச்சனை	100·00

வருஷாந்திர அர்ச்சனை அஷ்டோத்திரத்துக்கு தேவஸ்தான பங்கு

அர்ச்சனை ஒன்றுக்கு தேவஸ்தான பங்கு	0·15 ந.பை.
ஸஹஸ்ரநாமத்துக்கு தேவஸ்தான பங்கு அர்ச்சனை ஒன்றுக்கு	0·50 ந.பை.

திருமஞ்சனங்களுக்கு விகிதம் இரட்டிப்பு ஆகச்செய்து இருக்கிறது. கற்பூரஹாரத்தி விகிதம் 0·25 ந.பை. எல்லா சேவை காலங்களிலும் உண்டு. ஒரு அர்ச்சனை டிக்கட்டுக்கு 2 (இரண்டு) நபர்கள் அனுமதிக்கப்படும். வருஷாந்திர அர்ச்சனைக்கு ஒரு நபர்தான் அனுமதிக்கப்படும்.

உத்சவ நாட்களில், ஷ்டி சேவை காலங்களில் முன் அறிவிப்புடன் மாற்றப்படும்.

ஸ்ரீரங்கநாதஸ்வாமி மூலவர் சந்நிதியில் விசேஷ அமைப்பினால் பத்து சேவார்த்திகளுக்குமேல் ஒரு சமயத்தில் சேவை செய்ய முடிவதில்லை. எல்லா சமயங்களிலும் அர்ச்சனைகள் அனுமதிப்பதில் தவக்கம் ஏற்படுகிறது. கடைசியாக தேவஸ்தானத்தின் வருமானத்தை, அத்துடன் சம்பந்தப்பட்ட உள்துறை சிப்பந்திகளின் வருமானத்தையும்கூட, அதிகரிப்பது அவசியமாய் இருக்கிறது. இக்காரணங்களுக்காகவே இப்புதிய திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பைக்கோருகிறோம்.

ஸ்ரீரங்கம்
11—5—1962

தர்மகர்த்தாக்கள் உத்தரவுப்படி
பி. கே. வைத்யநாதன்,
எக்ஸிகியூடிவ் ஆபீஸர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்: வைத்தியநாத சுவாமி கோயிலில் வைகாசி பிரம்மோற்சவம் 9-5-62 முதல் 19-5-62 வரை நடைபெற்றது

மதுரை: கூடலழகர் கோயிலில் பிரம்மோற்சவம் 30-4-62 முதல் 10-5-62 வரை நடைபெற்றது.

காஞ்சிபுரம்: சுப்பிரமணிய சுவாமியின் சுபகிருது ஆண்டு வைகாசி விசாக தீர்த்த மகோற்சவம் 9-5-62 முதல் 24-5-62 வரை நடைபெற்றது.

பூண்டி: புஷ்பவனேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9-5-62 முதல் 21-5-62 வரை நடைபெற்றது.

ஏர்வாடி:—திருவழுதீசுவரர் கோயிலில் வைகாசித் திருவிழா 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

திருமோகூர்:—காளமேகப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 10-5-62 முதல் 21—5—62 வரை நடைபெற்றது.

சென்னை:—சென்னை மல்லீசுவரர் சென்னகேசவப்பெருமாள் கோயில்களில் வசந்த உற்சவம் முறையே 10—5—62 முதல் 19—5—62 வரையிலும், 23—5—62 முதல் 29—5—62 வரையிலும் நடைபெற்றது.

பூவனூர்:—சதுரங்கவல்லபநாதசுவாமி கோயிலில் வைசாக பிரம்மோற்சவம் 11—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

விருத்தகிரி:—விருத்தகிரீசுவரர் கோயிலில் வசந்த மகோற்சவம் 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

சிவஞானபோதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

மூன்றும் சூத்திரம்

பின்வரும் கருத்துக்கள் முதல் இரண்டு சூத்திரங்களால் பெறப்பட்டவை:—உலகத்தைத் தொழிற்படுத்தி நடாத்தும் முதல்வன் ஒருவன் உளன்; உயிர்கள் மூலமலத்தால் அறிவிழந்து நிற்றலின், அவற்றை அம்மலப் பிணிப்பினின்று விடுவித்தற்காக பிறப் பிறப்புக்களிற் செலுத்துகின்றுன் முதல்வன்; உயிர்கள் தாம் செய்யும் இருவினைகளுக்கு ஏற்றபடி இடம் மாறியும், உடம்பு மாறியும், அறிவு திரிந்தும் பிறப்பு நிலையிற் சுழலும். உலகுயிர்களைத் தொழிற்படுத்தும்போது, முதல்வன் தானும் தன் சத்தியும் எனத் தாதான்மியத்தான் (ஒருமையின் இருமை உடையனுய்) இருதிறப்பட்டு நின்று, எல்லாவற்றையும் தன்பேர் ஆற்றல் நிறைவில் அகப்படுத்தி, அவையேயாய், வேருய், உடனுய் நிற்பன்.

முதற்பொருளின் உண்மை இங்ஙனம் அண்டத்தின் வைத்து (காணப்பட்ட உலகைக்காட்டி) உணர்த்தப்பட்டது. இனி மூன்றும் நான்காம் சூத்திரங்களால் ஆன்மாவின் உண்மையும் இயல்பும் பிண்டத்தின் வைத்து (உடம்பில் நிகழும் நிகழ்ச்சியைக் காட்டி) உணர்த்தப்படும்:—

"உள(து) இல தென்றலின்,
எனதுடல் என்றலின்,
ஐம்புலன், ஒடுக்கம்
அறிதலின், கண்படில்
உண்டிவினை இன்மையின்,
உணர்த்த உணர்தலின்,
மாயா இயந்திர
தனுவினுள் ஆன்மா"

என்பது மூன்றும் சூத்திரம்.

உடம்பின் கண் நிகழும் அறிவு செயல்களுக்கு வினைமுதலாய், யான் என்னும் உணர்வுக்கு விடயமாய் உள்ள பொருள் ஆன்மா எனப்படும்.

இவ்வான்மாவை இன்னது எனத் தெளியப்புகுந்தோர், அதைப்பற்றிப் பலவகை முடிபுகளை உடையராயினர். உடம்பு, ஐம்பொறி முதலியவற்றுள் யாதொன்றனையும் 'யான்' எனத்துணியக்கூடாமையின், ஆன்மா சூனியம் என்றனர், ஒரு சாரார்; யான் என்னும் உணர்வு உடம்பகத்தன்றி விளங்காமையின், உடம்பே ஆன்மா எனக் கொண்டனர் மற்றொரு சாரார்; வேறு சிலர் உடம்பின்கண் நின்று சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவற்றை அறிவன மெய்வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளே ஆதலால், அவற்றையே ஆன்மா என்றனர்; பொறி வாயிலாகப்பெற்ற புலன் உணர்வுகளைப்பற்றி நிச்சயித்து இணைத்து உணர்பவை உள்ளத்தின் கூறுகளாகிய மனம்புத்தி ஆங்காரம் சித்தம் ஆகலின், அவற்றையே ஆன்மா என அமையும் என்றனர் சிலர்; நனவிற்போலக் கனவின்கண் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதல் உள்ளது; அதற்கு அந்நிலையில் சூக்குமபூதமும் மனம் புத்தி ஆங்காரம் என்னும் கருவிகளும் சேர்ந்து கூடிய சூக்கும உடம்பு உண்டு; அச் சூக்கும உடம்பையே ஆன்மா என்றல் அமையும்; அதற்கு வேருக ஓர் ஆன்மா உண்டெனக் கொள்ளுதல் மிகையெனும் குற்றமாம் என்றனர் மற்றும் சிலர்; நனவு, கனவு, உறக்கம் என்னும் நிலைகளில் பிராணவாயுவின் இயக்கம் உள்ளது; அஃது உயிர் எனப் பெயர் பெறுதலானும், உயிர்ப்பு இல்வழி உயிர் போயிற்று எனக்கொள்வது வழக்கமாக இருத்தலானும் பிராணவாயுவையே ஆன்மா எனக்கொள்வர் இன்னும் சிலர்; "பிரஞ்ஞானம் பிரஹ்ம" எனவும், "ஏகனே ஆன்மா" எனவும் வேதங்கூறுதலின், பிரஹ்மமே ஆன்மா, வேறன்று என்பர் சங்கரர் முதலாயினர்; நமக்கு உள்ள உடம்பு கரணம் என்பவற்றில் யாதேனும் ஒன்று குறையினும் உணர்வு நிகழவில்லை ஆதலால், கருவிகள் எல்லாவற்றின் கூட்டமே ஆன்மா என்றனர் புத்தரில் ஒரு சாரார்.

இங்ஙனம் எழுந்த எண்வகைக் கொள்கைகளில் அந்தக் கரணங்களோ ஆன்மா என்

னும் கொள்கை நான்காஞ் சூத்திரத்தில் மறுக்கப்படுதலின், ஏனைய ஏழு கொள்கைகளும் இச்சூத்திரத்தால் ஏதுக்கள் காட்டி மறுக்கப்படுகின்றன. அவற்றை அதிகரணங்களாக வைத்து விளக்குதல் பற்றியே சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு இனிது உணரப் படுதலின், வேறு இங்குப் பிண்டப் பொழிப்புத் தரப்படவில்லை.

முதல் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி:—"உளது இல தென்றலின் ஆன்மா"

(ஆ) வார்த்திகம்:—ஈண்டு இல தென்றலின் ஆன்மா உளது என்றது, எவற்றையும் அன்றன்றெனவிட்டு ஆன்மா இலதென நிற்பதுஉளதாதலின், அதுவே அவ்வான்மாவாம்.

[இது சூத்திரப் பகுதியின் பொழிப்புரை: பின்வருவனவும் அது.]

(இ) தன்னாற் கூறப்படும் பொருள்:—ஆன்மாவை இல்லை (சொல்லொணாதது) என்பார் ஆராய்ச்சியின்றி அங்ஙனங் கூறுர்; உடம்பு முதலியவற்றை உற்றுநோக்கி இஃது ஆன்மா அன்று, இஃது ஆன்மா அன்று எனக்கழித்து, முடிவில் ஆன்மா எனக் கூறுவதற்கு ஒன்றையும் காணாமைபற்றியே ஆன்மா இலது எனத் துணிவர்: இங்ஙனம் ஆராய்ந்து துணியும் அறிவு அப்பொருள்களுக்கு வேறாகஉள்ளது ஆதலின், அவ்வறிவே ஆன்மாவாம்.

2. ஆன்மா உளதோ இலதோ என்பது ஐயப்பாடு.

3. பூருவபக்கம்:—ஆன்மா உள்ளதும் அன்று, இல்லதும் அன்று; உளதிலதுமன்று; வேறுமன்று: இங்ஙனம் கூறுவோர் சூனியான்மவாதிகள் (பாழ்ங் கொள்கையினர்) எனப்படுவர்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:—உடல் பொறிபுலன் முதலிய அனைத்தின்கண்ணும் அது அது தானே எனும்படி நின்று, பின், 'நான் யார்?' என ஆராயப் புகும்போது அவற்றை 'இது நானன்று, இதுநானன்று' எனக்கழித்து, இங்ஙனம் இன்னதென அறியவாராமையின் ஆன்மாவாவது பாழே என நிச்சயஞ்செய்யும் அறிவு உண்டன்றே? அதுவே ஆன்மா எனக் கொள்ளத்தக்கது. அவ்வறிவையும் இன்றெனப் பேசின், அப்பேச்சு "யான் ஊமை" எனவோ, "என் தாய் மலடி" எனவோ ஒருவன் கூறுவதை ஒக்கும்.

இனி, அவ்வறிவைக் கழிக்கப்பட்ட உடல் பொறி முதலியவற்றுள் ஒன்று எனக் கொள்ளலாகாதோ எனின், ஆகாது ஏன்? உடல் பொறி முதலியவை கண்ணுக்குப் பொருள்களைக் காட்டும் கண்ணாடியைப் போல உடனிருந்து உனக்கு அறிவை விளக்குவன; அவை நின்னாற் சாரப்பட்ட மாயை காரியப்பொருள்கள்; ஆதலால் நீ அவற்றுள் ஒன்றாவாய் அல்லை. இனி, நீ முதல்வனும் அல்லை; ஏன்? முதல்வனுக்கு மாயையால் ஆகக்கடவது ஒன்றும் இல்லை; அவன்தானே எல்லாம் அறிந்து செய்யவல்லவன் ஆதலால் மாயைக்கு மேம்பட்டவன் (தற்பரம்). நீ மாயைக்கும் முதல்வனுக்கும் வேறாக உள்ள தனிப்பொருள் ஆவாய்.

அன்றன் றெனநின் றனைத்தும்விட்
டஞ்செழுத்தாய்
நின்றென் றுள(து) அதுவே நீ:அனைத்தும்
நின்றின்று
தர்ப்பணம்போற் காட்டலாற் சார்மாயை
நீ அல்லை;
தற்பரமும் அல்லை தனி.

குறிப்பு: தர்ப்பணம்—கண்ணாடி (lens) அஞ்செழுத்து-பிரணவ கலைகளாகிய அ,உ, ம, விந்து, நாதம்; நமக்கு அறிவு இவற்றாற் செலுத்தப்பட்டு விளங்கும் என்பது நான்காம் சூத்திரத்துக் கூறப்படும்; இஃது உரைத்தும் என்னும் உத்தி. தற்பரம்—அதற்கு மேம்பட்டது-தத்-அது, மாயை; பரம்—மேம்பட்டது, முதற்பொருள்.

இரண்டாம் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி: எனதுடல் என்றலின் ஆன்மா உளது.

(ஆ) வார்த்திகம்:—இனி, எனதுடல் என்றலின் ஆன்மா உளதென்றது, என்பதி, என்மனை என்றாற்போல என்கை, என்கால் என நிற்பது உளதாகலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

(இ) 1. தன்னாற் கூறப்படும் பொருள்:—என்பதி, என் மனை என்னும் பேச்சு, 'யான்' பதிக்கும் மனைக்கும் வேறுதல்

பற்றியே உள்ளதாகின்றது; யான் வேறு, என் பதியும் வேறே. இவ்வாறே எனதுடல் என்னும் வழக்கு இருத்தலின், யான் என்னும் உணர்வுக்கு விடயமாகிய ஆன்மா உடலுக்கு வேறாக உள்ளது. இங்கு உடல் என்றது காணப்படும் பருவுடலை.

2. ஐயப்பாடு:—ஆன்மா பருவுடம்பு தானோ, அன்றி அவ்வுடம்பிற்கு வேறோ?

3. பிறர் கூறும் பக்கம்:—யான் என்னும் உணர்வு உடம்பின்கண் அன்றி உண்டாகவில்லை; யான் பருத்தேன், சிறுத்தேன் என வழங்கும்போது உடம்பையே யான் எனக் குறிக்கின்றோம்; எனது உடல் என உடம்பைத் தனக்கு வேறாகக்காணும் வழக்கு உள்ளதே எனின், இராகுவின்தலை என்றாற்போல அவ்வழக்கைக் கொள்ளுதல்வேண்டும். இராகுவிற்குத் தலையின் வேறாக உறுப்பு இல்லை. ஆதலால், இராகுவின்தலை என்னும் போது அங்குத் தொக்கு உள்ள ஆறன் உருபு ஒன்றியற்கிழமையைத்தான் காட்டும்; அஃதாவது, இராகுவாகிய தலை என்னும் பொருளையே தரும். இங்ஙனம் உடம்பே யான் என்னும் உணர்வுக்கு விடயமாதலின், உடம்பே ஆன்மாவாம்; இங்ஙனம் கூறுவோர் தேகான்மவாதிகள் எனப்படுவர்; இவர் உலகாயதருள் ஒரு சாரார்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:—

யான் பருத்தேன், யான் கரியேன் என்றாற்போல உடம்பின் குணங்களை உயிரின் மேல் ஏற்றி வழங்கக்காணினும், யான் உடம்பு, யான் கை, யான் கால் என வழங்குவார் இல்லை; உடம்பையும் அதன் உறுப்புக்களையும் என் உடம்பு, என் கை, என் கால் எனவே வழங்குதலைக் காண்கின்றோம். இராகுவின்தலை என்பது அருகிய வழக்கேயன்றிப் பெரும்பான்மை வழக்கன்று.

இக்காரணங்களால் ஆன்மா உடம்பிற்கு வேறு என்பது புலனாம்; உறங்கும் போது உடம்பின்மேல் அரவு ஏறிச் சென்றாலும் அதனை அஃது அறிவதில்லை; இறந்த போதும் உடம்பு அறிவின்றிப் பிணம் எனக் கிடத்தலைக் காண்கின்றோம். செல்வத்தில் மிகுந்த பற்றுடையார் தம் செல்வத்தை எனது என்று வழங்கும்போது தற்கிழமைப் பொருளில் வழங்குவோராகவே கொள்ளப்படுவர்; ஏனெனின், அவர் செல்வத்தை உயிராகவே கொள்வர், செல்வத்தை இழக்க நேரின் இராமனைப் பிரிந்து உயிர் நீத்த தயரதனைப்போல, உயிரை நீப்பர். அறநூலின் துணிபு உணர்ந்தோர் அவர்க்குச் செல்வம் வேறு எனப் பலவகையானும் தெளிவித்தால் தான் தெளிவர். அவரைப்போன்று, உனக்கு வேறாகிய உடம்பை நீ எனவே எண்ணி, எனது உடல் என்னும் போதும் என் உயிர் என்றாற்போல வேறு படுத்து உணராது கூறிவரும் நீ, அஃது உனக்கு வேறாதலை நுணுகி உணர்ந்து, ஆன்மா உடம்பிற்கு வேறாதலைத் தெளிக.

மூன்றாம் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி:—'ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது'.

(ஆ) வார்த்திகம்:—இனி, ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது என்றது, ஐம்புலனாகிய சத்தப்பரிச ரூபரசகந்தங்களை இந்திரியங்கள் ஒன்றறிந்தது ஒன்றறியாமையின், இவ்வைந்தினையும் ஐம்பயனும் அறிவது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

(இ) 1. தன்னாற் கூறப்படும் பொருள்:- ஐம்பொறிகளுள் ஒவ்வொன்று புலனையே அறியும். ஆயின், ஐம்புலனையும் ஐம்பொறி வாயிலாகத் தனித்தனி அறிந்து, அவற்றை இணைத்து உணரும் உணர்வே யான்என்னும் உணர்வாம்; ஆதலின், அங்ஙனம் அவற்றை இணைத்து உணரும் ஆன்மா அவ்வைம்பொறிகளுக்கும் வேறேயாம்.

2, 3, 4: ஐயப்பாடு, பூருவபக்கம், மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு என்னும் மூன்றும் மேலை வாக்கியத்தாலே எளிதின் உணரப்படுதலின், அவை வேறு கூறப்படவில்லை. இங்குப் பூருவபக்கமாவது இந்திரியான்மவாதம்; உலகாயத வகைகளுள் ஒன்று.

நான்காம் அதிகரணம்

(அ) சூத்திரப்பகுதி: 'ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' [குறிப்பு:—ஒடுக்கம்- ஐம்பொறிகளும் ஒடுங்கி நிற்கும் கனவு; ஆண்டு நிகழ்ந்தவற்றை ஒடுக்கம் என்றார். கனவின்கண் நிகழ்ந்தவற்றை அப்படியே அறியாமல், நனவின்கண் மயங்கியறிதலின், அங்ஙனம் அறியும் ஆன்மா கனவுடலுக்கு வேறு என்பது கருத்து.]

(ஆ) வார்த்திகம்:—இனி, ஒடுக்க மறிதலின் ஆன்மா உளதென்றது, நனவின்கட் கனவுகண்டாம் என்றும் கண்டிலம் என்றும் நிற்பதுளதாகலின் அதுவே அவ்வான்மாவாம் என்றது.

(இ) 1. கனவின்கண் கண்டவற்றை நனவின்கண் மயங்கி அறிதலின், அம்மயக்கத்திற்குக் காரணம் சரிடத்தும் உடம்பாய்ப் பொருந்துவன வேறு வேறு உள்ளன என்பது பெறப்படும். படவே, ஆன்மா நனவின்கண் உடம்பாகிய பருவுடம்பின் வேறாயினாற் போல, கனவின்கண் உடம்பாகிய நுண்ணுடம்பினும் வேறே.

2. ஐயப்பாடு: கனவுணர்வு நிலையே ஆன்மாவோ; அன்றி ஆண்டுப் பருவுடம்பைப்போன்றதொரு நுண்ணுடம்பு உளதாக, அவ்வுடம்பினும் வேறோ?

3. பிறர் கூறும் பக்கம்:—ஐம்பொறிகளினும் வேறாய் உள்ளது கனவுணர்வு நிலையே ஆகும்; அதனையே ஆன்மா என அமையும். அதனை நுண் உடல் (சூக்கும தேகம்) என வேறு பெயரிட்டு வழங்கினும், அது புறத்து நிகழாது அகத்தே நின்று ஐம்பொறிகளைப் புறத்திற் செலுத்தி அறியும். ஆகலின், அதற்கு வேறாக ஆன்மா உண்டு எனல் பொருத்தம் அன்று.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத்துணிபு:

கனவு நிலைக்கண் உள்ள உணர்வே ஆன்மா ஆயின், கனவை நீத்து நனவின்கண் வரும்போது அக்கனவைத் தெளிய உணர்தல் வேண்டும்; அவ்வாறு உணர்வதில்லை; கண்ட கனவை மறத்தலும் வேறுபட நினைத்தலும் உள்ளன. இன்னும் கனவை எய்திய உயிர் உறக்க நிலையை எய்தி ஐம்புலன் பற்றிய உணர்வை முற்றிலும் இழந்து நிற்றலையும் காண்கின்றோம். ஆகலின், உயிர் நனவின்கண் பருவுடலைப்பற்றி நின்று புறத்து விடயங்களைக் கண்டு வந்தாற்போல, கனவின்கண் வேறோர் உடம்பு கொண்டு வேறொரு வகையாற் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து விளையாடிப் பின் அவ்வுடலை விட்டு மேற்செல்லும் என்றலே உள் நோக்குத்தற்சோதனை நெறிக்கண் விளங்கும் உண்மைக்குப் பொருத்தம் ஆகும். உடல் வேறுபாடு இருத்தல் பற்றியே அறிவில் திரிவு ஏற்படுகின்றது என்பது பொருந்துவதாக உள்ளது. உறக்கத்தின்கண் நுண் உடம்பையும்விட்டு உயிர் அடங்கும் எனக் கொள்க.

இதனால் நனவின்கண் பருவுடம்பையும் அதன்கண் உள்ள ஐம்பொறிகளையும் பற்றி நின்று புறத்துவிடயங்களை உணர்ந்து வந்தாற்போல, கனவின்கண் சூக்கும பூதங்களான் ஆய நுண் உடம்பையும் அதன் கண் கரணங்களாய் அமைந்துள்ள மனம் புத்தி ஆங்காரம் என்பவற்றைப்பற்றிச் சூக்கும விடயங்களைக் கண்டு பற்றி நிச்சயித்துப் பல் கால் எழுந்திருந்து சிந்தித்து இன்பத்துன்ப மயக்க நுகர்ச்சிஉறும் என்பது காண்க. ஆன்மாப் பருவுடம்பின் வேறாயதுபோல நுண்ணுடம்பினும் வேறேயாம் என்பதும் இனிது விளங்கும். (தொடரும்)

பூவனூர்: புஷ்பவனேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9–5-62 முதல் 20-5-62 வரை நடைபெற்றது.

வைத்தீஸ்வரன் கோயில்: வைத்தியநாத சுவாமி கோயிலில் வசந்தோற்சவம் 10-5-62 முதல் 19-5-62 வரை நடைபெற்றது.

திருக்களர்; வீரசேகரஞானதேசிக சுவாமிகளின் 51-ஆம் ஆண்டு குருபூஜை மகோற்சவம் 19–5–62 ல் நடைபெற்றது.

தருமபுர ஆதீன ஸ்தாபகர்: ஸ்ரீகுருஞானசம்பந்தர் குருபூஜைத்திருநாள் 25—5 –62ல் தருமபுர ஆதீன மாடலயம், தருமபுரம், தருமபுர ஆதீனம் இராஜன் கட்டளை மடம் திருவாரூர், ஸ்ரீமீனாட்சிசுந்தரேசுவரர் தேவஸ்தானம், மதுரை, தருமபுர ஆதீன மடம், திருநெல்வேலி, தருமபுர ஆதீன மடம், ஸ்ரீகாசிமடத்துத்தெரு, சிதம்பரம், ஸ்ரீகுருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர், தருமபுர ஆதின மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம், சென்னை, தருமபுர ஆதீன மடம், சிவசைலம், ஸ்ரீகாசி குமாரசாமி மடம், (கேதாரக்கட்டம்) திருப்பனந்தாள் காசிமடத்துக்குச் சொந்தமான மடம், இராமேசுவரம் முதலிய இடங்களில் நடைபெற்றது.

செய்திகள்

காஞ்சிபுரம்: வைகுண்டப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 25—5—62 முதல் 9—6—62வரை நடைபெறும்.

செம்பொன்னுர் கோயில்: சுவர்ணபுரீசுவரசுவாமி கோயில் ஸௌர மகோற்சவம் 20—4—62முதல் 1—5—62வரை நடைபெற்றது.

களக்காடு:—சத்தியவாகீசுவரர் கோயிலில் வைகாசிப் பெருந்திருவிழா 10-5-62 முதல் 18-5-62 வரை நடைபெற்றது.

பண்ணைமாநகர்:—இராமசுவாமி கோயிலில் வசந்தோற்சவம் 14-5-62 முதல் 18-5-62 வரை நடைபெற்றது.

கோபிவீரபாண்டி:—விசுவேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 12-5-62 முதல் 22-5-62 வரை நடைபெற்றது.

சிதம்பரம்:—நடராஜப் பெருமான் திருக்கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்தில் பெரிய புராணப் பிரசங்கம் 29-5-62 முதல் 6-6-62 வரை நடைபெறும்.

சிதம்பரம்:—தில்லையம்மனுக்கு பிரம்மோற்சவம் 24-5-62 முதல் 4-6-62 வரை நடைபெற்றது.

கச்சனம்:—கைச்சின்னேசுவரப் பெருமான் கோயிலில் வைசாக ஏகதின உற்சவம் 18-5-62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

காளையார் கோயில்:—சோமேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 13—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

திருத்தினைநகர்:—சிவக்கொழுந்தீசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

கோடியக்காடு குழகர்கோயில்:—சுப்பிரமணியப் பெருமானுக்கு வைசாகப் பெருவிழா 8-5-62 முதல் 21—5—62 வரை நடைபெற்றது.

தேவூர்:—தேவபுரீசுவரசுவாமி கோயிலில் ஏகதின உற்சவம் 18—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

திருவாழ்கொளிபுத்தூர்:—மாணிக்கவண்ண சுவாமி கோயிலில் வைசாக ஏகதின மகோற்சவம் 19—5—62 ல் நடைபெற்றது.

பாலத்தளி:—துர்க்காம்பிகா கோயிலில் வைகாசி விசாக வசந்த மகோற்சவம் 9-5-62 முதல் 19-5-62 வரை நடைபெற்றது.

உடையார் கோயில்.—கரவிந்தேசுவர சுவாமி வைசாகப்பெருவிழா 19-5-62 ல் நடைபெற்றது.

திருமயிலை:—திருவள்ளுவ நாயனர் திருக்கோயிலில் திருவள்ளுவர் திருநாள் 20-5-62 முதல் 23-5-62 வரை நடைபெற்றது.

திருநாங்கூர்:—திருச்செம்பொன்செய் கோயிலில் மகாசம்ப்ரோக்ஷணம் 21-5-62 முதல் 24-5-62 வரை நடைபெற்றது.

இஞ்சிக்குடி:—பார்வதீசுவரசுவாமி கோயிலில் வைசாக உற்சவம் 18—5—62 முதல் 20-5-62 வரை நடைபெற்றது.

சிந்தாமணி:—சொக்கலிங்க சுவாமி கோயிலில் வைகாசிப் பெருந்திருவிழா 10-5-62 முதல் 19-5-62 வரை நடைபெற்றது.

அம்பாசமுத்திரம்:—காசிபநாதசுவாமி கோயிலில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 30—5—62 முதல் 7—6—62 வரை நடைபெறும்.

காஞ்சிபுரம்:—கச்சபேசுவரசுவாமி கோயிலில் உத்திரப்பெருவிழா 12-4-62 முதல் 24—4—62 வரை நடைபெற்றது.

சேலம்:—சுகவனேசுவரசுவாமி கோயிலில் சுபகிருது ஆண்டு பிரம்மோற்சவம் 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

மன்னார்குடி:—சொக்கநாதர் கோயிலில் பிரம்மோற்சவம் 10—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

கொசுவலசு:—பகவான் கோயிலில் அக்னிநட்சத்திர திருவிழா 15—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

சுசீந்திரம்:—தாணுமாலயமூர்த்தி கோயிலில் சித்திரைத் திருவிழா 4—5—62முதல் 13—5—62 வரை நடைபெற்றது. இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

இடும்பாவனம்;—சத்குணநாதர் கோயிலில் வைகாசி விசாகப்பெருவிழா 8—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

பிரமதேசம்:—கைலாசநாதர் கோயிலில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 9—7—62ல் நடைபெறும்.

குமாரவயலூர்:—சுப்பிரமணியசுவாமி கோயிலில் வைகாசி பிரம்மோற்சவம் 9—5—62 முதல் 21—5—62 வரை நடைபெற்றது.

மதுரை:—திருவாதவூர்—திருமறைநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9-5-62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

திருவதிகை:—திருநாவுக்கரசு சுவாமிகள் மகோற்சவம் 20—4—62 முதல் 29—4—62 வரை நடைபெற்றது.

திருவதிகை:—வீரட்டானேசுவரர் கோயிலில் இரதோற்சவம் 9—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

வடலூர்:—அருட்பிரகாசவள்ளலார் தெய்வ நிலையங்கள் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலையின் 95-ஆவது ஆண்டு திருவிழா 10—5—62, 24—5—62, 6—6—62 நாட்களில் நடைபெற்றது.

குளித்தலை:—நீலமேகப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 11—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

வேதாரண்யம்:—வேதாரண்யேசுவரசுவாமி கோயிலில் அகத்தியர் தரிசன—திருக்கல்யாண உற்சவம் 9—5—62, 10—5—62 நாட்களில் நடைபெற்றது.

இலஞ்சி:—குமாரசாமி கோயிலில் சித்திரைப் பெருந்திருவிழா 8—5—62 முதல் 17—5—62 வரை நடைபெற்றது.

பிக்ஷாண்டார் கோயில்:—உத்தமர் கோயிலில் பிக்ஷாடனேசுவரருக்கு பிரம்மோற்சவம் 9—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

மதுரை:—கூடலழகர் கோயிலில் வைகாசிப் பெருவிழா 11—5—62 முதல் 25-5-62 வரை நடைபெற்றது.

சேத்தூர்:—நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயிலில் வைகாசி விசாக மகோற்சவம் 9—5—62 முதல் 14—5—62 வரை நடைபெற்றது.

சின்னமனூர்:—பூலாநந்தீசுவரர் கோயிலில் சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல்., அவர்களால் 11—5—62ல் கல்யாண மண்டப அடிக்கல் நாட்டுவிக்கப்பெற்றது.

திருநாராயணபுரம்:—வேதநாராயணப் பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 17-5-62 முதல் 27—5—62 வரை நடைபெற்றது.

தாமரங்கோட்டை:—கண்டேசுவரசுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 9—5—62 முதல் 21—5—62 வரை நடைபெற்றது.

கோவில்பட்டி:—நத்தம் கைலாசநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

திருப்புகலூர்:—அக்னீசுவரசுவாமி கோயிலில் பெருந்திருவிழா 9—5—62 முதல் 22—5—62 வரை நடைபெற்றது.

திருப்புனவாயில்:—விருத்தபுரீசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 9—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

மீஞ்சூர்:—வரதராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 16—5—62 முதல் 26—5—62 வரை நடைபெற்றது.

புதுக்கோட்டை, திருவரங்குளம்:—அரங்குளநாதசுவாமி கோயிலில் வைகாசிப் பெருவிழா 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

சென்னை:—காளிகாம்பாள் கமடேசுவரர் கோயிலில் பிரம்மோற்சவம் 6—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

கும்பகோணம்:—ஆதிகும்பேசுவரசுவாமி கோயிலில் திருக்கல்யாண உற்சவம் 14—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

திருப்புன்கூர்:—சிவலோகநாதர் கோயிலில் திருமுறை விழா 20—5—62ல் நடைபெற்றது.

திருக்கண்டியூர்:—வீரட்டேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 10—5—62 முதல் 20—5—62 வரை நடைபெற்றது.

திருச்செங்கோடு:—அர்த்தநாரீசுவரர் செங்கோட்டுவேலவர், ஆதிகேசவப்பெருமாள் வைகாசி விசாகப்பெருவிழா 10—5—62 முதல் 24—5—62 வரை நடைபெற்றது.

காஞ்சிபுரம்:—சுப்பிரமணிய சுவாமியின் வைகாசி விசாக தீர்த்தப் பெருவிழா 10—4—62ல் நடைபெற்றது.

நீடாமங்கலம்:—காசிவிசுவநாதசுவாமி கோயிலில் வைசாகப் பிரம்மோற்சவம் 10—5—62முதல் 21—5—62 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

விளநகர்:—வரதராசப்பெருமாள் கோயிலில் வசந்தோற்சவம் 10—5—62 முதல் 19—5—62 வரை நடைபெற்றது.

சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு

சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய சபையில் திரு. புலவர் முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள் "திருவருட்பயன்" என்னும் சாத்திர வகுப்பு 18-5-62, 19-5-62, 20-5-62 ஆகிய மூன்று நாட்களிலும் நடத்தினார்கள்.

மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் கோவை திரு. கு. நடேச கவுண்டரவர்கள் "சிவப்பிரகாசம்" என்னும் சாத்திர வகுப்பை 31-5-62, 1-6-62, 2-6-62 மூன்று நாட்களிலும் மாலை 6-30 மணிக்கும், 3-6-62 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் துவங்கி நடத்துவார்கள்.

திருவல்லிக்கேணி பெரிய தெரு அரசடி கற்பக விநாயகர் கோயில் வசந்த மண்டபத்தில் திரு. பி. சி. சமரபுரி முதலியார் அவர்கள் "திருவருட்பயன்" என்னும் சாத்திர வகுப்பை 15-6-62, 16-6-62 இருநாட்களிலும் மாலை 6-30 மணிக்கும், 17-6-62 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் துவங்கி நடத்துவார்கள்.

தாயுமானவர் பாடல்

அருள் பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமுதே என்கண்ணே அரியவான

பொருளனைத்தும் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனிதவாழ்வே

கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துங் கருவி யாதி

இருவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்கேளே.,

[திருவருளே பழமாகப் பழுத்த பழத்தின் மதுரமே! கரும்பே! தேனே! தேவாமிர்தமே! என் கண்ணே! அருமையான மேலான எல்லாப் பொருள்களையும் அளிக்கும் முதற்பொருளே! காருணியம் நீங்காத பரிபூரணமான தனிப்பொருளே! பரிசுத்த வாழ்வே! எண்ணுதற்கரிய நினைப்பில் உள்நினைவா யிருந்து காலம், தேசம், வர்த்தமானம் இவைகளை உண்டுபண்ணி, கருவி கரணங்கள் முதலாயுள்ள இரு வினைகளையும் சேர்ப்பித்து ஆன்மகோடிகளை ஆட்டுவிக்கும் பரம்பொருளே சொல்லுகின்ற குறைமுறைகளைக் கேட்டருள்வாயாக.]

அடியவர் திருநட்சத்திரங்கள்

சுபகிருது—ஆனி

சைவம்

12உ கலிக்காம நாயனார்

22உ மாணிக்கவாசக சுவாமிகள்

23உ அமர்நீதி நாயனார்

வைணவம்

26உ பெரியாழ்வார்.



மன்னார்குடி இராஜகோபாலஸ்வாமி கோயிலில் கவர்னர் தம்பதிகள்

Edited and Published by the Commissioner, Hindu Religous and Charitable Endowments (Administration) Department, Madras-34.
Printed at Paari Achakam, 127, Broadway, Madras-1.